Registered as a Newspaper

# உதயன் சஞ்சீவி

சுடர் : 37 கதிர் : 177 | ஞாயிற்றுக்கிழமை 22 மே 2022 | வைகாசி 08 ஆம் நாள் வள்ளுவர் ஆண்டு 2053 | பக்கங்கள்: 16+08 | விலை: 60/=

முச்சந்தி முரளி



"பெற்றோல் செற்றுகளில நிக்கிற 'க்யூ'வைப் பார்த்தால் ஆயிரம் கப்பல் வந்தாலும் காணாது போல"

## 24 மணி நேர மின்சாரம் இந்த வாரம் சாத்தியம்!!

அமைச்சர் காஞ்சன தெரிவிப்பு

கொழும்பு, மே 22

நாட்டில் தடையில்லாத மின்சார விநியோகத்தை உறுதிப்படுத்தும் வகையில் மின்சார உற்பத்திக் கான எரிபொருளை முன்னுரிமை அடிப்படையில் வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக மின்வலு 15



## மாணவர்கள் மீது நேற்றும் கண்ணீர்ப்புகைக்குண்டு வீச்சு

கொழும்பில் பதற்றம்

கொழும்பு, மே 22

உயர் தேசிய டிப்ளோமா கற்கை நெறி மாணவர் ஒன்றியத்தால் நேற்றுமுன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தைத் தொடர்ந்து, கொழும்பு கோட்டை, இலங்கை வங்கி வீதியில் பொலிஸார் கண்ணீர்ப்புகை மற்றும் நீர்த்தாரைப் பிரயோகம் மேற்கொண்டனர். இதனால் அந்தப் பகுதியில் பதற்றமான சூழல் நிலவியது.

கொழும்பு - கோட்டை, உலக வர்த்தக மையைக் கட்டடத் தொகுதிக்கு அருகில், இலங்கை வங்கி மாவத் 13


## டெங்கால் யாழில் 5ஆவது உயிரிழப்பு

கொழும்புத்துறையைச் சேர்ந்த 11 வயதேயான மாணவன் சாவு!



யாழ்ப்பாணம், மே 22

யாழ்ப்பாணத்தில் 11 வயது பாடசாலை மாணவன் டெங்கால் நேற்று உயிரிழந்துள்ளான். இந்த ஆண்டில் இதுவரை 5பேர் டெங்கால் யாழ். மாவட்டத்தில் உயிரிழந் 15



## யாழ். நகரில் ஐஸ்கிறீம் கடையில் நேற்றிரவு தீவிபத்து

யாழ்ப்பாணம், மே 22

கஸ்தூரியார் வீதியில் அமைந்துள்ள 13

### நன்கொடையாளர்களிடமிருந்து

# உயிர்காக்கும் மருந்துகளைப்பெற வடக்கு ஆளுநர் பெரும் இடையூறு?

## போதனா மருத்துவமனைக்குள்ளும் மூக்கை நுழைக்கிறார்

யாழ்ப்பாணம், மே 22

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குத் தேவையான அத்தியாவசியமான – அவசரத் தேவையாகவுள்ள உயிர்காக்கும் மருந்துகளை புலம்பெயர் நன்கொடையாளர்களிடமிருந்து நேரடியாகப் பெற்றுக் கொள்வதற்கு வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா இடையூறுகளை ஏற்படுத்தியுள்ளார் என்று நம்பகரமாகத் தெரியவருகின்றது. 15

## வீதியை மறித்தால் விநியோகம் இல்லை

கொழும்பு, மே 22

வீதிகளை மறித்து எரிபொருள் நிரப்பு 13

## டீசல் கப்பல் வந்தடைவு

கொழும்பு, மே 22

இந்தியக் கடனுதவியின் கீழ், 40 ஆயிரம் மெற்றிக் தொன் 13



படம்:- ஐ. சிவசாந்தன்

### வடக்கிலும் நீள்வரிசை

## 1 லட்சத்து 40 ஆயிரம் லீற்றர் பெற்றோல் நேற்று விநியோகம்

யாழ்ப்பாணம், மே 22

யாழ்ப்பாணத்தில் நேற்றைய தினம் மாத்திரம் ஒரு லட்சத்து 40 ஆயிரம் லீற்றர் பெற்றோல் விநியோகிக்கப்பட்டுள்ளது. இதேவேளை- இன்றைய தினமும் பெற்றோல் விநியோகம் இடம்பெறும் 13

## டீசல், பெற்றோல் பதுக்கியவர் மிருசுவிலில் கைது

யாழ்ப்பாணம், மே 22

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட் 15

## 80 ஆயிரம் சிலிண்டர்கள் விநியோகம்

கொழும்பு, மே 22

80 ஆயிரம் எரிவாயு சிலிண்டர்கள் சந்தைக்கு நேற்று விநியோகிக்கப்பட்டுள்ளன. இவற்றில் 60 வீதமானவை கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளதுஎன்றுலிட்ரோ நிறுவனத் தலைவர் விஜித்த ஹேரத் தெரிவித்தார். எதிர்வரும் 5 நாள்களுக்கு சிலிண்டர்களை விநி 13

## எரிபொருள் பவுஸர் மீது சுன்னாகத்தில் தாக்குதல்

இருவர் கைது



யாழ்ப்பாணம், மே 22

சுன்னாகத்திலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு எரிபொருளை விநியோகித்து 13

## நாடு முழுவதும் இன்று சோதனை

கொழும்பு, மே 22

சட்டவிரோதமாக எரிபொருளைப் பதுக்கி 13

### ஆரியகுளம் வெசாக் விவகாரம்:

## யாழ். மாநகர சபையைக் கலைப்பதா? ஆளுநர் தீவிர ஆலோசனையில்!

ஓய்வுபெற்ற நீதிபதி தலைமையில் விரைவில் விசாரணையாம்

யாழ்ப்பாணம், மே 22

ஆரியகுளத்தில் வெசாக் தோரணங்களை அமைப்பதற்கு அனுமதி மறுத்த விவகாரம் தொடர்பில் ஓய்வுபெற்ற நீதிபதி தலைமையில் விசாரணைகளை முன்னெடுப்பதற்குவடக்கு மாகாண ஆளு 13

## ஆரியகுளத்தை வைத்து அரசியல்; வெடிக்கும் மக்கள் போராட்டம்

யாழ். மேயர் மணிவண்ணன் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், மே 22

யாழ்ப்பாண மாநகர சபையிடமிருந்து ஆரிய குளத்தைப் பறித்தெடுப்பதற்கு முயற்சிக்கப்பட்டால் அது மேற்கொள்ளப்பட்டால் அது மக்களிடத்தில் அமைதியின்மையை 13

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பஸிலிடமே அதிகாரம்!

அநுர தெரிவிப்பு

கொழும்பு, மே 22

அதிகாரம் தொடர்ந்தும் பஸில் ராஜபக்சவிடமே உள்ளது என்று தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டை - அங்குனு கொலபெலஸ்ஸ பகுதியில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நாட்டின் சகல தரப்பினரும் இன,மத பேதமின்றி அரசாங்கத்துக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்துள்ளனர்.

ஆனால், நாடாளுமன்றில் கிடைத்த ஆசனத்தைக் கொண்டு ரணில் விக்கிரமசிங்க பிரதமராகியுள்ளார். அவர் ராஜபக்ச குடும்பத்தினரை பாதுகாப்பதற்காகவே பிரதமராகியுள்ளார்.

பஸில் ராஜபக்ச உள்ளிட்ட தரப்பினர் வழங்கும் ஆதரவின் காரணமாகவே பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு நாடாளுமன்றில் பெரும்பான்மையுள்ளது. பஸில் ராஜபக்ச ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்க மறுப்பாராயின் மீண்டும் பிரதமர் பதவியிழக்க நேரிடும் - என்றார். (எ-இ)

# அவசரகாலச் சட்டம் செயலிழந்தது!

**கொழும்பு, மே 22**

**ஜனாதிபதியால், அவரது தற்துணிவு அதிகாரங்களைப் பயன்படுத்தி நடைமுறைப்படுத்தப்பட்ட அவசரகாலச் சட்டம் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நள்ளிரவு முதல் செயலிழந்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.**

நாட்டின் நிலைமையைக் கருத்திற்கொண்டு இந்த மாதம் ஆரம்பத்தில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச அவசரகாலச் சட்டத்தை அறிவித்தார். ஜனாதிபதியால் அறிவிக்கப்படும் அவசரகாலச் சட்டத்தில் ஆயுள் இரண்டு வாரங்கள்வரை மட்டுமே நீடிக்கும். அதைத்தாண்டி அந்தச் சட்டம் நீடிக்க வேண்டுமாயின், அவசரகாலச் சட்டம் அறிவிக்கப்பட்ட திகதியில் இருந்து 14 நாள்களுக்குள் நாடாளுமன்றத்தைக்கூட்டி அதன் அனுமதியைப் பெற வேண்டும். ஆனால், அந்த அனுமதி இம்முறை அறிவிக்கப்பட்ட அவசரகாலச் சட்டத்துக்குப் பெறப்படவில்லை. ஆதலால், அது நேற்றுமுன்தினத்துடன் காலாவதியானது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)



## கொழும்பு வன்முறைகள்: 1,348 பேர் கைது

கொழும்பு, மே 22.

மே 9 மற்றும் 10ஆம் திகதிகளில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் ஆயிரத்து 348 பேர் இதுவரை கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் 128 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும், 99 பேர் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டு பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்றும், 68 பேர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவங்கள் தொடர்பாக மொத்தம் 638 பேர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என்றும், 836 முறைப்பாடுகள் பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்றுள்ளதுடன், மேலதிக விசாரணைகளை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)

## சி.ஐ.டிக்குச் செல்வதை தவிர்க்கும் ஜோன்ஸ்டன்

கொழும்பு, மே 22

காலிமுகத்திடல் மற்றும் அலரி மாளிகை அருகில் கடந்த 9 ஆம் திகதி நடந்த வன்முறை சம்பவங்கள் தொடர்பாக முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவிடம் மாத்திரமே வாக்குமூலத்தைப் பெற வேண்டியுள்ளது என்று குற்றவியல் விசாரணைத் திணைக்களம் தெரிவித்துள்ளது. குற்றவியல் விசாரணைத் திணைக்களத்தில் முன்னிலையாகி வாக்குமூலத்தை வழங்க வேண்டும் என்று ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவுக்கு அறிவிக்கப்பட்டுள்ள போதிலும் சுகவீனம் காரணமாக அவர் திணைக்களத்துக்கு வரவில்லை எனக் கூறப்படுகிறது.

வாக்குமூலங்கள் பெறப்பட்டுள்ள நிலையில், அவை தொடர்பாக மேலதிக விசாரணைகளை மேற்கொள்ள சட்டமா அதிபரின் ஆலோசனை எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

சட்டமா அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள வாக்குமூல அறிக்கைகள் ஆறு சிரேஷ்ட அதிகாரிகளைக் கொண்ட குழுவிடம் வழங்கப்பட்டு, அவர்கள் அவற்றை ஆராய்ந்த பின்னர், சட்டமா அதிபருக்கு அறிவிப்பார்கள். பின்னர் சட்டமா அதிபர் அடுத்த கட்ட விசாரணைகளை நடத்துவது தொடர்பான ஆலோசனைகளை குற்றவியல் விசாரணைத் திணைக்களத்துக்கு வழங்குவார் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

## அரசியலில் இருந்து ஒதுங்கும் அலி சப்ரி

கொழும்பு, மே 22

இனி ஒருபோதும் நாடாளுமன்றத்தில் பணியாற்றப் போவதில்லை என முன்னாள் அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

நான் இந்த நாடாளுமன்றத்தை மீண்டும் பார்க்கமாட்டேன். எனக்கு இது தேவையில்லை. இவ்வாறான சூழலைக் காண நாங்கள் நாடாளுமன்றத்துக்குள் நுழையவில்லை. இனி ஒருபோதும் இங்கு திரும்பி வரமாட்டேன். நான் வாதம் செய்ய வரவில்லை. மக்களின் முன்னேற்றத்துக்காகப் பாடுபடவே வந்தேன். பொதுப் பணத்தை ஒருபோதும் அபகரிக்கவோ, திருடவோ இல்லை- என்றார். (எ-இ)

## மே 9 கலவரம் தொடர்பில் வாக்குமூலம் வழங்கத் தயார்

மஹிந்த தெரிவிப்பு

கொழும்பு, மே 22

காலிமுகத்திடல் ஆர்ப்பாட்டத்தில் கடந்த 9ஆம் திகதி இடம்பெற்ற வன்முறைகள் தொடர்பில் வாக்குமூலம் வழங்கத் தயார் என்று முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார். அரசாங்கத்துக்கு எதிரான ஆர்ப்பாட்டத்தில் ஏற்பட்ட வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் சிங்கள ஊடகமொன்றுக்குக் கருத்துத்தெரிவிக்கும் போதே வன்முறைச் சம்பவம் தொடர்பில் பொலிஸாரிடம் எந்த நேரத்திலும் வாக்குமூலம் வழங்குவதற்குத் தயார் என்று மஹிந்த தெரிவித்தார். (ம-14-இ)



# இரு மாதங்களுக்கு முன்னரே திட்டம் தீட்டிய ராஜபக்சக்கள்

நளின் எம்.பி. வெளியிட்ட தகவல்

கொழும்பு, மே 22

அரசியல் குடும்பங்களுக்கு இடையில் இரண்டு மாதங்களுக்கு முன்னரே அதிகாரப் பரிமாற்றம் தொடர்பாகப் பேச்சு நடந்துள்ளது.

ராஜபக்ச குடும்பத்தினர் தாம் இலகுவாக வெளியேறும் வழிகளை உருவாக்கி இருந்தனர்- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி தொடர்பாகப் புலனாய்வுப் பிரிவினர் முன்கூட்டியே எதிர்வுகூறியிருந்தனர். எதிர்காலத்தில் சமூக எழுச்சி உருவாகும் எனப் புலனாய்வுத் தகவல்கள் சுட்டிக் காட்டி இருந்தன. அதனால் ராஜபக்ச குடும்பம் தாம் இலகுவாக வெளியேறும் வழியை உருவாக்க, எப்போதும் தமது குடும்பத்தைப் பாதுகாத்த ஒருவரை நியமிக்க வேண்டும் என்பதால் ரணில் விக்கிரமசிங்கவை பிரதமராக நியமித்தனர். ரணில் விக்ரமசிங்கவுக்கு பலத்தை வழங்க ஹரின் பெர்னாண்டோ மற்றும் மனுஷ நாணயக்கார ஆகியோர் சென்றுள்ளனர். ஐக்கிய தேசியக் கட்சியின் கீழ் போட்டியிட்டு வெற்றிபெற்ற மனுஷ நாணயக்கார கடந்த 2011ஆம் ஆண்டு 18ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தை ஆதரிப்பதற்காக அன்றைய மஹிந்த ராஜபக்ச அரசாங்கத்தில் இணைந்தார். ஹரின் பற்றி ஒரு கவலை இருந்தாலும் மனுஷ நாணயக்கார பற்றி அதிகமாக எண்ணத் தோன்றவில்லை- என்றார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இலங்கை மக்களின் அவாக்களை நன்கறிந்துள்ள

சம்பத் வங்கி

அவர்களின் விருப்பத்தை மீண்டும் வென்றுள்ளது



இலங்கையில் அதிக விருப்பத்திற்குரிய வங்கி

மற்றும்

இலங்கையில் பெறுமதிமிக்க முதல் பத்து வணிகநாமங்களில் ஒன்று

பிராண்ட் பைனான்ஸினால் தெரிவு செய்யப்பட்டு LMD இனால் வழங்கப்பட்டது

0112 30 30 50 www.sampath.lk

சம்பத் வங்கி
எதிர்காலத்தின் முன்னோடிகள்

மின்சாரம் துண்டித்து விட்டதா? இதோ இதற்கான தீர்வை நாங்கள் பெற்றுத் தருகிறோம்.

மின்சாரம் இருக்கும் போது பற்றி சார்ஜர் மூலம் மின்சாரம் சேமித்து மின்சாரம் இல்லாத நேரத்தில் சேமித்து வைத்த மின்சாரத்தை பற்றி மூலம் 12V 220V INVERTER மின்சாரம் பயன்படுத்த முடியும். 10 மணித்தியாலம் LIGHT, FAN, TV , RADIO, CCTV CAMERA மின்சாரப் பொருள்கள் பாவிக்க முடியும்.

J.J GROUP
No:603, K.K.S.Road Jaffna.
021 222 3854, 077 555 5100




## ஆரியகுளத்தில் புதிதாக படகுச் சவாரி அறிமுகம்

யாழ்ப்பாணம், மே 22

ஆரியகுளத்துக்கு வருகைதரும் மக்களைக் கவரும் விதமாக படகுச் சவாரி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இதன் ஆரம்ப நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது. யாழ். மாநகரசபை முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண்ணன் கலந்துகொண்டு சவாரியை ஆரம்பித்து வைத்தார். நிகழ்வில் மாநகர ஆணையாளர் த.ஜெயசீலன், மாநகர சபை உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ச-27)

## மன்னிப்பின் மகத்துவத்தை தந்தை கற்பித்திருக்கிறார்!

### பேரறிவாளன் விடுதலையில் ராகுல் காந்தி உருக்கம்

புதுடில்லி, மே 22



**இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் கைதுசெய்யப்பட்டிருந்த பேரறிவாளன் கடந்த 18ஆம் திகதியன்று விடுவிக்கப்பட்ட நிலையில், ராஜீவ் காந்தியின் மகனான ராகுல் காந்தி, "மன்னிப்பின் மகத்துவத்தை என் தந்தை எனக்குக் கற்பித்திருக்கின்றார்" என்று தெரிவித்துள்ளார்.**

1991 ஆம் ஆண்டு மே மாதம் 21 ஆம் திகதி தமிழகத்தில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி கொல்லப்பட்டார். நேற்று ராஜீவ் காந்தியின் நினைவுதினம். ராஜீவ் காந்தியின் கொலை வழக்கில் கைதுசெய்யப்பட்டவர்களில் பேரறிவாளன் சுமார் 30 ஆண்டுகளின் பின்னர் கடந்த 18ஆம் திகதி விடுவிக்கப்பட்டார். இதனால், இந்த விடுதலைக்கு எதிராக ராஜீவ் காந்தியின் நினைவு நாளான நேற்றையதினம் ஏதும் அசம்பாவிதங்கள் ஏற்படலாம் என்று கருதப்பட்ட நிலையில், இவ்வாறாகக் கருத்துத் தெரிவித்துள்ளார் ராகுல் காந்தி.

என் தந்தை தொலைநோக்குப் பார்வை கொண்ட தலைவர். அவருடைய கொள்கைகள் நவீன இந்தியாவை செதுக்கின. அவர் அன்பானவர். இரக்கமுள்ளவர். எனக்கும், பிரியங்காவுக்கும் ஓர் அற்புதமான தந்தை. எங்களுக்கு அவர் மன்னிப்பு, அனுதாபத்தின் மதிப்பைக் கற்றுக் கொடுத்திருக்கிறார். நான் அவரை இழந்து தவிக்கிறேன். அவருடன் கழித்த காலங்களை நினைவு கூர்கிறேன் என்று மேலும் தெரிவித்துள்ளார் ராகுல் காந்தி. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். சிறைச்சாலையில் காத்திருப்போர் மண்டபம்

'சிறைக்கைதிகளும் மனிதர்களே' என்ற கருப்பொருளில் யாழ்ப்பாண சிறைச்சாலையில் உள்ளவர்களைப் பார்வையிட வருவோருக்கு வசதிகளை மேம்படுத்தும் நோக்கில் 'காத்திருப்போர் மண்டபம்' ஒன்று யாழ்ப்பாண சிறைச்சாலை முன்றிலில் நேற்றுத் திறக்கப்பட்டது.

யாழ்ப்பாண சிறைச்சாலையில் 'காத்திருப்போர் மண்டபம்' ஒன்று அமைத்துத் தருமாறு சிறைச்சாலை அத்தியட்சகரால் யாழ். போதனா மருத்துவமனைப் பணிப்பாளரிடம் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கமைய அறக்கட்டளை நிதியம் ஒன்றின் நிதிப்பங்களிப்பில் இந்த மண்டபம் அமைக்கப்பட்டது. அத்துடன் நிகழ்வில் சமாதானத்தை வலியுறுத்தி சமாதானப் புறாவும் பறக்க விடப்பட்டது. (ம-14,26)

# கண்ணீர் அஞ்சலி



சாவகச்சேரி சிவன்கோவிலடியை பிறப்பிடமாகவும் கோணாவில் கிளிநொச்சியை வதிவிடமாகவும் கொண்ட

அமரர்

**சுஜீபன் சுலக்சனா (றோகினி)**

மண்ணில் 04.08.1983
விண்ணில் 20.05.2022

அன்னாரின் ஆத்மா சாந்திக்காக எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

குடும்பத்தினர்.

தாளையம்பதி வீதி, நுணாவில் மத்தி, சாவகச்சேரி

## தென்னிலங்கையிலும்

# முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் இன ஒற்றுமைக்கான அறிகுறியே

## ஞானப்பிரகாசம் அடிகளார் தெரிவிப்பு

மன்னார், மே 22

**தென்னிலங்கையில் இந்த வருடம் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் கடைப்பிடிக்கப்பட்டமை இன ஒற்றுமைக்கான அறிகுறியே என்று தெரிவித்தார் மன்னார் பிரஜைகள் குழுத் தலைவரான அருட்பணி ஏ.ஞானப்பிரகாசம் அடிகளார்.**

பேசாலையில் நடத்தப்பட்ட நினைவேந்தல் நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எம்முடன் இணைந்து சகோதர மொழி பேசுகின்ற மக்களும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை இம்முறை நினைவு கூர்ந்துள்ளனர். முள்ளிவாய்க்கால் அவலத்தை அவர்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர். 13 ஆண்டுகளுக்கு முன்பு நடந்தேறிய துன்பியல் சம்பவம் இது. உணர்வுகள் சில சமயம் களைத்து போய் விடலாம். ஆனால் உண்மை ஒருபோதும் உறங்காது. இந்த நாட்டில் எமது உரிமை களைப் பெற்று ஒன்று பட்டு வாழ்வதற்கு பல சுமைகளைத் தாங்கியவர்களாகப் பயணித்து வருகின்றோம் - என்றார். (க-60)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



பிறப்பு 13.02.1934

இறப்பு 23.04.2022

**அமரர் நவரட்ணம் திருநாவுக்கரசு**

(முன்னாள் Booking Clerk வெலிங்டன், லிடோ படமாளிகை)

மங்காப்புகழுடன்
மலேசியாவில் பிறந்து
இலங்கையில்
கமலாதேவியை கரம்
பிடித்து இல்லற வாழ்வில்
இணைந்து குலம் தழைக்க
நன் மக்கள் செல்வங்கள்
பல பெற்று நலமுடனே
வாழ்ந்துவந்த நவரத்தினம்
திருநாவுக்கரசு
எண்ணியதெல்லாம் பெற்று
எண்பத்தெட்டாவது
வயதில் எம்பொருமான்
திருவடியை அடைந்து விட்டார்

அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

எம் அன்புத் தெய்வத்தின் பிரிவுச் செய்தி அறிந்து நேரிலும், தொலைபேசி ஊடாகவும், மலர் வளையங்கள், பதாகைகள் சாத்தியும், அஞ்சலி செலுத்திய எம் அன்புக்குரிய உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் மற்றும், அன்னாரின் இறுதி யாத்திரையில் கலந்து கொண்ட அனைவருக்கும் எமது இதயம் நெகிழ்ந்த நன்றிக் காணிக்கைகளை சமர்ப்பிக்கின்றோம்.

தொடர்பு
சுதாகர் : 077 694 8193,
071 564 4236

(CS 44725) (3.0)

குடும்பத்தினர்
மருமகன், மருமக்கள்

## இனப்படுகொலையை அங்கீகரித்த

# கனடாவின் முடிவை வரவேற்றது ரெலோ

முல்லைத்தீவு, மே 22

இறுதிப்போரின் போது தமிழர்கள் இனப்படுகொலைக்கு உள்ளாக்கப்பட்டனர் என்று கனேடிய நாடாளுமன்றம் அங்கீகரித்தமையை வரவேற்றுள்ளது ரெலோ.

இது தொடர்பில் ரெலோ அமைப்பு அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

கனடா நாடாளுமன்றம் இலங்கையில் இறுதிப்போரின்போது தமிழர்கள் இனப்படுகொலைக்கு உள்ளாக்கப்பட்டனர் என்பதை ஏற்று அங்கீகரித்துள்ளது. இலங்கையில் இனப்படுகொலை இடம்பெற்றது என்பதை அங்கீகரித்த உலகின் முதல் நாடாக கனடா மாறியுள்ளது. இதை நாம் வரவேற்கிறோம். இந்த முயற்சிக்கு பின்னணியில் இருந்த புலம்பெயர் உறவுகளுக்கு நன்றிகளையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அட்டூழியக் குற்றங்களுக்கான நீதிதேடும் போராட்டத்துக்குக் கிடைத்த அங்கீகாரத்தின் முதல் படியாக இதை நாம் கருது கிறோம்.

2009ஆம் ஆண்டு மே மாதம் முடிவடைந்த யுத்தத்தில் தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட மனித உரிமை மீறல்கள், போர்க்குற்றங்கள் மற்றும் அட்டூழியக் குற்றங்களுக்காக நீதியைக் கோரி பல வருடங்களாக எமது இனம் போராடி வருகிறது. கனேடிய நாடாளுமன்றத்தின் இந்த அங்கீகாரம் எமது முயற்சிக்கு நம்பிக்கை தருவதோடு ஊக்கம் அளிப்பதாகவும் அமைந்திருக்கிறது - என்றார். (ம)

# இந்தியாவிலிருந்து படகில் உரம், பீடி இலை கடத்தல்

## சிலாபத்தில் வைத்து முறியடிப்பு



புதுடில்லி, மே 22

இந்தியாவில் இருந்து நீர்கொழும்புக்கு சட்டவிரோதமாக உரம, பீடி இலைகள் உள்ளிட்ட பொருள்களை ஏற்றிவந்த இயந்திரப்படகு கடற்படையால் மடக்கிப் பிடிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:-

குறித்த படகின் நடமாட்டம் தொடர்பில் சந்தேகம்கொண்ட கடற்படையினர் படகைப் பின்தொடர்ந்துள்ளனர். இதையடுத்து படகு வேகமாகப் பயணித்து விபத்துக்குள்ளாகியுள்ளது. பின்னர் படகில் இருந்தவர்கள் கடற்படையால் கைதுசெய்யப்பட்டனர். அதிலிருந்த பொருள்களும் மீட்கப்பட்டன. (ம-20)

# மரத்துடன் மோதி பட்டா விபத்து

கிளிநொச்சி, மே 22

கட்டுப்பாட்டையிழந்த பட்டா வாகனம் மரத்துடன் மோதி ஏற்பட்ட விபத்தில் இருவர் காயமடைந்தனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து கிளிநொச்சி புளியம்பொக்கணைப் பகுதியில் நேற்று இடம்பெற்றது.

புதுக்குடியிருப்பிலிருந்து பரந்தன் நோக்கிப் பயணித்த பட்டா கட்டுப்பாட்டையிழந்து மரத்துடன் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டது.

விபத்தில் பட்டாவில் பயணித்த இருவர் காயமடைந்த நிலையில் தருமபுரம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். (ம-14,113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படுகொலைகள் மூலம் பெரமுன ஒருபோதும் அரசியல் செய்யாது

## சொல்கிறார் பிரசன்ன ரணதுங்க



**கொழும்பு, மே 22**

**பெரமுன, சிறிலங்கா சுதந்திரக் கட்சி என்பன படுகொலைகள் மூலம் அரசியல் செய்யும் கட்சிகள் அல்ல என அமைச்சர் பிரசன்ன ரணதுங்க நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நாடு ஜனநாயக ரீதியிலேயே முன்னெடுக்கப்படவேண்டுமே தவிர அச்சுறுத்தியோ அல்லது வேறு விதத்திலோ நாட்டை முன்னெடுத்துச் செல்வதற்கு இடமளிக்கமுடியாது.

மக்கள் கருத்துக்கு செவிசாய்க்க வேண்டும். எனினும் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டுள்ள சில ஆயிரக்கணக்கானவர்களுக்காக அரசியலமைப்பை மீறி செயற்படமுடியாது. 69 இலட்சம் மக்கள் வாக்களித்து ஜனாதிபதியை தெரிவு செய்துள்ளனர்.

கடந்த 9ஆம் திகதி நாட்டில் இடம்பெற்ற சம்பவங்களை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். குற்றவாளிகள் இனங்காணப்பட்டு அவர்களுக்கு தண்டனை வழங்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் நாம் உறுதியாகவுள்ளோம்.

சுதந்திரக் கட்சி, பெரமுன என்பன ஒருபோதும் படுகொலை மூலம் அரசியல் செய்யும் கட்சிகள் அல்ல. எனினும் ஐக்கிய தேசியக் கட்சி. ஜே.வி.பி போன்ற கட்சிகள் படுகொலை மூலம் அரசியல் நடத்திய வரலாறுகள் உள்ளன.

நாட்டின் நெருக்கடி நிலைக்கு தீர்வு காண்பதற்காக அனைவரும் இணைந்து செயற்பட வேண்டும் என்ற தீர்மானத்தில் நாம் எதிர்க்கட்சிக்கு அழைப்பு விடுத்தோம். ஆனால் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நிபந்தனைகளைப் போட்டு அதிலும் அரசியல் இலாபம் தேட முனைந்தார் - என்றார். (எ-இ)

# நெருக்கடியில் இருந்து மீட்க இராணுவத்தினரும் தயாராம்

கொழும்பு, மே 22

நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலையில் இருந்து நாட்டை மீட்க எம்மாலான சகல ஒத்துழைப்புகளையும் பெற்றுக் கொடுத்து வருகின்றோம். எமக்கான சரியான வாய்ப்பு வழங்கப்பட்டால் நாம் செய்து காட்டுவோம் இவ்வாறு இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:-

அதிகளவான பகுதிகளில் இராணுவம் விவசாயத்தில் ஈடுபடுகின்றது. அதேபோல் இராணுவத்துக்கான தேவைகளை பூர்த்திசெய்ய இராணுவம் தேசிய உற்பத்தி செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றது.

கொரோனா வைரஸ் பரவல் நிலைமைகளின் போதும் இராணுவம் பெரும் சேவையை செய்தது. தற்போதும் பல்வேறு நெருக்கடி நிலைமைகளில் இருந்து மக்களை மீட்கவும் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் நடவடிக்கை எடுத்து வருகின்றது.

நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுக்க எம்மாலான சகல வேலைத் திட்டங்களை முன்னெடுக்க முடியும், அதற்கு எமக்கான சரியான வாய்ப்பு வழங்கப்பட்டால் செய்து காட்டுவோம், எம்மால் முடியாது என்று ஒன்றுமே இல்லை. எந்த சவால்களையும் சந்திக்க நாம் தயாராக உள்ளோம் - என்றார். (எ-இ)

# ஓரிரு மாதங்களில் விலக வேண்டும் ரணில்

## *ஹிருணிகா பிரேமச்சந்திர அழுத்தம்*



கொழும்பு, மே 22

இன்னும் ஓரிரு மாதங்களில் பிரதமர் ரணில் விக்ரமசிங்க பதவிவிலக வேண்டும் அல்லது பதவியில் இருந்து நீக்கப்படுவார் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் நிலவும் நெருக்கடியும், ராஜபக்சக்களின் பாதுகாப்பின்மையும் குறையும் வரை தான் ரணில் விக்ரமசிங்க பிரதமராக நியமிக்கப்பட்டுள்ளார். பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பதவிவிலகிய பின்னர் ஜி.எல்.பீரிஸ் போன்ற ஒருவர் பிரதமராக வரவேண்டும் - என்றார். (ம-14,இ)

# பொய்யைக் கூறி மாட்டிய அருந்திக பெர்னாண்டோ

கொழும்பு, மே 22

முன்னாள் அமைச்சர் அருந்திக பெர்னாண்டோ, தாம் விமானப்படையில் விமானியாக இருந்தேன் என்று கூறியுள்ள நிலையில், அவர் எந்தக் காலகட்டத்திலும் விமானப்படையில் இருக்கவில்லை என்று விமானப்படையின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

அண்மையில் நாடாளுமன்றத்தில் கருத்துத் தெரிவித்த அருந்திக பெர்னாண்டோ, விமானப் படையில் விமானியாக இருந்தேன் என்றும், அண்மையில் இடம்பெற்ற வன்முறையில் தமது வீட்டுக்குத் தீ வைக்கப்பட்டதால் அதற்கான ஆவணங்கள் அனைத்தும் எரிந்துவிட்டன என்றும் கூறியுள்ளார்.

இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்துள்ள விமானப் படையின் பேச்சாளர் குருப் கப்டன் துசான் விஜேசிங்க, அருந்திக பெர்னாண்டோ எந்தக் காலத்திலும் விமானப்படையில் சேவையாற்றியதில்லை. அவர் விமானப்படையில் கெடட் அலுவலராகக்கூட பணியாற்றியதில்லை என்று தெரிவித்துள்ளார். (எ-இ)

# ஆர்ப்பாட்டக்காரர்களை சந்திக்க விருப்பம் வெளியிட்டார் பிரதமர்

கொழும்பு, மே 22

காலிமுகத்திடல் ஆர்ப்பாட்டக்காரர்களின் பிரதிநிதிகளை சந்திப்பதற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விருப்பம் வெளியிட்டுள்ளார் என்று அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

கோத்தா கோ ஹோம் தொடரலாம் ஆனால் ஆர்ப்பாட்டக்காரர்கள் எங்களுடன் பேச்சுக்களை மேற்கொள்ள வேண்டும். அதன்மூலமே அவர்களையும் இணைத்து நாம் தீர்வைக்காணமுடியும்.

நாடாளுமன்றக் கண்காணிப்புக் குழுவில் காலிமுகத்திடலில் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளோரின் பிரதிநிதிகள் இருவரை இணைத்துக்கொள்ள பிரதமர் திட்டமிட்டுள்ளார். நாங்கள் புதிய அரசியல் கலாசாரத்தைக் கட்டியெழுப்ப முயல்கின்றோம். ஆனால் சில ஆர்ப்பாட்டக்காரர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் 225 பேரும் பதவி விலகவேண்டும் என்று கோரிக்கை விடுக்கின்றனர் - என்றார். (ம-14,இ)

# ‘மெதமுலன்ன’ வீடும் பஸிலுக்கே சொந்தம்

கொழும்பு, மே 22

ராஜபக்சக்களின் பரம்பரை வீடு எனப்படும் ‘மெதமுலன்ன’ வீடு பஸில் ராஜபக்சவுக்கே சொந்தமானது என்று பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற வாதப்பிரதிவாதங்களின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

கடந்த 9ஆம் திகதியன்று இடம்பெற்ற வன்முறையின்போது, பொதுஜன பெரமுன நாடாளுமன்ற உறுப்பினர்களின் வீடுகள் எரியூட்டப்பட்ட போதும் பஸில் ராஜபக்சவின் வீடுகள் எவையும் பாதிக்கப்படவில்லை என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார குற்றஞ்சாட்டினார்.

அதற்குப் பதிலளிக்கும் போதே ‘ராஜபக்சக்களின் மெதமுலன்ன’ வீடும் கடந்த வன்முறையின்போது எரியூட்டப்பட்டது. அதுவும் பஸில் ராஜபக்சவுக்கு சொந்தமான வீடுதான் என்று பிரதி சபாநாயகர் சுட்டிக்காட்டினார். (ம-14,இ)

# நிலையான அரசியல் ஆட்சிக்கு புலிச்சாயம் பூசுவதற்கு முயற்சி

## *செங்கலடி பிரதேசசபை உறுப்பினர் தெரிவிப்பு*

பல்லின சமூகம் வாழும் எமது நாட்டை தங்களது நிலையான அரசியல் ஆட்சிக்காக மீண்டும் மீண்டும் புலிச்சாயம் பூசி இன முறுகலை ஏற்படுத்த முயற்சிக்கின்றனர். இவ்வாறு செங்கலடி பிரதேச சபை உறுப்பினர் வ.சுரேந்தர் ‘கோத்தா கோ கமவில்’ இடம்பெறும் போராட்டத்தில் கலந்துகொண்டு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

எமது நாடு ராஜபக்ச பரம்பரைக்கோ அல்லது ரணில் விக்கிரமசிங்க குடும்பத்துக்கோ சொந்தமானது இல்லை. இது இலங்கை மக்களுக்கானது. நாட்டை விற்கவோ வாடகைக்கு விடவோ இது அவர்களின் சொத்தல்ல.

தற்போது நாம் அடமானம் வைக்கப்பட்டவர்களாகியுள்ளோம். இதனை நாம் உணராதவரை எவ்விதமான மாற்றத்தையும் எம்மால் பெற முடியாது. அதேவேளை நாட்டில் மே 9ஆம் திகதியன்று இடம்பெற்ற கலவரத்துக்கு அரசாங்கம் பொறுப்புக் கூறியே ஆகவேண்டும்.

பல்லின சமூகம் கொண்ட எமது நாட்டை தங்களது நிலையான அரசியல் ஆட்சிக்காக மீண்டும்மீண்டும் புலிச்சாயம் பூசிப்பூசி இனமுறுகலை ஏற்படுத்தப் பார்க்கின்றார்கள். அதை ஒருபோதும் ஏற்க முடியாது - என்றார். (ம)

# அரசின் பக்கம் தாவவுள்ள சுதந்திரக் கட்சி எம்.பிக்கள்!

கொழும்பு, மே 22

நிமல் சிறிபால டி சில்வா அரசாங்கத்தில் இணைந்துகொண்டுள்ள நிலையில், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை சேர்ந்த மேலும் ஐந்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்கத்தில் இணையவுள்ளனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

மஹிந்த அமரவீர, துமிந்த திஸாநாயக்க, லசந்த அழகியவன்ன, ஜகத் புஷ்ப குமார மற்றும் சாமர சம்பத் தசநாயக்க ஆகியோரே அரசாங்கத்தில் இணையவுள்ளனர் என்று கூறப்படுகிறது.

நிமல் சிறிபால டி சில்வா அரசாங்கத்தில் இணைந்துகொண்டு, துறைமுகங்கள், கப்புல் மற்றும் விமான சேவைகள் அமைச்சராக பதவியேற்றுள்ளார். மஹிந்த அமரவீரவுக்கு அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுப் பதவி கிடைக்கும் என தெரியவருகிறது. ஏனைய நான்கு பேரில் மூன்று பேருக்கு ராஜாங்க அமைச்சுப் பதவிகள் கிடைக்க வாய்ப்புள்ளன என்று கூறப்படுகின்றது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்கத் தீர்மானித்த போதிலும் பதவிகளைப் பெற்றுக்கொள்வதில்லை என முடிவு செய்திருந்தது. இந்த நிலையில் அந்தக் கட்சியைச் சேர்ந்த மேலும் ஐந்து பேர் அரசாங்கத்தில் இணையவுள்ளனர் என்று தகவல் வெளியாகியுள்ளது. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## என்று முடியும் இந்த வரிசையுகம்?

இலங்கையில் இப்போது பெற்றோல், டீசலுக்குக் கடும் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கின்றது. மக்கள் தங்கள் அன்றாட வேலைகளை விட்டுவிட்டு வீதிகளில் வாகனங்களுடன் வரிசை கட்டி நிற்கின்றனர். மறுபுறத்தில் சமையல் எரிவாயுப் பிரச்சினையும் பூதாகரமாகி, அதற்கும் அனுமர் வால் போல வரிசைகள் நீண்டிருக்கின்றன.

நாட்டுக்கு எரிபொருள் கப்பல்களும், எரிவாயுக் கப்பல்களும் வருகின்றன என்று அமைச்சர்களும், அரசாங்கமும் நாளாந்தம் அறிக்கைகளை வெளியிடுகின்றபோதும், நிலைமையில் எந்த மாற்றத்தையும் காணமுடியவில்லை. பொருள்களுக்கான தட்டுப்பாடும் நீங்கியதாகத் தெரியவில்லை.

அரசாங்கம் கடன்களைப் பெற்று எரிபொருள், எரிவாயு, அத்தியாவசியப் பொருள்களை இயலுமானவரை இறக்குமதி செய்ய முயற்சிக்கின்றது என்பதை மறுக்க முடியாது. அவசர தேவையாகவுள்ள பொருள்களை இறக்குமதி செய்வது எந்தளவுக்கு அவசியமோ, அதே போன்று இவ்வாறான நெருக்கடியான தருணத்தில் அவற்றை மக்களுக்கு சரியான முறையில் விநியோகிப்பதும் மிக முக்கியமானது. ஆனால் இலங்கை அரசாங்கம் ஏனைய விடயங்களைப் போன்று இந்த விடயத்திலும் கையாலாகாத்தனத்தையே வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றது.

மட்டுப்படுத்தப்பட்ட அளவில் சந்தைக்கு வரும் எரிவாயு, எரிபொருள்கள் என்பவை சரியான திட்டமிடலுடன் மக்களுக்கு விநியோகிக்கப் படாமையே மக்கள் வரிசை கட்டி நிற்பதற்கான இந்த வரிசை யுகம் இன்னும் தொடர்வதற்கான பிரதான காரணம். எரிவாயுவும், எரிபொருளும் சந்தைக்கு விநியோகிக்கப்ப டுகின்றன என்று அரசாங்கம் கூறுகின்றபோதும், சாதாரண மக்கள் அவற்றைப் பெறுவது முயற்கொம்பாகவே இருக்கின்றது.


இப்போது இலங்கை மக்களின் நாளாந்தச் செயற்பாடுகளில் "வரிசையில் நிற்றல்" பிரதானமாகியிருக்கின்றது. பெற்றோல், மண்ணெண்ணெய், டீசல் முதல் அத்தியாவசிய உணவுப் பொருள்கள் வரை அனைத்தையும் பெறுவதற்கு வரிசையில் காத்திருக்க வேண்டியிருக்கின்றது. தினமும் - நாள்முழுவதும் வரிசையில் காத்திருந்தும் மக்களுக்கு அவை கிடைப்பதில்லை என்கின்றபோது, மக்கள் விரக்தியின் உச்சத்தைத் தொடுகின்றார்கள். நேற்றுமுன்தினம் திருகோணமலையில் எரிபொருளுக்காக தினம் தினம் காத்திருந்த மக்கள் ஏமாற்ற மிகுதியால் தங்களுக்குள்ளேயே காரணம் இன்றி ஒருவரை ஒருவர் தாக்கிக் கொண்டதும் இந்த விரக்தியாலேயே. மக்களின் இந்த விரக்தி ஆபத்தானது.

பல நாள்களாக வரிசையில் நிற்கும் மக்கள் கொதிப்புடனேயே இருப்பார்கள். மக்களின் கோபம் நியாயமானது என்பதையும் இந்த நிலைமைக்கு தங்களின் ஆட்சியே காரணம் என்பதையும் ஏற்றுக்கொண்டு மக்கள் மீது குறைகூறாது விநியோகங்களைச் சீராக்குவது தொடர்பாகச் சிந்திக்கவேண்டும். இப்போது எரிபொருள், எரிவாயுவுக்கு ஏற்பட்டுள்ள 'வரிசை யுகம்' இன்னும் சொற்ப காலத்தில் ஏனைய பொருள்களுக்கும் ஏற்படும் என்பது பொருளாதார நிபுணர்களின் அழுத்தமான வாதம். ஆனால் அரசாங்கமும், அரசியல்வாதிகளும் அது தொடர்பாக எந்தப் பிரக்ஞையும் இன்றி பதவிப் பேரத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள்

கட்சி அரசியலில் ஈடுபட்டுக் கொண்டிருக்காது முதலில் நெருக்கடி நிலைமையைச் சமாளிப்பதற்கான திட்டம் ஒன்றை அரசாங்கம் தயாரிக்க வேண்டும். தட்டுப்பாட்டுக்குரிய பொருள்களைச் சரியான முறையில் அனைவருக்கும் கிடைக்கக்கூடிய விதத்தில் விநியோகிப்பதற்குரிய வழிகளை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். அவ்வாறு செய்யாவிட்டால், இந்த வரிசை யுகத்துக்கு முடிவுகட்டாவிட்டால், எதிர்வரும் நாள்களில் நாட்டில் பெரும் சமூகக் கட்டமைப்புச் சீர்குலைவு ஏற்படுவதைத் தவிர்க்க முடியாது.

நாளொரு நல்வார்த்தை

"உண்மையான வாழ்க்கை வாழும் மனிதன், எல்லா உயிர்களும் தன்னுயிர் என்ற எண்ணம் கொண்டவனாக இருப்பான்" - வள்ளலார்



# ரணில் என்ற கைதியை முதலில் விடுவிக்கவேண்டும்

## சாணக்கியன் மீண்டும் சீண்டல்



**கொழும்பு, மே 22**

**பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அரசியல் கைதியாக உள்ளார் என்று நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் தெரிவித்துள்ளார்.**

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்றிய அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நான் ஏன் ரணில் விக்கிரமசிங்கவை இவ்வாறு தாக்குகின்றேன் எனத் தமிழ் பேசும் மக்கள் இன்று பார்த்துக் கொண்டிருப்பார்கள்.

ஆனால் நான் தாக்குவதற்கும் காரணம் உண்டு.

2019ஆம் ஆண்டுவரை இருந்த ரணில் விக்கிரமசிங்க வேறு. தற்போது அவர் ராஜபக்ச குடும்பத்தைக் காப்பற்றுவதற்காக ஒப்பந்தம் செய்யப்பட்டவராகக் காணப்படுகின்றார்.

அவரால் இந்த நாட்டைக் காப்பாற்ற முடியாது. அவர் இன்று ராஜபக்ச குடும்பத்தால் கைதியாக்கப்பட்டுள்ளார்.

இந்தக் கைதியை விடுதலை செய்யவேண்டும். அவர் இன்று தனி ஒரு நாடாளுமன்ற உறுப்பினராக உள்ளார். ராஜபக்ச குடும்பத்தைக் காப்பாற்றுவதற்காக பிரதமர் பதவியில் உள்ளார்- என்றார். (ஒ-இ)

# மருத்துவமனைப் பணியாளர்களுக்கு எரிபொருள் வழங்கலில் முன்னுரிமை

## மாவட்டச் செயலரிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், மே 22

மருத்துவசேவை அத்தியாவசியமான சேவையாக உள்ளமையால், மருத்துவமனைப் பணியாளர்களுக்கு எரிபொருள் வழங்குவதில் முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

யாழ். போதனா மருத்துவமனையின் பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் சி.யமுனாநந்தா, யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர் மகேசனிடம் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

யாழ். மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக எரிபொருளுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவி வருகின்றது. இதனால் பல தரப்பினரும் அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருவதுடன், பல இன்னல்களையும் எதிர்நோக்கி வருகின்றனர்.

கடந்த இரு தினங்களாக பெருமளவானோர் எரிபொருளுக்காக வரிசைகளில் காத்து நிற்கின்றனர். அதனால், மருத்துவமனைப் பணியாளர்களும் எரிபொருள் இன்மையால் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்நிலையிலேயே யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பணியாளர்களுக்கு எரிபொருள் வழங்குவதில் முன்னுரிமை அளிக்கவேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ம-20)

நாளை 23.05.2022 திங்கட்கிழமை வைகாசி 09

சுபநேரம் : 11.52 - 01.22
ராகுகாலம்: 07.22 - 08.52

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைச்சுப் பதவிக்கு பறக்கும் மொட்டுக் கட்சி எம்.பிக்கள்!

கொழும்பு, மே 22

**புதிய அமைச்சரவையில் அமைச்சுப் பதவிகளைப் பெற்றுக்கொள்வது தொடர்பாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மத்தியில் கடும் போட்டி ஆரம்பித்துள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.**

இவர்கள் ஜனாதிபதி மற்றும் பிரதமரை அடிக்கடி சந்தித்தும், பல்வேறு தரப்பினர் ஊடாகவும் தமக்கு அமைச்சுப் பதவிகளை வழங்கவேண்டும் என்று கோரிக்கை விடுத்து வருகின்றனர் என்று கூறப்படுகின்றது.

ஜனாதிபதி மற்றும் பிரதமர் உட்பட அமைச்சரவையின் எண்ணிக்கையை 25ஆகக் குறைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன் மீதமுள்ள 23 அமைச்சுக்களுக்கு ஏற்கனவே 13 பேர் அமைச்சர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

புதிய அமைச்சரவையில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கு சுமார் 10 அமைச்சுப் பொறுப்புக்கள் வழங்கப்படவுள்ளதுடன் ஏற்கனவே அந்தக் கட்சியைச் சேர்ந்த 5 பேர் அமைச்சர்களாக பதவியேற்றுள்ளனர். சுமார் 40 நாடாளுமன்ற உறுப்பினர்கள், மீதமுள்ள இந்த அமைச்சுப் பதவிகளுக்குக் கோரிக்கையை விடுத்துள்ளனர் என்று கொழும்பு வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது. (எ-இ)

## கூரைபிரித்து சங்கிலி திருட்டு

யாழ்ப்பாணம், மே 22

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கோண்டாவில் வடக்கு சரஸ்வதி சன சமூக நிலையத்துக்கு அருகிலுள்ள வீடொன்றில் அத்துமீறி நுழைந்த திருடர்கள் தங்கச்சங்கிலியை திருடிச் சென்றுள்ளனர்.

குறித்த வீட்டில் மூவர் வசித்து வருகின்ற நிலையில், அவர்கள் அனைவரும் தூக்கத்தில் இருந்தவேளையிலேயே இந்தத் திருட்டு இடம்பெற்றுள்ளது. இது தொடர்பில் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு வழங்கப்பட்டுள்ளது. பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-125)

## நிர்வாக சபைத் தெரிவு

யாழ்ப்பாணம், மே 22

கொக்குவில் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் 2022/2023 ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாக சபைத்தெரிவு அண்மையில்இடம் பெற்றது.

இதன்போது சங்கத்தின் தலைவராக பொ.கமலநாதன், செயலாளராக கா.சசிகரன், பொருளாளராக ச.பிரதாபன், உப தலைவர்களாக ம.ஞானசம்பந்தன், வி.தயாபரன், க.தேவராஜா ஆகியோரும் உப செயலாளராக கலாநிதி சீ.செல்வநாயகம், நிர்வாக சபை உறுப்பினர்களாக ப.மயூரன், இ.பிரதீபன், நா.பிரதீபன், பி.சூரியபிரகாஷ், தே.றொபேசன், ஆ.சத்தியமூர்த்தி, ந.சிவானந்தராஜா, ச.பவன், ச.சத்தியேந்திரன், தெ.சஞ்ஜீவ், க.ராகுலன், பா.பாலமகிந்தன், சு.வரதராஜேஸ்வர முதலி, ர.சிறிரமணன், ர.சந்திரநாதன், சு.திருச்செல்வம், அ.அசோக்குமார், சு.சோமேஸ்வரன், சு.அச்சுதராஜா, பு.மகேஸ்வரன் ஆகியோரும் உள்ளக் கணக்காய்வாளர்களாக த.பகீரதராஜ், ம.அசோக்குமார் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். (ம-14)

## மயங்கி வீழ்ந்து குடும்பஸ்தர் உயிரிழப்பு

சாவகச்சேரி, மே 22

சாவகச்சேரி மருத்துவமனை வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த குடும்பஸ்தர் ஒருவர் மயங்கி வீழ்ந்து உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.

வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெறுவதற்காக ரிக்கெற் பெற்று மருத்துவரிடம் செல்லும்போதே அவர் மயங்கிவீழ்ந்து உயிரிழந்துள்ளார். நாவற்குழியைச் சேர்ந்த சக்திவேல் சிவகுமார் (வயது-55) என்ற குடும்பஸ்தரே உயிரிழந்தவராவார். (ச-9)



## ஆசிரியர் அறைந்ததால் செவிப்பறையில் பாதிப்பு

*மாணவனொருவன் மருத்துவமனையில்*

யாழ்ப்பாணம், மே 22

ஆசிரியர் அறைந்ததால் செவிப்பறை பாதிப்படைந்த மாணவன் ஒருவன் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

யாழில் உள்ள பிரபல கல்லூரியின் ஆசிரியரே கடந்த செவ்வாய்க்கிழமையன்று குறித்த மாணவனை இவ்வாறு அறைந்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

மாணவன் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட நிலையில் அவரது செவிப்பறை சவ்வு பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பொலிஸ் பிரிவுக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது. (ம)

## மாட்டுவண்டில் சவாரிப்போட்டி

யாழ்ப்பாணம், மே 22

வடக்கில் இரு இடங்களில் இன்று மாட்டுவண்டில் சவாரி நடத்தப்பட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழில் வட்டுக்கோட்டை கொத்துத்துறை சவாரித் திடலில், யாழ். மாவட்ட சவாரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் பிற்பகல் ஒரு மணிக்கு மாபெரும் மாட்டுவண்டில் சவாரிப் போட்டி நடைபெற உள்ளது.

அத்துடன் முல்லைத்தீவு மாவட்ட சவாரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் விசுவமடு தொட்டியடி சவாரித் திடலிலும் இன்று பிற்பகல் ஒரு மணிக்கு அ, ஆ, இ, ஈ, உ என ஐந்து பிரிவாக சவாரிப் போட்டி இடம்பெறவுள்ளது. (ம-21)

## வீதியில் படுகாயங்களுடன் மீட்கப்பட்ட நபர் உயிரிழப்பு

கொழும்பு, மே 22

கடுவெல - மாலபே வீதியில் பிட்டுகல சந்திக்கு அருகில், வீதியோர கால்வாய்க்குள் கவிழ்ந்திருந்த காருக்குள் இருந்து பாடுகாயங்களுடன் நபரொருவர் கடுவெல பொலிஸாரால் மீட்கப்பட்டிருந்த நிலையில், அவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் நடந்துள்ளது.

காருக்குள் இருந்த நபர் படுகாயமடைந்த நிலையில் முல்லேரியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட போதும், அவர் உயிரிழந்துவிட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவரின் தலை மற்றும் முகத்தில் பலத்த காயங்கள் உள்ள நிலையில், இது விபத்தா அல்லது கொலையா என்பது குறித்து கடுவெல பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (எ-இ)

## தமிழக உதவிப்பொருள்களுடன் கப்பல் இன்று இலங்கைக்கு வரும்

கொழும்பு, மே 22

தமிழ்நாட்டின் உதவிப் பொருள்களுடன் கடந்த 18ஆம் திகதி புறப்பட்ட கப்பல் இன்று நாட்டை வந்தடையவுள்ளதாக இலங்கையிலுள்ள இந்தியத் தூதரகம் அறிவித்துள்ளது.

குறித்த கப்பலில் 9 ஆயிரம் மெற்றிக்தொன் அரிசி, 50 மெற்றிக்தொன் பால்மா மற்றும் 25 மெற்றிக் தொன் மருந்துப் பொருள்கள் அடங்கியுள்ளன.

இதேவேளை தமிழகத்தால் மொத்தமாக 40 ஆயிரம் மெற்றிக்தொன் அரிசி, 500 மெற்றிக்தொன் பால்மா மற்றும் மருந்துப் பொருள்கள் என்பன இலங்கைக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-14)



## மருத்துவமனையில் யாரோ 69 என்ற எண்ணை ஒட்டினர்

*மஹிந்த ஆதரவாளர் கஹந்தகம தெரிவிப்பு*

கொழும்பு, மே 22

காலிமுகத் திடலில் கடந்த 9ஆம் திகதி மஹிந்த ராஜபக்சவின் ஆதரவாளர்களால் தாக்குதல் நடத்தப்பட்டதை அடுத்து மக்கள் மேற்கொண்ட எதிர்த் தாக்குதலில் பாதிக்கப்பட்ட பொதுஜன பெரமுன மாநகரசபை உறுப்பினர் மஹிந்த கஹந்தகம அது தொடர்பில் தற்போது கருத்துத் தெரிவித்துள்ளார்.

'கோத்தா கோ ஹம' ஆர்ப்பாட்டக்காரர்களை தாக்குவதற்காக அவர் காலிமுகத் திடல் சென்றார் என்று கூறப்படுவதை மஹிந்த கஹந்தகம மறுத்துள்ளார்.

அலரிமாளிகையில் நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு மாநகரசபைக்கு வந்தேன். அதன் பின்னரே சபையில் இருந்து வெளியில் வந்தபோது தாக்கப்பட்டேன் என அவர் தெரிவித்துள்ளார்.

தாக்குதலால் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தபோது, அங்கு யாரோ ஒருவர் தனது கையில் 69 என்ற இலக்கத்தை ஒட்டியுள்ளார் என்றும் மஹிந்த கஹந்தகம குற்றஞ் சுமத்தியுள்ளார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விற்பனைக்கு

யாழ். கந்தர்மடம் சந்திக்கு அண்மையில் அரசடி வீதி முகப்புடன் 3 பரப்பும் 3 குழியும் உடைய காணியும் மற்றும் 1 ½ பரப்புக்காணியும் மற்றும் 4 பரப்புக்காணியும். யாழ் K.K.S வீதியில் தட்டாதெரு சந்திக்கு அண்மையில் 4 பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு.

077 723 2535

## Vacancy for Software Developer and Data Analyst

A USA-based company with offices in Colombo and Jaffna is looking for candidates for the posts of Web Application Developer and Data Analyst.

Qualifications:

- Degree in Computing/IT or equivalent experience
- Good knowledge of programming
- Knowledge in Database Management Systems
- Knowledge in Mobile programming is a plus

Send your CV to siva@monthlywarranty.com

(cs 8885) (2.6)

## வியாபார நிலையம் வாடகைக்கு



மூன்று அடுக்கு கட்டடம் ஒவ்வொரு தட்டும் 2000 சதுர அடி உள்ள வியாபார நிலையம் வாடகைக்கு தனியாகவோ, பகுதி பகுதியாகவோ பிரித்துக் கொடுக்கப்படும்.

(தரகர் தேவையில்லை)

தொடர்பு : 076 066 7179

இல. 144, 1ஆம் குறுக்குத்தெரு யாழ்ப்பாணம்.

(யாழ். மத்திய கல்லூரிக்கு எதிரே)

(CS 44788) (3/6)


# மரண அறிவித்தல்

அன்னை மடியில் 16 - 12 - 1945



ஆண்டவன் அடியில் 20 - 05 - 2022

## திருமதி சிவக்கொழுந்து சிவஞானம்

[ ஓய்வு நிலை ஆசிரியை - யா/ டிறிபேக் கல்லூரி, சாவகச்சேரி யா/சாவ.இந்துக்கல்லூரி]

யாழ் சாவகச்சேரியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவக்கொழுந்து சிவஞானம் அவர்கள் (20.05.2022) வெள்ளிக்கிழமை அன்று இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக்கம் முத்தாச்சி தம்பதிகளின் அன்பு மகளும், சின்னையா சின்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சிவஞானம் அவர்களின் பாசமிகு மனைவியும், சிவகுமார் (பிரான்ஸ்), சிவபவன் (லண்டன்), பவானி (அவுஸ்திரேலியா) ஆகியோரது பாசமிகு அம்மாவும், குமுதினி, இராஜராஜன் அவர்களின் அன்புமிகு மாமியாரும், சிவப்பிரியன், ஆரணி, துஷியந்தி, வினுசாகினி, யுகராஜன், ஆகியோரது பேர்த்தியும், சுப்பிரமணியம் (RMP), கணபதிப்பிள்ளை(பொறியிலாளர்), காலஞ்சென்ற சிவஜோகம் பாலசுப்பிரமணியம், சிவஞானம், சந்திரகாசன், கமலாதேவி சிவானந்தன் (இளைப்பாறிய ஆசிரியை), கொங்காதரராஜா ஆகியோரது சகோதரியும், ப.வே.இராசரத்தினம் (குட்டி விதானை) சரஸ்வதி, மார்க்கண்டு – ராஜபூபதி அவர்களின் சம்பந்தியுமாவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.05.2022) திங்கட்கிழமை மு.ப 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று சாவகச்சேரி கண்ணாடிபிட்டி இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர்கள் மற்றும் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்

தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி
பவானி (மகள்):- +61 499 486 212
சிவகுமார் (பிரான்ஸ்):- +33 787402071
சிவபவன் (லண்டன்) :- +44 7851146429

தகவல்:
குடும்பத்தினர்
077 214 1384

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

# மரண அறிவித்தல்

தோற்றம் 09 . 06 . 1934



மறைவு 19 . 05 . 2022

## திருமதி நாகரத்தினம் சிவபாக்கியம்

காளிகோவிலடி, மூளாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகரத்தினம் சிவபாக்கியம் கடந்த (19.05.2022) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா - சிவக்கொழுந்து தம்பதியரின் மூத்த புதல்வியும், காலஞ்சென்ற க.நாகரத்தினம் அவர்களின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்ற கனகரத்தினம், சரஸ்வதி, வேலாயுதம், சின்னமணி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், ஜெயக்குமார், காலஞ்சென்ற உதயகுமார், விஜயகுமார், ராஜ்குமார், ஜெயக்குமாரி, உதயகுமாரி (அஞ்சலா - பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், ராஜமலர், கௌரிஅம்பிகாதேவி, நாகேஸ்வரி, பிறேமாவதி, நாகராசா, கெங்காதரன் (பிரான்ஸ்), ஆகியோரின் பாசமிகு மாமியாரும், ரமேஸ்குமார், சுரேன்குமார், சுரேகா (கனடா), ரஜன்குமார், அபிராமி, சசிக்குமார், கிஷோக்குமார் (உரிமையாளர் - Nutra - Tech,B/M.Engineering Consultancy), பரத்குமார் (அவுஸ்திரேலியா), நிஷாந்தா (வலயக்கல்வி அலுவலகம், முல்லைத்தீவு), குகப்பிரகாஸ், (வைத்தியர், ஆதார வைத்தியசாலை - வவுனியா), ஜெயப்பிரகாஸ் (மருந்தாளர் - நியூலங்கா பார்மசி), நிறோஜ்குமார், செந்துஜா, சாகித்தியன், உசாந்தினி, நிஷாந்தினி (சுகாதாரத் திணைக்களம், கிளிநொச்சி), கிருஸ்ணரூபன்(ஆசிரியர், யா/ மானிப்பாய் இந்துக் கல்லூரி), காந்தரூபன், கமலாஜினி ஆகியோரின் பேர்த்தியும், ரஜிந்தன் (இத்தாலி), சஜிந்தன் (இத்தாலி), தரணிகா, துஷான், விஷ்ணு, விஷாளி, சம்யா, சனோயா, ஆதர்சன், சரஸ்வதி, லேகிஷன், பிரதீஸ், டனுசியன், வருண், கனிசா, மிதுசன் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.05.2022) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக மூளாய் பித்தனை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

077 321 1047 (cs.44785) (2.6)

தகவல்:
குடும்பத்தினர்.

# 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 09 . 10 . 1972



மறைவு 22 . 05 . 2012

## அமரர் செல்லத்துரை டேமியன்

(யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்)

அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகின்றோம்.

அந்திரான்,
சண்டிலிப்பாய். (cs.44793) (2.6)

குடும்பத்தினர்

# கண்ணீர் அஞ்சலி

மலர்வு 05 . 05 . 1971



உதிர்வு 19 . 05 . 2022

சாவகச்சேரி நகராட்சி மன்றத்தின் சேவையாளன்

## அமரர் கணபதிப்பிள்ளை உதயகுமார்

மீளாத்துயில்கொண்டு எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்திச் சென்றீரே?
கலையாத நினைவுகளுடன் உதிரும் கண்ணீர் பூக்களால் அர்ச்சித்து
உங்கள் ஆத்மா சாந்தியடைய
எங்கள் கண்ணீர்த் துளிகளைக் காணிக்கையாக்குகின்றோம்.

ஊழியர் நலன்புரிச் சங்கம்
நகராட்சி மன்றம், சாவகச்சேரி.

(CS 8431)



## இம்மாத இறுதியில் பைடன்–மோடி சந்திப்பு

அமெரிக்க அதிபர் ஜோ பைடனை இம்மாதம் 24ஆம் திகதி இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. இந்தச் சந்திப்பு ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் நடைபெறவுள்ளது. இந்தச் சந்திப்பில் உக்ரைன் போரின் தாக்கம் குறித்து ஆலோசனை நடத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. ரஷ்யாவை கடுமையாக எதிர்த்துவரும் அமெரிக்கா, உக்ரைன் விவகாரத்தில் ரஷ்யா மீது இந்தியாவும் பொருளாதாரத் தடைகள் விதிக்க வேண்டும் என வலியுறுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

## இங்கிலாந்தில் இரத்த மழை?

இங்கிலாந்தில் இந்த வாரம் இரத்த மழை என்னும் அபூர்வ நிகழ்வு நிகழவுள்ளதாக வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது. இங்கிலாந்தின் சில பகுதிகளில் சிவப்பு அல்லது ஒரேஞ்ச் நிறத்தில் மழை பெய்வதுடன், இடி, மின்னலுடன் கன மழையும், பலத்த காற்றும் வீசக்கூடும் என வானிலை ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். இந்த இரத்த மழை அதிகளவில் சிவப்பு நிற தூசு அல்லது துகள்கள் மழைநீருடன் கலக்கும்போது உருவாகுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

சுன்னாகம் வீதி, புத்தூரில் நில.பர.05 குளி 05 விஸ்தீரணம் கொண்ட கொழும்பு சுப்பர்மார்ட் பிரைவட் லிமிட்ட் நிறுவனமும் அத்துடன் இணைந்த வீடும், சுற்று மதிலும், கிணறும், அமைந்த வியாபார நிலையமானது விற்பனைக்குண்டு.

**தொடர்புக்கு:- 071 480 3765**

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் மானிப்பாய் வீதி ஒட்டுமடம் சந்தியிலிருந்து முதலாம் ஒழுங்கை பகுதியில் 10 பரப்பு காணி சுற்றுமதிலுடன் அவசர விற்பனைக்கு உண்டு. குறித்த ஆதனத்தை கொள்வனவு செய்ய ஆர்வமுள்ளவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்.

**பார்வையிடும் நேரம்:- 8.00AM-6.00PM**

**தொடர்பு : 076 469 8347, 076 844 6536**

## கடை வாடகைக்கு

இலக்கம் 68 கண்டி வீதி நாவற்குழியில் 3 மாடி கடைக் கட்டடம் வாடகைக்கு / குத்தகைக்கு உண்டு.
(வங்கிக்கிளைகள், தனியார் நிறுவனங்கள், Foodcity ஆகியன விரும்பத்தக்கது) (CS 44768) (3/6)

உரிமையாளர் : ரகுபேரம்பலம்
தொடர்புகளுக்கு
**076 717 0134, 077 123 4745**

## பராமரிப்பாளர் தேவை

ஊரிக்காடு, வல்வெட்டித்துறையில் ஐந்து வருடங்களிற்கு மேலாக இயங்கி வருகின்ற **வல்வை முதியோர் இல்லத்திற்கு பெண் பராமரிப்பாளர் தேவை.** உணவு, தங்குமிட வசதி இலவசம். தகுந்த சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். **எமது இல்லத்தில் புதிதாக ஆண்கள், பெண்கள் இணைய விரும்புவோர் இணைந்து கொள்ளலாம்.** கட்டணம் குறைவான நிலையில் அறவிடப்படும். (CS 44714) (3/6)

தொடர்புகளுக்கு
**077 810 6857**
**077 154 2067**
**021 226 5551**

## கண்ணீர் அஞ்சலி



யாழ். மாவட்ட முன்னாள்
சாரண ஆணையாளரும், சமூக
சேவையாளருமாகிய
**அமரர் சுப்பிரமணியம்**
**ஏகாம்பரநாதன்**
அவர்களின் இழப்பு மிகுந்த
வருத்தமளிக்கின்றது
அன்னாரின் ஆத்மா
சாந்தியடைய பிரார்த்தித்து
அன்னாரின் குடும்பத்தினருக்கு
ஆழ்ந்த இரங்கலை
தெரிவித்துக் கொள்கிறோம்.

**வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் தேவஸ்தானம்**
**யாழ்ப்பாணம்.**
(CS 889) (3/6)

# Study in UK / Canada / Spain

BEVERLEY INTERNATIONAL

- IELTS தகைமை உள்ளவர்கள் அல்லது அற்றவர்கள்
- பகுதி நேர வேலைவாய்ப்பு
- புலமைப்பரிசு (Scholarships) உண்டு
- கல்வியின் பின் வேலை வாய்ப்பிற்கான விசா பெற்றுக்கொடுக்கப்படும் PSW
- PR பெற்றுக் கொள்வதற்கான வழிமுறைகள்
- சாதாரணக் கல்விக் கட்டணம்
- வங்கி பண வைப்பிற்கான வழிகாட்டல்

*உடன் பதிவுகளுக்கு இன்றே எம்மை அழையுங்கள்!!!*

மேலதிக தகவல்களுக்கு : **0776 929 773**
பாத்திமா : **0706 697 660** | வேணுகா : **0718 517 994**

**Beverley International**
Head Office - No. 3/5, 3rd Floor, Kollupitiya, Colombo - 03, Sri Lanka.
Tel : 0112 576 656
Jaffna Office - No. 401, Clock Tower Road, Jaffna. Tel : 021 22 10 277

## செம்மணி இந்துமயான அபிவிருத்திச்சபை

பதிவு இல.HA / 4 / JA / 266
**393 /30, கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.**

## பொதுக்கூட்ட அறிவித்தல்

- காலம் : 05.06.2022 ஞாயிற்றுக்கிழமை
- நேரம் : காலை 09.00 மணி
- இடம் : செம்மணி இந்துமயான மண்டபம்
- தலைவர் : திரு.லயன்.சி.இலட்சுமிகாந்தன்

**புதிய நிர்வாக சபை தெரிவு**
*அனைவரையும் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு வேண்டுகின்றோம்.*

(cs 44765) (2.6)

**செம்மணி இந்துமயான அபிவிருத்திச் சபையினர்.**

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியை
**திருமதி ஜெயந்தினி ஸ்ரீகரன்**
அவர்களின் அன்புத் தந்தை
**அமரர் பொன்னுச்சாமி குணரட்ணம்**
அவர்களின் மரணச் செய்தியறிந்து மிகவும் வருத்தமடைந்தோம் அன்னாரின் ஆத்மா சாந்தி பெற இறைவனை பிரார்த்திக்கின்றோம் அன்னாரின் குடும்பத்தினருக்கும் எமது இரங்கலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தோற்றம் 16.11.1940 — மறைவு 19.05.2022

**யா/ வண் ஸ்ரீ வைத்திலிங்கம் வித்தியாலயம் பாடசாலைச் சமூகம்.** (CS 893) (3/6)

## கண்ணீர் அஞ்சலி



எமது பணியாளரான சந்திரமோகன் அவர்களின்
பாசமிகு மாமனார்
**பொன்னுச்சாமி குணரத்தினம்**
அவர்கள் காலமான செய்தி அறிந்து ஆழ்ந்த துயரடைகின்றோம் அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

ஓம் சாந்தி!

**வினோ நகைப்பூங்கா**
**உரிமையாளரும் பணியாளர்களும்.**
**கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
(CS 44794)(3/6)


# அறிதலும் பகிர்தலும் கருத்துப்பகிர்வு

யாழ்ப்பாணம், மே 22

விதை குழுமத்தால் நடத்தப்படும் அறிதலும் பகிர்தலும் தொடர் நிகழ்வின் 15ஆவது நிகழ்வு 'நவீன காலத்துக்கு முற்பட்ட பொருளாதாரமும் அரசுகளும்' என்ற தலைப்பில் இன்று ஞாயிற்றுக்கிழமை இலங்கை நேரப்படி இரவு 7.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

நிகழ்நிலையில் நடைபெறும் இந்த நிகழ்வில் சமூகவியல் ஆய்வறிஞர் கந்தையா சண்முகலிங்கம் உரையாற்றவுள்ளார் என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ச-இ)

# திருமுறை மனனப்போட்டியும் பரிசளிப்பு விழாவும்

யாழ்ப்பாணம், மே 22

வண்ணை - சர்ந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் சைவ சமய அபிவிருத்திக் கழகத்தால் திருநாவுக்கரசு நாயனார், திருஞானசம்பந்த மூர்த்திநாயனார் குரு பூசையை முன்னிட்டு திருமுறை மனனப்போட்டியும் பரிசளிப்பு விழாவும் இன்று ஞாயிற் றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஆலய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (ச)

# பல்கலை பணியாளருக்கு உலருணவு பொதிகள்

யாழ்ப்பாணம், மே 22

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றும் 110 பணியாளர்களுக்கும், கிளிநொச்சி வளாகத்தில் பணியாற்றும் 40 பணியாளர்களுக்கும் தலா 6 ஆயிரம் ரூபா பெறுமதியான உலருணவுப் பொதிகள் நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டன. ஐக்கிய அமெரிக்காவில் அமைந்துள்ள சிவானந்தன் ஆய்வுகூடத்தின் நிறுவுநர் பேராசிரியர் சிவானந்தனின் நிதிப்பங்களிப்பில் இந்த உணவுப்பொதிகள் வழங்கப்பட்டன. நிகழ்வில் யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா, விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் பு.ரவிராஜன் உள்ளிட்ட பலர் இதில் கலந்துகொண்டனர். (ம-14)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைகாசி மாத இராசி பலன்கள்

## 15.05.2022-14.06.2022



**ஏன்? எதற்கு? என்ற கேள்விகளை அடிக்கடி கேட்கும் இயல்புடைய கும்ப இராசி வாசகர்களே!**

வைகாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் ஏழரைச் சனியில் விரயச் சனியின் ஆதிக்கம் இருப்பதால் எதிர்பாராத விதத்தில் விரயங்கள் ஏற்படும்.

**மீன - செவ்வாய் சஞ்சாரம்**

வைகாசி 3 ஆம் திகதி, மீன இராசிக்குச் செவ்வாய் செல்கிறார். உங்கள் இராசிக்கு 3, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் செவ்வாய். அவர் தன ஸ்தானத்திற்கு செல்லும் பொழுது உடன்பிறப்புகளின் முன்னேற்றம் திருப்தி தரும். செவ்வாய் குருவோடு இணைவதால் "குருமங்கள யோகம்" உருவாகிறது. எனவே நல்ல காரியங்கள் இல்லத்தில் நடைபெறும்.

**சனி - செவ்வாய் பார்வைக் காலம்**

வைகாசி 3 ஆம் திகதி முதல் மாதக் கடைசி வரை, மீனத்தில் உள்ள செவ்வாயை மகரத்தில் உள்ள சனி பார்க்கப் போகின்றார். எனவே இக்காலத்தில் கவனம் தேவை. குடும்பத்தில் பிரச்சினை அதிகரிக்கும். விரயங்களால் மனக்கலக்கம் ஏற்படும்.

**புதன் வக்கிர நிவர்த்தியும் ரிஷப சஞ்சாரமும்**

வைகாசி 7 ஆம் திகதி, மேஷ இராசியில் புதன் வக்கிர நிவர்த்தியாகிறார். உங்கள் இராசிக்கு பஞ்சம அஷ்டமாதிபதியான புதன் வக்கிர நிவர்த்தியாவதால் பிள்ளைகள் வழியில் சுபகாரியங்கள் நடைபெறும். வீடு மாற்றம் செய்ய முன்வருவீர்கள். வைகாசி 23 ஆம் திகதி, ரிஷப இராசிக்கு புதன் செல்கிறார். இக்காலத்தில் "புத ஆதித்ய யோகம்" உருவாகின்றது. எனவே பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும். புனிதப் பயணங்களும் உண்டு.

**மேஷ - சுக்கிரன் சஞ்சாரம்**

இதுவரை உச்சம் பெற்று மீனத்தில் சஞ்சரித்து வந்த சுக்கிரன், வைகாசி 10 ஆம் திகதி மேஷ இராசிக்கு வருகிறார். உங்கள் இராசிக்கு 4, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சுக்கிரன், சகாய ஸ்தானத்திற்கு வரும் இந்த நேரம் நன்மைகள் அதிகம் கிடைக்கும்.

குறிப்பாக இடம், வீடு வாங்கும் யோகம் உண்டு. கல்வி சம்பந்தமாக எடுத்த முயற்சி கைகூடும். பொரு




ளாதாரத்தில் மேம்பாடு அதிகரிக்கும். நல்ல காரியம் இல்லத்தில் நடைபெறும்.

## எதிர்பாராத விதத்தில் விரயங்கள் ஏற்படும்!

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**

**மகரச் சனியின் வக்கிர காலம்**

வைகாசி 11 ஆம் திகதி, மகரத்தில் சனி வக்கிரம் பெறுகிறார். என்றாலும் கூட இராசிநாதனாகவும் சனி இருப்பதால் ஆரோக்கியத் தொல்லை அதிகரிக்கும். அலைச்சலுக்கேற்ற ஆதாயம் கிடைக்காது. பொருளாதாரப் பற்றாக்குறை அதிகரிக்கும். புதிய முயற்சிகளில் ஈடுபடும் பொழுது அனுபவஸ்தர்களை ஆலோசித்துச் செய்வது நல்லது.

உறவினர்களுக்கு உதவி செய்யப் போய், அது உபத்திரவமாய் முடியலாம். பணிபுரியும் இடத்தில் பக்குவமாய் நடந்து கொள்வது நல்லது. நண்பர்களை நம்பி எதையும் செய்ய இயலாது. தடைப்பட்ட நோய் மீண்டும் தலை தூக்கும். இம்மாதம் சனிக்கிழமை தோறும் சனி பகவானை வழிபடுவது நல்லது.

**பெண்களுக்கான பலன்கள்**

இம்மாதம் விரயச் சனியின் ஆதிக்கத்தால் குடும்பச் சுமை கூடும். வருமானப் பற்றாக்குறை ஏற்படும். கணவன் - மனைவிக்குள் பிணக்குகள் அகன்று இணக்கம் ஏற்பட, விட்டுக் கொடுத்துச் செல்லுங்கள். பிள்ளைகளின் வழியில் நல்ல காரியங்கள் நடைபெறும். சுப விரயங்கள் செய்வதன் மூலம் வீண் விரயங்களில் இருந்து தப்பிக்க இயலும். உழைப்பிற்கேற்ற பலன் கிடைப்பது அரிது. சகப் பணியாளர்களால் சில தொல்லைகள் ஏற்படலாம்.



**பம்பரம் போல் சுழன்று பணி புரியும் ஆற்றல் படைத்த மீன இராசி வாசகர்களே!**

வைகாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் குரு தன் சொந்த வீடான உங்கள் இராசியிலேயே சஞ்சரிக்கிறார். ஜென்ம குரு என்றாலும் பலம் பெற்று சஞ்சரிப்பதால் ஆரோக்கியம் சீராகும்.

## பணிபுரியும் இடத்தில் பணத்தை கையாளும் பொழுது கவனம் தேவை!

**மீன - செவ்வாய் சஞ்சாரம்**

வைகாசி 3 ஆம் திகதி மீன இராசியான உங்கள் இராசிக்குச் செவ்வாய் செல்கிறார். உங்கள் இராசிக்கு 2, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியான செவ்வாய், உங்கள் இராசியிலேயே சஞ்சரிக்கும் பொழுது, நினைத்த காரியம் நினைத்த நேரத்தில் முடியும். தைரியம், தன்னம்பிக்கை கூடும். பொறுப்பு சொல்லி வாங்கிக் கொடுத்த தொகை வந்து சேரும். இடம், பூமி வாங்கும் முயற்சி கைகூடும்.

**சனி - செவ்வாய் பார்வைக் காலம்**

வைகாசி 3 ஆம் திகதி முதல் மாதக் கடைசி வரை, மீனத்தில் உள்ள செவ்வாயை மகரத்தில் உள்ள சனி பார்க்கப் போகிறார். உங்கள் இராசிக்கு 2, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் செவ்வாய். அவரை லாப ஸ்தானத்தில் உள்ள சனி பார்க்கும் பொழுது, பகைக் கிரகமாக இருந்தாலும் பொருளாதார நிலை சிறப்பாகவே இருக்கும். விற்பனை செய்த பூமியால் சில பிரச்சினை வரலாம்.

**புதனின் வக்கிர நிவர்த்தியும், ரிஷப சஞ்சாரமும்**

வைகாசி 7 ஆம் திகதி, மேஷ இராசியில் புதன் வக்கிர நிவர்த்தியாகிறார். இதனால் குடும்ப ஒற்றுமை பலப்படும். கொடுக்கல் - வாங்கல் ஒழுங்காகும். பிள்ளைகளுக்கு வரன்கள் வாசல் தேடி வரும். வெளிநாட்டு பயணத்தில் அனுகூலம் உண்டு. வைகாசி 23 ஆம் திகதி, ரிஷப இராசிக்கு புதன் செல்கிறார். இக்காலத்தில் உடன் பிறப்புகளின் இல்லங்களில் சுபகாரியங்கள் நடைபெறலாம். வழக்குகள் சாதகமாகும். தொழிலில் சில மாற்றங்களை செய்வீர்கள்.




**மேஷ - சுக்கிரன் சஞ்சாரம்**

இதுவரை உச்சம் பெற்று மீனத்தில் சஞ்சரித்து வந்த சுக்கிரன், வைகாசி 10 ஆம் திகதி மேஷ இராசிக்கு வருகிறார். சகாய ஸ்தானாதிபதி தன ஸ்தானத்திற்கு வரும் போது, தனவரவு திருப்தி தரும். கடமையில் இருந்த தொய்வு அகலும். தொழிலில் முன்னேற்றம் உண்டு. ஆடை, ஆபரணச் சேர்க்கை உண்டு. மகரச் சனி வக்கிர காலம் வைகாசி 11 ஆம் திகதி உங்கள் இராசிக்கு லாப ஸ்தானத்தில் உள்ள சனி வக்கிரம் பெறுவதால், பொருளாதாரத்தில் ஏற்ற இறக்க நிலை உருவாகும். எதிர்பார்த்த தகவல் தாமதப்படலாம். இலாபத்தைக் கொடுத்து வந்த பங்குதாரர்கள் திடீரென விலகிக் கொள்வதாகச் சொல்வர்.

வீடு, மனை வாங்கப் போட்ட திட்டம் நிறைவேறும். பணிபுரியுமிடத்தில் பணத்தைக் கையாளும் பொழுது கவனம் தேவை. திடீரென இடமாற்றம், ஊர் மாற்றம் வரலாம். இம்மாதம் லட்சுமி சமேத விஷ்ணுவை இல்லத்தில் வைத்து வழிபடுவது நல்லது.

**பெண்களுக்கான பலன்கள்**

இம்மாதம் தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். தொடர்ந்து வந்த கடன் சுமை குறையும். கணவன் - மனைவிக்குள் அன்பு, பாசமும் அதிகரிக்கும்.

உறவினர்களின் ஒத்துழைப்புடன் ஒரு சில நல்ல காரியங்கள் இல்லத்தில் நடைபெறும். வீடு வாங்கும் யோகம் உண்டு. வெளிநாடு செல்ல எடுத்த முயற்சி கைகூடும். பிள்ளைகளின் முன்னேற்றம் ஆச்சரியப்பட வைக்கும். உத்தியோகத்தில் கேட்ட சலுகைகள் கிடைக்கும். (முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதவி வெற்றிடம்

## வடக்கு கூட்டுறவு அபிவிருத்தி வங்கி

| பதவி | கல்வித்தகைமை / அனுபவம் |
|---|---|
| 1. 1 x திட்ட முகாமையாளர் (ஒரு வருடம்) | ➢ பல்கலைக்கழகபட்டம் /அதற்கு இணையான தகமை: நிதி /கணக்கீடு/ வர்த்தகம் / சந்தைப்படுத்தல்.<br>➢ MS OFFICE மென்பொருளினை கையாளும் திறன் (EXCEL)<br>➢ தரவுகளை பகுப்பாய்வு செய்யும் திறன்<br>➢ அறிக்கை எழுதுதலும் தொடர்பாடல் திறனும் (ஆங்கிலம், தமிழ்)<br>➢ மூன்று வருடத்திற்கு குறையாத முன்னனுபவம் |
| 2. 1 x திட்ட அலுவலகர் (ஒரு வருடம்) | ➢ கா.பொ.த. உயர் தரத்தில் 3பாடங்களில் சித்தி<br>➢ கள ஆய்வு, திட்ட நடவடிக்கையினை முன்கொண்டு செல்லல்<br>➢ அறிக்கை எழுதுதலும் தொடர்பாடல் திறனும் (ஆங்கிலம், தமிழ்)<br>➢ செயற்திட்டங்களை திறன்பட முன்கொண்டு செல்லல்<br>➢ MS OFFICE மென்பொருளினை கையாளும்திறன்<br>➢ ஒரு வருடத்திற்கு குறையாத அபிவிருத்தி செயற்திட்டங்களில் அல்லது சந்தைப்படுத்தலில் பணியாற்றிய முன்னுபவம் |
| 3. 1 x மாவட்டத்திற்கான திட்ட அலுவலகர் (ஒரு வருடம்) | ➢ கா.பொ.த. உயர் தரத்தில் 3பாடங்களில் சித்தி<br>➢ கள ஆய்வு(80%), விநியோக நடவடிக்கையினை முன்கொண்டு செல்லல்<br>➢ அறிக்கை எழுதுதலும் தொடர்பாடல் திறனும் (ஆங்கிலம், தமிழ்)<br>➢ செயற்றிட்டங்களை திறன்பட முன்கொண்டு செல்லல்<br>➢ MS OFFICE மென்பொருளினை கையாளும்திறன்<br>➢ ஒரு வருடத்திற்கு குறையாத சந்தைப்படுத்தலில் பணியாற்றிய முன்னுபவம் |
| 4. 1 x உதவியாளர் (ஒரு வருடம்) | ➢ கள ஆய்வு (90%), விநியோக நடவடிக்கையினை முன்கொண்டு செல்லல்<br>➢ கா.பொ.த. உயர் தரத்தில் 3பாடங்களில் சித்தி<br>➢ அறிக்கை எழுதுதலும் தொடர்பாடல் திறனும்<br>➢ MS OFFICE மென்பொருளினை கையாளும் திறன்<br>➢ ஒரு வருடத்திற்கு குறையாத சந்தைப்படுத்தலில் பணியாற்றிய முன்னுபவம் |
| 5. 1 x மாவட்டத்திற்கான திட்ட உதவியாளர் (ஒரு வருடம்) | ➢ கள ஆய்வு (90%), விநியோக நடவடிக்கையினை முன்கொண்டு செல்லல்<br>➢ கா.பொ.த. உயர் தரத்தில் 3பாடங்களில் சித்தி<br>➢ அறிக்கை எழுதுதலும் தொடர்பாடல் திறனும்<br>➢ MS OFFICE மென்பொருளினை கையாளும் திறன்<br>➢ ஒரு வருடத்திற்கு குறையாத சந்தைப்படுத்தலில் பணியாற்றிய முன்னுபவம் |
| 6. 1 x சாரதி (ஒரு வருடம்) | ➢ கனரக/சாதாரன வாகன சாரதி அனுமதி பத்திரம்.<br>➢ வங்கி திட்டத்தின் அனைத்து கள செயற்பாடுகளிலும் பங்குபற்றல்<br>➢ ஒரு வருடத்திற்கு குறையாத அனுபவம் |

- குறிப்பு: அனைத்து பதவி நிலைகளுக்கும் கூட்டுறவுத்துறை தொடர்பான அனுபவத்திற்கு முன்னுரிமை.
- வடமாகாணம் முழுவதும் பணியாற்றக்கூடிய தன்மை

விண்ணப்பதாரிகள் lk.ncdb@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு / நேரில் அல்லது தொலைபேசி ஊடாக தொடர்பு கொண்டு தங்கள் பதவி நிலைக்கான விதி முறைகள் மற்றும் விண்ணப்ப படிவத்தை கோரவேண்டும். வைகாசி 31ம் திகதிக்கு முன்னர் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை சுயவிபரக்கோவையுடன் சமர்ப்பித்தவர்கள் மட்டுமே நேர்காணலுக்கு உள்வாங்கப்படுவார்கள்.

தலைவர்
வடக்கு கூட்டுறவு அபிவிருத்தி வங்கி
கைதடி

**021 223 2673**

(CR 8430 (3/6)

---

யாழ். இராட்சியத்தின்
இறுதித் தமிழ்த் தேசிய சைவ மன்னன்

## 2 ஆம் சங்கிலியனின்
## 403 ஆவது சிரார்த்த தினவிழா அழைப்பு



இடம் : சங்கிலி மன்னனின் சிலையடி, முத்திரைச்சந்தி, நல்லூர்.

காலம் : வைகாசி வளர்பிறை எட்டாம் நாள் (22.05.2022 ஞாயிறு)

**நிகழ்ச்சிகள்**

- 09.00 - 09.30 - சங்கிலி மன்னன் சிலைக்கு மாலை அணிவித்து மலர் சொறிந்து அஞ்சலி செய்தல்
- 09.30 -10.30 - யமுனா ஏரிக்கு ஊர்வலமாகச் சென்று மலர்தூவி அஞ்சலி செய்தல்
- 10.30 - 11.00 - விருந்தினர் உபசரிப்பு
- 11.30 - 12.30 - கீரிமலை தீர்த்தக்கரையில் சிரார்த்தக் கிரியை செய்தல்
- 12.30 - 01.30 - அன்ன தானம் - சிவபூமி மடம்

* இலங்கைத்தீவின் 25 மாவட்டங்களிலும் ஒரே நேரத்தில் சிரார்த்தம் இடம்பெறும்.
* அணிதிரண்டு வாரீர் ! அஞ்சலி செய்வோம்.
* தமிழ்த்தேசிய சைவமக்களே ! விழிமின்; எழுமின் ; சைவம் காக்க புறப்படுமின்.

விளம்பர அனுசரணை: தொழிலதிபர், திரு.ந.திவாகர், அண்ணா தொழிலகம், இணுவில்.

திரு.N.P. ஸ்ரீந்திரன்,
செயலாளர், சங்கிலி மன்னன் நினைவு தினக்குழு.

((cr.36007) (2.6)

---

## திறன்திரை கையளிப்பும் மதிப்பளித்தல் நிகழ்வும்

சாவகச்சேரி, மே 22

மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரிக்கு திறன் திரை (ஸ்மார்ட் பனல்) கையளிப்பும் அவற்றைக் கையளித்தோரை மதிப்பளித்தலும் நேற்று முன்தினம் இடம் பெற்றது.

பாடசாலையின்பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் உள்ளிட்ட பலர் இணைந்தும், தனிப்பட்ட ரீதியாகவும் பாடசாலையின் 7 வகுப்பறைகளுக்குத் தலா 3 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான திறன்திரைகளைக் கையளித்தனர். இதன்போது திறன்பலகை கையளித்தோர், மாலை அணிவிக்கப்பட்டு பொன்னாடை போர்த்தி பாடசாலைச் சமூகத்தால் மதிப்பளிக்கப்பட்டனர். (ம-14.9)

---

# மரண அறிவித்தல்

பிறப்பு 11 - 11 - 1942



இறப்பு 19 - 05 - 2022

## பொன்னுத்துரை பரமராசா

சுன்னாகம் மேற்கு அம்பனையைப் பிறப்பிடமாகவும் சுன்னாகம் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை பரமராசா கடந்த (19.05.2022) வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னுத்துரை நாகம்மா தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சுப்பர் ஆச்சிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற சின்னத்தங்கச்சியின் அன்பு கணவரும் சிவனேஸ்வரன் (நேசன்) அவர்களின் அன்புத் தந்தையும், ஜெயபாலினியின் அன்பு மாமனாரும், மதிமுகன் (கனடா), நிர்விகா, ஜானுகா ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற சச்சிதானந்தம், மற்றும் சிவலிங்கம், சிவசோதி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.05.2022) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல் : நேசன்**
**(படப்பிடிப்பாளர், நிக்கோன்ஸ் போட்டோ)**

(C8 44791 (3/6)

---

# மரண அறிவித்தல்

பிறப்பு 19 - 07 - 1962



இறப்பு 20 - 05 - 2022

## திரு. F.X அன்ரன்

**(கோட்டக்கல்விப் பணிப்பாளர், நல்லூர்)**

மிருசுவிலைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. F.X அன்ரன் (கோட்டக்கல்விப் பணிப்பாளர், நல்லூர்) நேற்று முன்தினம் (20.05.2021) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பிரான்சிஸ் சேவியர், பிலோமினா நவறஞ்சிதம் ஆகியோரின் அன்பு மகனும், காலஞ்சென்ற ஸ்ரனிஸ்லொஸ், லூட்ஸ்மேரி, புஸ்பராணி ஆகியோரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற கிறிஸ்ரபெல் அனோஜாவின் (ஆசிரியர், யா/ வேம்படி மகளிர் கல்லூரி) அன்புக் கணவரும், நிக்கலின் (இணைந்த சுகாதார விஞ்ஞான கற்கைகள் பீடம், பேராதனைப் பல்கலைக்கழகம்), மாறியோ (தேசிய அபிவிருத்தி வங்கி) ஆகியோரின் அன்புத் தந்தையும், றஞ்சினி, F.X. றஞ்சன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், லொயிற் (கனடா), கொஸ்கா (கனடா), அருட்பணி நெவில் ஞானராஜ் (அவுஸ்திரேலியா), யூடித் (கனடா), மெல்வின் (கனடா), குபேரகுலேந்திரன், கமலா ஆகியோரின் அன்பு மைத்துனரும், எல்விஸ், எல்றோய் ஆகியோரின் அருமை சித்தப்பாவும், பிரவின், பிருந்தினி ஆகியோரின் அன்பு மாமாவும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கத் திருப்பலி நாளை மறுதினம் (24.05.2022) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு யாழ். அடைக்கல அன்னை ஆலயத்தில் இறுதிப்பயணம் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு அதன் பின் மிருசுவில் புனித நீக்கொலார் ஆலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

37/7 மாட்டீன் வீதி,
யாழ்ப்பாணம்.

**தகவல் : பிள்ளைகள்**
**நிக்கலின், மாறியோ**

(C5 44790) (3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 27 - 04 - 1932

உதிர்வு 22 - 04 - 2022



## அமரர் தங்கம்மா அமிர்தலிங்கம்

(நாகம்மா - அக்கா)

திதி : அபரபக்க ஸப்தமி (22.05.2022)

வந்தவரெல்லாம் போவது உண்மை
- அம்மா
விதியென ஒன்று உண்டென அறிந்தோம்
- அம்மா
இருந்தும் மனம் ஏற்குதில்லையே
- அம்மா
"அம்மா" என்ற ஒற்றை வார்த்தை
உயிர்தரும் உணர்வு தரும் பாசம் தரும்
அருகிலிருக்கும் அனைவருக்கும்
- ஆறுதல் தரும்
அறுசுவை தரும் ஆறாத - காதல் தரும்

அடைக்கல மழையில் மூழ்க
- வைக்கும்
அம்மா அம்மா அம்மா
எங்கள் குலவிளக்கு மறைந்து
முப்பத்தொரு நாட்கள் ஆனதுவோ
அம்மா உங்களை நினைத்து
தினம் தினம் நாங்கள்
ஏங்கித்தவிக்கின்றோம் அம்மா
காலங்கள் ஓடிக்கடந்தாலும் அம்மா
உங்களை எங்கள் உள்ளத்தில்
வைத்து பூசிப்போம் அம்மா

**உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்**

**ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!**

**உங்கள் நினைவுகளுடன்**
**சகோதரங்கள், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள், உறவினர்கள்**

**கச்சாய் வீதி,**
**கொடிகாமம்**

(CR 36001) (3/6)

# மரண அறிவித்தல்

தோற்றம் 05 - 05 - 1971

மறைவு 19 - 05 - 2022



## கணபதிப்பிள்ளை உதயகுமார்

கெருடாவில் வடக்கு சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை உதயகுமார் (சாவகச்சேரி நகரசபை உத்தியோகத்தர்) கடந்த (19.05.2022) வியாழக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - சின்னம்மா தம்பதியினரின் புதல்வனும், சண்முகலிங்கம் - கமலாம்பிகை தம்பதியினரின் அன்பு மருமகனும், நிர்மலாதேவியின் (ஆசிரியை யா/ நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயம்), அன்புக் கணவரும் கிஷானா (மாணவி.யா/ சாவகச்சேரி இந்துக்கல்லூரி), சதுஜன் (மாணவன் யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற சுபத்திராதேவி, பரமசிவம் (கெருடாவில்), அருளானந்தம் (கல்வயல்), நமசிவாயம் (ஜேர்மனி), சிவகுமார் (கனடா), கிருஸ்ணகுமார் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், தியாகராஜா, பாலராணி, நாகேஸ்வரி கனகேஸ்வரி, இந்திராணி, வசந்தகுமாரி, றஞ்சினி, யோகேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்றவர்களான மனோகரன், குலேந்திரன், மற்றும் செந்தூரன், சசிதரன், பகீரதி, சசிகரன், அனோசிகா , கிசோறா, அபிராஜ், அபிரா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், சத்தியதேவி, சியாமளாதேவி, மஞ்சுளாதேவி, யசோதராதேவி, சசிதரன் ஆகியோரின் மைத்துனரும், சஜீபா, சதன், சஜீபன், காலஞ்சென்ற பகீரதன், உமாகாந்தன், கெங்காதரன், காலஞ்சென்ற சியாமளா, காலஞ்சென்ற பகீரதி, அனோஷன், கௌசியன், ராஜி, றாகினி, பௌசிகா, அனோஜா, சகானா, கிருத்திகா, நிரோஜன், நிலுர்ஷிகா, பிரவீனா, மிலக்ஷனா, பவிஷனா ஆகியோரின் சிறிய தந்தையும், திவ்யா, டனுசியா, அஸ்வினி, அக்ஷதன் ஆகியோரின் பெரிய தந்தையும், தமிழன்பன், கௌசிகன், துஷி, தனுசியன், அஸ்வின், அபிஷா, பவிஷ்னா, மிதுரா, கபிஷ்ரா, ஆரிஸ், யோசுவா, அனுஷ்கா, தாருஷ், அஸ்வின், ஷபினா, தேஷ்மிகா, ஷாமினி, சர்மிசா, அபினா, அர்ச்சனா, பிரவீன், நிஷானி, மீரா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.05.2022) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளிற்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**077 549 2396** (CR 36005) (3/6) **தகவல் : குடும்பத்தினர்**

# மரண அறிவித்தல்

தோற்றம் 01 - 03 - 1942

மறைவு 18 - 05 - 2022



## சுப்பிரமணியம் ஏகாம்பரநாதன்

(வரி உத்தியோகத்தர் – யாழ். மாநகரசபை,
முன்னாள் யாழ். மாவட்ட சாரண ஆணையாளர்)

கேசாவில் வீதி, வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும் முருகமூர்த்தி வீதி, வண்ணார்பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த சுப்பிரமணியம் ஏகாம்பரநாதன் அவர்கள் கடந்த (18.05.2022) புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் நவமணி தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இராசையா - அன்னரட்ணம் தம்பதியினரின் அன்பு மருமகனும், வேதராணி அவர்களின் பாசமிகு கணவனும், சேந்தன், கார்த்திகா ஆகியோரின் அன்புத் தந்தையும், மயூரன், அனோஜா ஆகியோரின் அன்பு மாமனும் தக்ஷயா, அக்ஷயன் ஆகியோரின் அன்புப் பேரனாரும், காலஞ்சென்ற லோகநாதன் மற்றும் கனகேஸ்வரி, காலஞ்சென்ற பேரின்பநாதன் மற்றும் ருக்மணிதேவி, நாகேஸ்வரி, குகநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற தேவமனோகரி மற்றும் தேவமலர், காலஞ்சென்ற தேவதேவி மற்றும் தேவறஞ்சினி காலஞ்சென்ற தேவமஞ்சரி, தேவகாந்தி, தேவயோகராணி, அருள்வேந், ஜீவகாந்தன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.05.2022) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**41/2 முருகமூர்த்தி வீதி,**
**வண்ணார்பண்ணை,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல் :**
**குடும்பத்தினர்**
**077 570 2512, 077 844 5400**

# மரண அறிவித்தல்

தோற்றம் 17 - 05 - 1947

மறைவு 10 - 05 - 2022



## திரு. முருகேசு சந்திரேஸ்வரன்

அரியாலையைப் பிறப்பிடமாகவும் பிரான்சை வதிவிடமாகவும் கொண்ட திரு. முருகேசு சந்திரேஸ்வரன் அவர்கள் கடந்த (10.05.2022) செவ்வாய்க்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார். அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு, இராசம்பாள் தம்பதியினரின் அன்பு மகனும், குணம், திருமதி கணேசதாசன் மனோகரி, திருமதி உருத்திரசிங்கம் மனோரதி, மனோகரன், ரவீந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை ( 23.05.2022) திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணி தொடக்கம் 11.30 மணிவரை 'HOPITAL DE BICETRE , 78 / Général Leclerc, 94270 le Kremlin Bicetre Secteur Jaune Bat, Giovanni Mourgan - Port 64 (METRO -LE KREMLIN-BICETRE ) என்னும் முகவரியில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, CREMATORIUM DU VAL-DE-BIEVRE, Rue du Ricardo 94110 ARCUEIL (RER B Station LAPLACE - Bus 323 Dir GAMBATA - Station MALLERET- JOINVILLE) என்னும் முகவரியில் பகல் 14.00 மணிக்கு தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல் :**
**குடும்பத்தினர்**

**தொடர்புகளுக்கு:**

| | | | |
|---|---|---|---|
| குணம் | (சகோதரி | - இலங்கை | - 0094 777 527 231) |
| மனோகரன் | (சகோதரன் | - பிரான்ஸ் | - 0033 659 799 471) |
| ரவீந்திரன் | (சகோதரன் | - பிரான்ஸ் | - 0033 620 425 033) |
| மனோரதி | (சகோதரி | - பிரான்ஸ் | - 0033 695 190 513) |
| மனோகரி | (சகோதரி | - பிரித்தானியா | - 0044 741 579 1300. |

(cs44787) (2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** புதிய முயற்சி ஒன்றில் வெற்றி காண்பீர்கள். நண்பர்களால் உதவி உண்டாகும். உங்கள் செல்வாக்கு உயரும் நாள். மேலதிகாரிகளின் பாராட்டுக்கு ஆளாவீர்கள்.

**இடபம்:** திடீர் நெருக்கடியால் சங்கடம் ஏற்படும். பின்னர் முயற்சியால் வெற்றியாகும். தடைகளில் இருந்து மீளுவீர்கள். நேற்றைய நெருக்கடி இன்று விலகும்.

**மிதுனம்:** இன்று மதியத்துக்கு மேல் உங்கள் செயலில் லாபநிலையை அடைவீர்கள். தொழிலில் தடைகளை தாண்டி சாதிக்க வேண்டிய நாள். ஒரு நல்ல செய்தி வீடு வந்து சேரும்.

**கடகம்:** நண்பர்களின் உதவியால் நினைத்ததை முடிப்பீர்கள். பெரியோர்களின் ஆசி கிட்டும். குடும்பத்தில் இருந்து வந்த நெருக்கடி விலகும். அரசு வழியில் ஆதாயம் அடைவீர்கள்.

**சிம்மம்:** நேற்றைக்குரிய உழைப்பின் பயனை இன்று அடைவீர்கள். யோகமான நாள். தொழிலில் இருந்து வந்த மறைமுக எதிர்ப்பு விலகும். உற்சாகம் பிறக்கும். நண்பர்கள் ஒத்துழைப்பார்கள்.

**கன்னி:** உங்கள் செயலில் சில தடைகள் தோன்றி மறையும். சங்கடங்களில் இருந்து விடுபடுவீர்கள். முயற்சிகளால் முன்னேற்றம் காண்பீர்கள். அலைச்சல் அதிகரிக்கும் .

**துலாம்:** உங்கள் எண்ணத்தில் உருவான செயல் ஒன்று இன்று நிறைவேறும். வேகமாக செயற்பட்டு நெருக்கடிகளில் இருந்து விடுபடுவீர்கள். அரசு வழியில் சில சங்கடம் ஏற்படும்.


**விருச்சிகம்:** வருமானத்தில் உண்டான தடைகள் விலகி ஆதாயம் அடைவீர்கள். உங்களுக்கு இருந்த நெருக்கடி இன்று விலகும். மகிழ்ச்சி உண்டாகும். நம்பிக்கையுடன் செயற்பட்டு உங்கள் செயலில் வெற்றியைக் காண்பீர்கள்.

**தனுசு:** யோசித்து செயற்பட வேண்டிய நாள். குடும்பத்தில் சலசலப்பு தோன்றி மறையும். இன்று திட்டமிட்டுச் செயற்படுவதால் நஷ்டத்தைத் தவிர்க்கலாம். வார்த்தைகளில் நிதானம் தேவை.

**மகரம்:** வீண்செலவுகளைக் கட்டுப்படுத்த முயற்சிப்பீர்கள். நிம்மதி ஏற்படும் நாள். தொழிலில் இருந்து வந்த நெருக்கடி விலகும். தொழிலில் வெற்றி காண்பீர்கள். தனித்திறன் வெளிப்படும் நாள்.

**கும்பம்:** செலவு அதிகரிக்கும் என்பதால் கவனம் தேவை. குடும்பத்தின் தேவைக்காகச் செலவு அதிகரிக்கும். பயணத்தில் விழிப்புணர்வு அவசியம். எதிர்பார்த்திருந்த ஒன்று நிறைவேறும்.

**மீனம்:** மதியத்துக்கு மேல் நீங்கள் எதிர்பார்த்த பணம் உங்கள் கைக்கு வந்து சேரும். குடும்பத்தில் ஒருவரின் அவசிய தேவையை நிறைவேற்றுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி ஏற்படும்.







### மாணவர்கள்...

தைக்குள் வீதித் தடைகளை மீறி, போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பிரவேசிக்க முயற்சித்தபோது, கண்ணீர்ப்புகை மற்றும் நீர்த்தாரைத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

அரசாங்கத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து, மருதானை தொழில்நுட்ப சந்திக்கு அருகில் நேற்றுமதியம் மாணவர்கள் ஆர்ப்பாட்டப் பேரணியை ஆரம்பித்தனர். பின்னர், பேரணியாக கொழும்பு கோட்டைப் பகுதியை அடைந்தனர். அங்கிருந்து முன்னோக்கிச் செல்ல முற்பட்ட போதே பொலிஸார் நீர்தாரைப் பிரயோகம் மற்றும் கண்ணீர்ப்புகைப் பிரயோகம் மேற்கொண்டு பேரணியைக் கலைத்தனர்.

இதேவேளை - உயர் தேசிய டிப்ளோமா கற்கை நெறி மாணவர் ஒன்றியத்தின் மாணவர்களுக்கு, கொழும்பு கோட்டை நீதிமன்ற அதிகார பிரதேசத்துக்குட்பட்ட வீதிகள் சிலவற்றுக்குள் பிரவேசிக்க தடை விதிக்கப்பட்டிருந்தது. கோட்டை நீதிமன்ற அதிகார பிர்தேசத்துக்குட்பட்ட பல வீதிகள், ஜனாதிபதி செயலகம் உள்ளிட்ட அரச நிறுவனங்கள் மற்றும் உணவகங்கள் அமைந்துள்ள பகுதிகளுக்குள் பிரவேசிக்கத் தடை விதித்து, கொழும்பு கோட்டை நீதவான் மஞ்சுள திலகரத்ன இந்த உத்தரவைப் பிறப்பித்திருந்தார். (அ-ஒ-22)

### வீதியை...

நிலையத்தின் விநியோக நடவடிக்கைக்கு இடையூறு ஏற்படுத்தப்படுமாயின், அந்த நிலையத்துக்கு எரிபொருள் விநியோகிக்காதிருக்க கொள்கை ரீதியான தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்தார். (அ-ஒ-இ)

### யாழ். மாநகர...

நர் ஜீவன் தியாகராஜா தீர்மானித்துள்ளதாக நம்பகரமாக அறியமுடிகின்றது. இது தொடர்பில் கடந்த சில தினங்களாக அவர் தீவிர ஆலோசனையில் ஈடுபட்டுள்ளார் எனவும் தெரியவருகின்றது.

ஆரியகுளத்தில் வெசாக் அலங்காரங்களை அமைப்பதற்கு படையினர், யாழ். மாநகர சபையிடம் அனுமதி கோரியிருந்தனர். ஆரியகுளத்தில் எந்தவொரு மத அடையாளங்களுக்கும் இடமளிப்பது இல்லை என்று மாநகர சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்ததால் அனுமதி வழங்க முடியாது என்று பதிலளிக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து வடக்கு மாகாண ஆளுநர், வெசாக் அலங்காரங்களை அமைக்க அனுமதி வழங்கவேண்டும் என்று மாநகர சபை பதில் மேயரிடம் நேரடியாகக் கோரியிருந்தார். அதற்கு அமைவாக இணையவழியில் மாநகர சபை உறுப்பினர்களின் கூட்டம் நடத்தப்பட்டது. அதன்போது முன்னரே அனுமதி கோரவில்லை என்றும், வேண்டுமென்றே வெசாக் அன்று அனுமதி கோரியதாகவும் குறிப்பிட்ட உறுப்பினர்கள் எழுத்துமூலம் அனுமதி கோரினால் ஆராயலாம் என்று தெரிவித்திருந்தனர்.

இதனையடுத்து , தனது உத்தரவை உதாசீனப்படுத்தியதால், மாநகர சபையை கலைப்பதற்கான ஏற்பாடுகள் தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநர் தீவிர ஆலோசனைகளில் ஈடுபட்டுள்ளார். அதற்குரிய வழிகாட்டல்கள் கொழும்பைத் தளமாகக் கொண்ட சில தரப்புக்களால் வழங்கப்பட்டுள்ளன என்று அறியமுடிகின்றது.

அதற்கு அமைவாக ஓய்வுபெற்ற நீதிபதி தலைமையில் விசாரணை ஒன்றை முன்னெடுக்க ஆளுநர் தீர்மானித்துள்ளார் எனத் தெரியவருகின்றது. இதற்காக சில ஓய்வுபெற்ற நீதிபதிகளையும் அவர் அணுகியுள்ளார் என்று அறியமுடிகின்றது. (அ-ஒ-5)

### 80 ஆயிரம்...

யோகிப்பதற்கான கையிருப்பு உள்ளதாகவும் லிட்ரோ நிறுவன தலைவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, அடுத்த வாரத்தில் மேலும் 2 கப்பல்கள் நாட்டை வந்தடையவுள்ளதுடன், அவற்றுக்கான கட்டணத்தை நாளை திங்கட்கிழமை செலுத்தத் திட்டமிட்டுள்ளதாகவும் லிட்ரோ நிறுவன தலைவர் விஜித்த ஹேரத் கூறினார். (அ-ஒ-இ)

### எரிபொருள்...

விட்டுத் திரும்பிய பவுஸர் மீதும், சாரதி மற்றும் உதவியாளர் மீதும் தாக்குதல் நடத்திய சந்தேகத்தில் 26 வயதான சகோதரர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் இருவரும் மதுபோதையில் இருந்தனரென சுன்னாகம் பொலிஸார் தெரிவித்தனர். (அ-ஒ-9-17-125)

### 1 லட்சத்து...

என்று தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த இரண்டு நாள்களாக பெற்றோல் விநியோகம் இடம்பெறவில்லை. இந்த நிலையில் நேற்றுமுன்தினம் மாலையிலிருந்து பெற்றோல் விநியோகம் இடம்பெற்று வருவதால் வடக்கு மாகாணத்திலும் ஒவ்வொரு எரிபொருள் நிரப்பு நிலையங்களின் முன்பாகவும் நீண்ட வரிசை காணப்பட்டது.

மோட்டார் சைக்கிள்களுக்கு தனியான வரிசையும், முச்சக்கரவண்டிகள் மற்றும் கார்களுக்கு இன்னுமோர் வரிசையுமாக ஒவ்வொரு எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு முன்பாகவும் பல கிலோ மீற்றர் நீள வரிசைகள் நேற்றுக் காணப்பட்டன.

சில இடங்களில் குழப்பமான நிலைமையும் ஏற்பட்டது.

மேலும் சில எரிபொருள் நிரப்பு நிலையங்களில் மண்ணெண்ணையும் விநியோகிக்கப்பட்டது. இதற்கும் நீண்ட வரிசையைக் காண முடிந்தது. (அ-ஒ-5-17)

### ஐஸ்கிறீம்...

ஐஸ்கிறீம் விற்பனை நிலையமொன்றின் மூன்றாவது மாடியில் நேற்றிரவு 7 மணியளவில் திடீரெனத் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

இதுகுறித்து உடனடியாக யாழ்ப்பாணம் மாநகர சபையின் தீயணைக்கும் பிரிவுக்கு அறிவிக்கப்பட்டது. அதற்கிடையில் விற்பனை நிலையத்தின் பணியாளர்கள் இணைந்து தீயை கட்டுக்குள் கொண்டு வந்தனர்.

தீ விபத்துக்கான காரணம் உடனடியாகத் தெரியவரவில்லை. சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணப் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (அ-ஒ-125)

### ஆரியகுளத்தை...

உருவாக்கி கொந்தளிப்பை ஏற்படுத்தும். ஆரியகுளத்தை வைத்து அரசியல் செய்வதை நாம் விரும்பவில்லை. இவ்வாறு யாழ். மாநகர மேயர் வி.மணிவண்ணன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஆரியகுளத்தில் அரசியல் செய்வதை நாம் விரும்பவில்லை. அது ஒரு சாதாரண பொழுதுபோக்கு மையம். மக்களுக்காகக் கட்டப்பட்ட விடயத்தை மக்களிடம் விட்டுவிடுங்கள். அதை வைத்து குறுகிய அரசியலை நடத்த வேண்டாம். இவ்வாறானதொரு நிலைமை ஏற்படுமாக இருந்தால் அதற்கு எதிரான மக்கள் மயப்படுத்தப்பட்ட போராட்டத்துக்கு அனைத்து அரசியல் கட்சிகளும் தயாராக வேண்டுமென நாம் வேண்டுகோள் விடுக்கின்றோம். இவ்வாறான ஒரு செயற்பாடு இடம்பெறுமாக இருந்தால் பொதுமக்கள் ஜனநாயக ரீதியாக உங்களுடைய எதிர்ப்பைக் காட்டி போராட வேண்டும் - என்றார். (ஒ-20)

### நாடு...

வைத்திருப்பவர்களை கைது செய்ய நாடு முழுவதும் இன்று விசேட சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார். (அ-ஒ-17)

### டீசல் கப்பல்...

அடங்கிய ஒரு தொகுதி டீசல் கப்பல் கொழும்பை நேற்று வந்தடைந்துள்ளது. (அ-ஒ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிபொருளை வீடுகளில் சேமிப்பதை தவிர்க்கவும்

## எரிசக்தி அமைச்சர் கோரிக்கை



**கொழும்பு, மே 22**

**எரிபொருளுக்குத் தட்டுப்பாடு காணப்பட்டாலும், மின்வெட்டு நேரத்தை அதிகரிக்காதிருக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அதேவேளை மக்கள் வீடுகளில் எரிபொருளைச் சேமிப்பதை நிறுத்தவேண்டும் என்று எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.**

வலுசக்தி அமைச்சில் நேற்று நடந்த ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:- வாகனங்களுக்குத் தேவையான எரிபொருளை மட்டும் மக்கள் பெற்றுக்கொள்ளவேண்டும். எரிபொருளை வீடுகளில் சேமித்து வைத்துக்கொள்வதை மக்கள் தவிர்க்க வேண்டும்- என்றார்.

அதேவேளை, நாட்டில் எரிபொருள்களுக்குக் கடும் தட்டுப்பாடு நிலவும் நிலையில் நேற்றும் எரிபொருள் நிரப்பு நிலையங்கள் முன்பாக மக்கள் நீண்ட வரிசைகளில் காத்திருந்ததை அவதானிக்க முடிந்தது. (ஏ-இ)

# பெரமுன கட்சிக்குள் ரணிலுக்கு எதிர்ப்பு

கொழும்பு, மே 22

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன நாடாளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிர்ப்பு ஏற்பட்டுள்ளது என்று சிங்கள இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

தான் பிரதமராக பதவியேற்ற பின்னர், 5 பில்லியன் டொலர் கிடைக்கும் என ரணில் விக்கிரமசிங்க, பொதுஜன பெரமுனவின் தலைவர்களிடம் கூறியிருந்தமையே இதற்குக் காரணம் எனக் கூறப்படுகிறது.

இதுவரை வெறும் ஒரு டொலரைக்கூட நாட்டுக்கு கொண்டுவர பிரதமர் தவறியுள்ளார் என்று கூறியே பொதுஜன பெரமுன நாடாளுமன்ற உறுப்பினர்கள் அதிருப்தி அடைந்துள்ளனர் என்று கூறப்படுகின்றது.

அடுத்த ஆளும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுக் கூட்டத்தில் பிரதமரிடம் இது தொடர்பாகக் கேள்விகளை எழுப்ப நாடாளுமன்ற உறுப்பினர்கள் தயாராகி வருகின்றனர் என்றும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஏ-இ)


## திருமண சேவை

உள்நாடு வெளிநாடு மற்றும் அரச, தனியார் துறை உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் ஏற்ற மண மக்களை தேர்ந்து எடுக்க அழைக்கவும். வேலைக்கு ஆட்கள் தேவை

076 112 4145

## சமையலாள் தேவை

யாழ். நகரில் தனியார் நிறுவனம் ஒன்றில் தனிநபர் ஒருவருக்கு சமையல் செய்யக் கூடிய ஒருவர் தேவை.
சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம்.
**பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.**

070 356 7811

## வேலை வாய்ப்பு

எமது Grate Master's PVT Ltd நிறுவனத்தின் புதிய கிளைகளுக்கான பதவி வெற்றிடங்கள் பூர்த்தி செய்யப்படவுள்ளது. நாட்டின் அசாதாரண சூழ்நிலையை கருத்திற்கொண்டு மிகக் குறைவான தகைமை அடிப்படையில் இளைஞர், யுவதிகள் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளனர். முன் அனுபவம் ஏதுமின்றி பயிற்சிகளுடன் கூடிய தொழில்வாய்ப்புக்கள் வழங்கப்படும். நேர்முகத்தேர்வின் போது தெரிவுசெய்யப்படுபவர்களுக்கு பயிற்சியின் போது நிறுவனத்தினால் கொடுப்பனவுகள் வழங்கப்படும். பயிற்சியின் பின்னர் கவர்ச்சிகரமான ஊதியம் பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு தொடர்புகொள்ளலாம்

077 297 1027, 076 992 9819

## மணமகள் தேவை

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அவுஸ்திரேலியாவில் பிரஜாவுரிமை பெற்ற 1976ல் பிறந்த விவாகரத்துப் பெற்ற இந்து உயர் கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த எஞ்சினியர் மணமகனுக்கு பெற்றோர் உள்நாட்டு / வெளிநாட்டு அழகிய படித்த மணமகளை எதிர் பார்க்கின்றனர். மணமகனுக்கு மூன்றாம் இடத்தில் சூரியன், செவ்வாய் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

தொடர்புக்கு:-

077 2659 883, 077 9530 606

## தச்சு வேலையாட்கள் தேவை

எமது நிறுவனத்திற்கு தச்சு வேலையாட்கள் தேவை
(No 35,கொட்டைக்காட்டு லேன் கோண்டாவில் பஸ் டிப்போ அருகாமை)

077 300 1763 , 021 221 9909


# மரண அறிவித்தல்

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 14.07.1931 | 21.05.2022 |



## திருமதி சின்னத்துரை கனகம்மா

அல்வாய் வடக்கு ஜயாலத்தையை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி சின்னத்துரை கனகம்மா 21.05.2022 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பையா வள்ளிப்பிள்ளை தம்பதியின் சிரேஷ்ட புத்திரியும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளை சின்னத்துரையின் அன்பு மனைவியும் சரஸ்வதி, பரஞ்சோதி, தங்கராசா ஆகியோரின் சகோதரியும் சிவாரோக்கியம், மனோரஞ்சிதம் ஆகியோரின் மைத்துனியும் சசிகரனின் அன்புப் பாட்டியும் காலஞ்சென்ற கோபாலகிருஷ்ணன் (Retired Assistant Superintendent of Police) மற்றும் ராஜேஸ்வரியின் அண்ணியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.05.2022) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் மதியம் 12 மணி அளவில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பிற்பகல் 2 மணிக்கு சுப்பர் மடம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

077 716 9296
077 307 1615

தகவல்:
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 02.04.1976 | 19.05.2022 |



## திருமதி கேதீஸ்வரன் மதனி

மடத்தடி கிழக்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கேதீஸ்வரன் மதனி கடந்த 19.05.2022 வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பாலசுந்தரம் கோகிலாதேவி தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சின்னத்துரை தங்கம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும், கேதீஸ்வரனின் (ஈஸ்வரி களஞ்சியம் - சாவகச்சேரி) அன்பு மனைவியும், கஜானனின் அன்புத் தாயாரும் மதனகுமார், கோகிலவதனி, யசோதரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், இராசலட்சுமி, லோகேஸ்வரன், விஜயலட்சுமி, தனலட்சுமி, ஈஸ்வரன், மாகலட்சுமி, அன்னலட்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.05.2022) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மடத்தடி கிழக்கு,
சாவகச்சேரி

077 552 5943
ரவி (கணவர்)

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மே 9 வன்முறை

# பொலிஸ்மா அதிபரிடமும் நேற்று வாக்குமூலம் பதிவு

கொழும்பு, மே 22
பொலிஸ் விசேட அதிரடிப் படையின் கட்டளை அதிகாரி, பொலிஸ்மா அதிபர் மற்றும் பொலிஸ் விசேட பணியகத்துக்குப் பொறுப்பான பிரதி பொலிஸ்மா அதிபர் ஆகியோரிடம் குற்றப்புலனாய்வு பிரிவினர் நேற்று 9 மணிநேரம் வாக்குமூலம் பதிவு செய்துள்ளனர். மே 9 தாக்குதல் சம்பவம் தொடர்பில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.
பொலிஸ்மா அதிபர் வன்முறையைக் கட்டுப்படுத்த வேண்டாம் என்று பணிப்புரை விடுத்தாரென, நாடாளுமன்றத்தில் ஆளும் கட்சியினர் குற்றஞ் சுமத்தியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-

# பாதாள உலகக் குழுவின் உறுப்பினரின் சகோதரர் கைது

கொழும்பு, மே 22
அமைதி போராட்டக்காரர்கள் மீது ஆளும் கட்சி ஆதரவாளர்கள் மூர்க்கத்தனமாக நடத்திய தாக்குதலின்போது, போராட்டக்காரர் ஒருவரின் தலையில் இரும்புக் கம்பியால் தாக்கியதாகக் கூறப்படும் ஒருவரை குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர் நேற்றுக் கைது செய்துள்ளனர்.
பாதாள உலக உறுப்பினர் ஒருவரின் சகோதரர் என அறியப்படும் 'சதா நாலக' எனும் நபரையே இவ்வாறு ஹோகந்தர பகுதியில் மறைந்திருந்த போது கைது செய்துள்ளனர்.
குறித்த நபர், கடந்த 9 ஆம் திகதி காலிமுகத்திடல் மீதான தாக்குதலின் போது அரசாங்க ஆதரவாளர்களுடன் ஸ்கூட்டி ரக மோட்டார் சைக்கிளில் காலி முகத்திடலுக்குள் புகுந்துள்ளதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.
இதற்கு முன்னர் சந்தேக நபர், மிரிஹானையில் ஜனாதிபதி இல்லத்துக்கு அருகே நடந்த ஆர்ப்பாட்டத்தின்போது, இராணுவ பஸ் வண்டியை செலுத்தி வந்து ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு குறுக்காக நிறுத்தியுள்ளமை தொடர்பிலும் தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. அத்துடன் நாடாளுமன்ற சுற்று வட்டம் அருகே மே 5 ஆம் திகதி நடந்த ஆர்ப்பாட்டத்தின்போதும், சந்தேக நபர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக அங்கு சென்று கோஷங்களை எழுப்பியுள்ளமை தெரியவந்துள்ளது. (ஒ-இ)

# பிரதானிகளின் 'சூம்;' கலந்துரையாடல்: சி.ஐ.டி. அவதானம்

கொழும்பு, மே 22
கடந்த 9 ஆம் திகதி வன்முறைகள் இடம்பெற்ற அன்று காலை வேளையில் கொழும்பு பொலிஸ் பிரதானிகளிடையே இடம்பெற்றதாகக் கூறப்படும் சூம் கலந்துரையாடல் தொடர்பிலும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் (சி.ஐ.டி): அவதானம் திரும்பியுள்ளது.
கொழும்பு பொலிஸ் உயர் அதிகாரிகளிடையே நடந்த அந்தக் கலந்துரையாடலில் பேசியுள்ள பொலிஸ் பிரதானி ஒருவர், தனது கட்டளை வரும் வரை ஒரு சொட்டு தண்ணீர்ப் பிரயோகம் கூட செய்யக் கூடாது என பொலிஸ் அதிகாரிகளை எச்சரித்துள்ளார். அத்துடன் இதற்கு முன்னர் தன்னை மீறி தண்ணீர்ப் பிரயோகம் செய்த பொலிஸ் மேலதிக படைப் பிரிவின் கட்டளை அதிகாரியை எந்த பொறுப்புக்களும் வழங்காமல் இடமாற்ற நடவடிக்கை எடுத்ததாக அதன்போது அந்த பொலிஸ் பிரதானி எச்சரித்திருந்ததாக சி.ஐ.டிக்கு தகவல்கள் கிடைத்துள்ளன. அதன் படியே குறித்த சூம் கலந்துரையாடல் குறித்தும் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (ஒ-இ)

# அகதிகள் படகு ஆஸியில் தடுப்பு

கொழும்பு, மே 22
இலங்கையிலிருந்து அகதிகளை ஏற்றிச் சென்றிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படும் படகு ஒன்று அவுஸ்ரேலியக் கடல் எல்லையில் மீட்கப்பட்டுள்ளது. அந்த நாட்டின் எல்லைப் பாதுகாப்பு பிரிவின் ஊடக அறிக்கை ஒன்றின் படி, சட்டவிரோதமான படகு ஒன்று அவுஸ்ரேலியாவுக்குள் செல்ல முயற்சித்த போது அவதானிக்கப்பட்டு தடுக்கப்பட்டுள்ளது. இந்தப் படகு இலங்கையில் இருந்து வந்திருப்பதாகவும், அதில் உள்ளவர்களை பயணத்தை ஆரம்பித்த இடத்தில் இருந்து பாதுகாப்பாக அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (அ-ஒ-இ)

# எரிவாயுவைப் பெற முற்பதிவு முறை

கொழும்பு, மே 22
லிட்ரோ எரிவாயு நிறுவனம் மூலம் நாளை முதல் எரிவாயு விநியோகம் தொடர்பான சகல தகவல்களையும் வழங்குவதற்காக புதிய செயலி ஒன்றை அறிமுகப்படுத்தவுள்ளதாக லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் விஜித ஹேரத் தெரிவித்தார்.
'லிட்ரோ எரிவாயு விநியோகம் மற்றும் எரிவாயு கிடைக்கும் இடங்கள் குறித்து நுகர்வோர் மற்றும் முகவர்களுக்கு தகவல்கள் வழங்கும் வகையில் லிட்ரோ எரிவாயு நிறுவனம் மொபைல் செயலியை நாளை அறிமுகப்படுத்தவுள்ளது. கையடக்க தொலைபேசி மூலம் நுகர்வோர், முகவர்கள் மற்றும் துணைமுகவர்கள் தகவலைப்பெற முடியும். வரிசையில் நிற்பதற்கு முன் வாடிக்கையாளர்கள் தங்களுக்கு வழங்கப்படும் எரிவாயு சிலிண்டர்களின் திகதி மற்றும் எண்ணிக்கைகள் குறித்து அந்தப் பகுதி முகவர்களிடம் கேட்டு தகவல்களைத் தெரிந்துகொள்ள இந்தச் செயலி உதவும்' என்றும் நிறுவனத்தின் தலைவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (அ-ஒ-இ)

### டெங்கால்...

துள்ளனர். இவர்களில் 4 பேர் 18 வயதுக்குட்பட்டவர்கள்.
கொழும்புத்துறை - பாண்டியன்தாழ்வைச் சேர்ந்த செண்.பற்றிக்ஸ் கல்லூரி மாணவனான கருணாகரன் ஆரோன் (வயது-11) என்பவரே நேற்று டெங்கால் உயிரிழந்துள்ளார்.
கடந்த 18ஆம் திகதி மாணவனுக்கு காய்ச்சல் ஏற்பட்டுள்ளது. பனடோல் எடுத்தும் காய்ச்சல் நின்றுள்ளது. மீண்டும் மறுநாள் 19ஆம் திகதி வயிற்றோட்டம், சத்தி என்பன இருந்துள்ளன. இதனையடுத்து 20ஆம் திகதி யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் மாணவன் சேர்க்கப்பட்டுள்ளான். நேற்று மாலை அவன் உயிரிழந்துள்ளான்.
இறப்பு விசாரணையை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார்.
யாழ்ப்பாண மாவட்டத்தில் இதுவரை, 11 வயது, 18 வயது, ஒன்றரை வயதுக் குழந்தை என 18 வயதுக்குட்பட்ட மூன்று பேர் டெங்கால் உயிரிழந்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-26-125)

### 24 மணிநேர...

மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.
திருத்தப் பணிகளின் பின்னர், நுரைச்சோலை அனல்மின் நிலையம் இன்று முழுமையாக இயங்கும் என எதிர்பார்க்கப்படும் நிலையில், நீர் மின் உற்பத்தியுடன் இந்த வார தொடக்கத்தில் நாடு முழுவதும் தடையில்லா மின்சாரத்தை வழங்க அரசாங்கம் ஆலோசித்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.
ஜூன் மாதத்திலிருந்து தடையின்றி மின்சாரத்தை வழங்க முன்னதாகத் திட்டமிட்டிருந்தோம். எனினும், சாதாரண தரப்பரீட்சை ஆரம்பமாவதால், இரவு நேரத்திலும், பரீட்சை நடைபெறும் காலப் பகுதியிலும் மின்வெட்டை மேற்கொள்ளாதிருக்க தீர்மானிக்கப்பட்டது.
இந்நிலையில் நாளை திங்கட்கிழமை 23ஆம் திகதியிலிருந்து தடையின்றி மின்சாரத்தை விநியோகிப்பதற்கு எவ்வளவு எரிபொருள் தேவைப்படுமென, இலங்கை மின்சார சபையிடம் தகவல் கோரப்பட்ட நிலையில், அந்தத் தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன. எனவே, இந்த வாரம் முதல் தடையின்றி மின்சாரத்தை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.
ஜூன் முதலாம் திகதிதான் எமது இலக்காக இருந்தது, எனினும், 10 நாள்களுக்கு முன்னரே அதனைச் செயற்படுத்த எதிர்பார்க்கின்றோம்- என்றார் அமைச்சர் காஞ்சன. (அ-ஒ-இ)

### உயிர்காக்கும்...

நாட்டில் ஏற்பட்டுள்ள மருந்துத் தட்டுப்பாட்டை அடுத்து கொழும்பு சுகாதார அமைச்சு சில அறிவுறுத்தல்களை, மாகாண மற்றும் தேசிய மருத்துவமனைகளுக்கு விடுத்தது. நன்கொடையாளர்களிடமிருந்து நேரடியாக மருந்துகளைப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் அது தொடர்பான விவரங்களை தமக்கு அனுப்பி வைத்தால் போதுமானது எனவும் அறிவுறுத்தியிருந்தது. இதற்கு அமைவாக வடக்கு மாகாண சுகாதார அமைச்சு மற்றும் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை என்பன மருந்துகளை நன்கொடையாளர்களிடமிருந்து பெற்றுக்கொண்டன.
யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையால், சிங்கப்பூர் செஞ்சிலுவைச் சங்கத்திடம் ஒரு தொகுதி மருந்துகளுக்கான கோரிக்கை முன்வைக்கப்பட்டது. அதற்கு அமைவாக சிங்கப்பூர் செஞ்சிலுவைச் சங்கமும் அதனை வழங்க இணங்கியிருந்தது.
இந்த நிலையில் மூன்று தினங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை வட்டாரங்களை தொலைபேசியூடாகத் தொடர்பு கொண்ட வடக்கு ஆளுநர், தனக்குத் தெரியாமல் அதனை எவ்வாறு பெற்றுக்கொள்ளலாம் என்று கேட்டுள்ளார். அத்துடன் அந்த மருந்துப் பொருள்கள் கிடைக்கப்பெறுவதற்கும் இடையூறு ஏற்படுத்தியுள்ளார். இந்தத் தகவலை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பெயர் குறிப்பிட விரும்பாத அதிகாரி ஒருவர் உதயனிடம் உறுதி செய்தார்.
அதேதினத்தில், தனக்குத் தெரியாமல் எந்தவொரு நன்கொடையாளரிடமிருந்தும் மருந்துப் பொருள்களைப் பெற்றுக்கொள்ளக்கூடாது என்று வடக்கு மாகாண சுகாதார அமைச்சுக்கும் ஆளுநர் வாய்மொழிமூலமான பணிப்புரையையும் விடுத்துள்ளார்.
இதேவேளை- வடக்கு மாகாண ஆளுநர், வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்களத்துக்கு நன்கொடையாளர்களிடமிருந்து கிடைக்கப்பெற்றதாகத் தெரிவித்து இதுவரை 3 தடவைகள் மருந்துப் பொருள்களைக் கையளித்துள்ளார். ஆனால், அந்த நன்கொடையாளர்கள் யார்? அவர்கள் வழங்கிய உதவித் தொகை எவ்வளவு? என்ற விவரங்களை அவர் வழங்கவில்லை.
அதேவேளை மூன்று தடவைகளும் கொழும்பைச் சேர்ந்த ஒரே நிறுவனத்தின் ஊடாகவே மருந்துப் பொருள்கள் கொள்வனவு செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ளன.
அந்த நிறுவனம் கொரோனா இடர்காலப் பகுதியில், அன்டிஜென் சோதனைக் கருவிகளைக் குறைந்த விலையில் கொள்வனவு செய்து அரசுக்கு கூடிய விலையில் விற்பனை செய்ததாகக் குற்றஞ் சுமத்தப்பட்டு சர்ச்சையில் சிக்கியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.
இந்த விடயங்கள் தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜாவின் கைத்தொலைபேசிக்கு அழைப்பை எடுத்து அவரது பதிலைப் பெற்றுக்கொள்ள 'உதயன்' முயற்சித்தபோதும் அவர் அழைப்புக்கு பதிலளிக்கவில்லை. (அ-ஒ-5)

### டீசல்...

பட்ட விடத்தல்பளையில் வீடு ஒன்றில் டீசல் மற்றும் பெற்றோல் பதுக்கி விற்பனை செய்த குற்றச்சாட்டில் 47 வயதான ஒருவரை சந்தேகத்தில் கொடிகாமம் பொலிஸார் நேற்றுக் கைது செய்துள்ளனர். 280 லீற்றர் டீசலும் 60 லீற்றர் பெற்றோலும் கைப்பற்றப்பட்டது. (ஒ-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோதுமை ஏற்றுமதிக்கு ஆப்கான் தடைவிதிப்பு

காபூல், மே 22

உள்நாட்டுத் தேவையைப் பூர்த்தி செய்யும் முகமாக ஆப்கானிஸ்தானில் இருந்து கோதுமை ஏற்றுமதிக்கு தலிபான்கள் தடைவிதித்துள்ளனர்.

ஆப்கானிஸ்தானில் தலிபான்களின் புதிய அரசை உலக நாடுகள் அங்கீகரிக்காதமையால் அங்கு சர்வதேச நிதி கிடைப்பது தடைப்பட்டுள்ளது.

இதனால் அங்கு கடும் நிதிநெருக்கடி ஏற்பட்டு உணவுப்பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தானில் கடுமையான உணவுப்பற்றாக்குறையை 2 கோடிக்கும் அதிகமான மக்கள் எதிர்கொள்கின்றனர் என ஐ.நா. தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் உள்நாட்டுத் தேவையைப் பூர்த்தி செய்ய ஆப்கானிஸ்தானில் இருந்து கோதுமை ஏற்றுமதிக்குத் தலிபான்கள் தடைவிதித்துள்ளனர். (ச-இ)

## பராமரிப்பாளர் தேவை

முல்லைத்தீவு ஒட்டிசுட்டானில் உள்ள வயோதிப தாயாரை வீட்டில் தங்கி நின்று பராமரிப்பதற்கு பெண் பராமரிப்பாளர் தேவை. வயதெல்லை 35 - 55 வரை விரும்பத்தக்கது. சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கலாம். (CS 44714) (3/6)

**077 628 7216, 077 634 7432**

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் நாவற்குழி சந்தியில்**
**20 பரப்பு காணி விற்பனைக்குண்டு**

**நிலப்பரப்பு**

- A 32, A9 இணையும் பிரதான வீதியில் (றவுண்டப் வோட்)
- A9 வீதியுடன் 6 பரப்பும்.
- A9 பிரதான வீதியில் இருந்து 18அடி பாதையுடன் 2 பரப்பாகவும் 1½ பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- நல்ல தண்ணீர் ஊற்று சூழல்
- திருமண மண்டபங்கள் அமைப்பதற்கும்
- மருந்தகங்கள் அமைப்பதற்கும் (பார்மசி)
- அனைத்து விதமான வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்.

**பார்வையிடும் நேரம் :**
**காலை 6.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை**
தரகர் தேவையில்லை

**தொடர்புகளுக்கு : ஜெயம்**

**077 814 7389, 077 241 7589**

## விற்பனைக்கு

புதிய பக்ஸ் மெசின் Panasonic Japan விற்பனைக்குள்ளது. விலை பேசித் தீர்மானிக்கலாம். (CS 44750) (3/6)

**077 900 0352**

## வீடு வாடகைக்கு

சுன்னாகம் Dr.சுப்பிரமணியம் வீதி, (றோமன் கத்தோலிக்க பாடசாலை அருகாமையில்) அமைந்துள்ள சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு விடப்படும். நிறுவனாங்களும் விரும்பத்தக்கது (cs 44726) (2.6)

தொடர்பு: 076 313 6371
Viber: 076 323 2533

## ENGLISH CLASSES

**யாழ்நகரில் தனி வகுப்புகள்**
**ஆண்டு 07 தொடக்கம் பட்டதாரிகள், தொழில்புரிவோர்வரை சரளமாக ஆங்கிலம் பேசவும் எழுதவும்**
**GCE O/L English Literature**
(er 35995) (2.6)

**K.Ganesh B.A 077 766 8725**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் புத்தூரில் 81 பரப்புக்காணி விற்பனைக்கு (மேட்டு நிலம்)




- ✓ பருத்தித்துறை வீதியிலிருந்து 1 1/2 KM தூரம்
- ✓ பருத்தித்துறை வீதி புத்தூர் சந்தியிலிருந்து மட்டுவில் அம்மன் கோயில் செல்லும் காபெட் வீதியில் பிரதான வீதியிலிருந்து **200 M** தூரம்.
- ✓ வீடு கட்டுவதற்கும், கால்நடை பண்ணை அமைப்பதற்கும், விவசாயம் செய்வதற்கும் உகந்த இடம்.
- ✓ அயலில் குடியிருப்புக்கள் உள்ள சூழல்.
- ✓ 5 பரப்பாகவும், 10 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- ✓ புத்தூர் மட்டுவில் வீதியில் பிரதான நீர்த்தாங்கி அருகாமையில்
- ✓ நல்ல தண்ணீரூற்று
- ✓ பார்வையிடும் நேரம் : காலை 8.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை
- ✓ ஒரு பரப்பின் விலை : **150,000** (ஒரு லட்சத்து ஐம்பதாயிரம்)

**தொடர்பு: 074 29 13 725**
**074 29 13 726**
**074 29 13 727**

(CS 877B) 1/6

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடி சந்திக்கு அருகாமையில் 24 பரப்புக் காணிவிற்பனைக்கு.




- ✓ இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- ✓ கைதடி சித்த போதனா வைத்தியசாலை, யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவ பீடம் கிழக்கு எல்லைகள்
- ✓ சமுர்த்தி வங்கி வடக்கு எல்லை.
- ✓ கைதடி சந்தி **200 M** தூரம்
- ✓ வட மாகாண சபை அலுவலகம் 250 மீற்றர் தூரம்.
- ✓ மூன்று வழி பாதையுடன்
  - 01- A-09 வீதி 100 மீற்றர் (16 அடி பாதையுடன்)
  - 02- கைதடி கோப்பாய் வீதி 50 மீற்றர் தூரம் (20 அடி பாதையுடன்)
  - 03- சமுர்த்தி வங்கி அருகாமை **100 M** தூரம் (16 அடி பாதையுடன்)
- ✓ சுற்றி நல்ல சூழலுடன் நல்ல தண்ணீர் நிலம்
- ✓ செம்மண் காணி.

**தொடர்பு: 077 6234 204**
**077 2880 152**
**076 6583 621**

(CS 19704) 1/6

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



கடந்த 24.04.2022 ஞாயிற்றுக்கிழமை சிவபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர்

### அமரர் இராசரத்தினம் பஞ்சலிங்கம்

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை (23.05.2022) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

அத்துடன் எம் அன்புத் தெய்வத்தின் பிரிவுச்செய்தி அறிந்து நேரிலும், தொலைபேசி ஊடாகவும், மலர்வளையங்கள், பதாகைகள் சாத்தியும், அஞ்சலி செலுத்திய எம் அன்புக்குரிய உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் மற்றும் அன்னாரின் இறுதியாத்திரையில் கலந்து கொண்ட அனைவருக்கும் எமது இதயம் நெகிழ்ந்த நன்றிகளைக் காணிக்கையாக சமர்ப்பிக்கின்றோம்.

**இராஜபாதை வீதி,**
**கோப்பாய்.** (CS 896) (3/6) **குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் ஒன்றாய் கேள்விகள் கேட்டாலே
அடக்கும் கை அங்கு நடுங்காதோ?
எளிய மனிதன் எழுதும் விதியிலே
புதிய உலகம் தொடங்காதோ?
-பா.விவேக்

பக்கங்கள்: 08

சஞ்சீவி

Registered as a Newspaper

மலை 33: வள்ளுவர் ஆண்டு : 2053 வைகாசி 8 ஞாயிற்றுக்கிழமை (22.05.2022) சிகரம் : 100




# கிள்ளித்தெளிப்புகள் தொடருமா?






○ ந.பரமேஸ்வரன்

தமிழக அரசின் நிவாரண உதவி தமக்கும் கிடைக்குமா அல்லது வழமை போலவே சிங்கள, முஸ்லிம் மக்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டபின், தமிழர்களுக்கும் கிள்ளி தெளிக்கப்படுமா என்பதே இப்போது தமிழ் மக்கள் மத்தியில் உள்ள கேள்வி. ஸ்ரீலங்கா அரசு சுதந்திரமடைந்த காலம் தொட்டு இன்று வரையும் தமிழர்களைக் காட்டியே பிச்சையெடுத்து வயிறு வளர்த்து வந்துள்ளது. இதற்கு இலங்கையை ஆட்சிசெய்த ஆட்சியாளர்கள் எவருமே விதிவிலக்கில்லை என்று சொல்லலாம்.

இவ்வாறு தமிழர்களைக்காட்டி பிச்சையெடுத்து அதை திசை திருப்பிய அல்லது வேறு தேவைகளுக்கு பயன்படுத்தியமைக்கு பல உதாரணங்களை எடுத்துக்காட்டலாம்.

மகாவலித் திட்டம் அறிமுகம் செய்யப்பட்ட போது கனேடிய அரசாங்கம் நிதியுதவி அளிக்க முன்வந்தது. அப்போது இந்தத்திட்டம் வடபகுதிக்கு (தமிழர்களுக்கு) நன்மை பயக்கும் திட்டம் என்றே ஸ்ரீலங்கா அரசால் கூறப்பட்டது . ஆனால் நடந்ததோ சிங்களக் குடியேற்றம்.

இதே போல் யாழ்ப்பாண நூலகம் புனரமைக்கப்பட்ட போது, "யாழ்ப்பண நூலகத்தைப் புனரமைப்பதற்கு செங்கல்லும் புத்தகங்களும் அன்பளிப்புச்செய்யுங்கள் " என (books and bricks) ஜனாதிபதி சந்திரிகா உலகம் முழுவதும் பிரசாரம் செய்தார். பல கோடிக்கணக்கான பணம் அன்பளிப்பாக கிடைத்தது . அப்படிக் கிடைத்த பணம் எவ்வளவு என்று யாருக்கும் தெரியாது. ஆனால் யாழ்ப்பாண நூலகத்தைப் புனரமைப்பதற்குச் செலவிடப்பட்ட பணம் 120 மில்லியன் ரூபா மட்டுமே. நூலகப் புனரமைப்பு சம்பந்தமான கூட்டங்களுக்கு அப்போது மாநகரசபை முதல்வராக இருந்த ரவிராஜுக்கு அழைப்பு விடப்படவில்லை; ஒரு நாள் நூலகப் புனரமைப்புத் தொடர்பான கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளை பலவந்தமாக ரவிராஜ் கூட்டத்தில் பங்குபற்ற முற்பட்டார். எனினும் அவர் பலவந்தமாக வெளியேற்றப்பட்டார். இந்தப் புனரமைப்புக் குழுவில் தமிழினத்தைச் சேர்ந்த, ஜனாதிபதி சட்டத்தரணிகள் சிலரும் உள்ளடக்கப்பட்டிருந்தனர். ஒருவேளை அவர்கள் இப்போதாவது வாய்திறந்தால் , நூலகப் புனரமைக்கு எவ்வளவு தொகை சேர்ந்தது என்ற உண்மை வெளிவரலாம்.



முன்பு ஒருமுறை சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் மூதூரில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நிவாரணம் வழங்க முற்பட்டது. அப்போது முஸ்லிம்கள் தங்களுக்கும் நிவாரணம் வழங்க வேண்டும் எனக்கோரி, மூதூர் சர்வதேச செஞ்சிலுவைச்சங்க அலுவலகத்தை அடித்து நொருக்கினர்.

யுத்தம் முடிந்த கையுடன் ஐ.நா.நிவாரண உதவியின் கீழ் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கென வழங்கப்பட்ட உழவு இயந்திரங்களில் சிங்கள.முஸ்லிம் மக்களுக்கும் வழங்க வேண்டுமென ஆளுநர் வலியுறுத்திய போது, ஐ.நா அதிகாரி தலையில் அடித்துக் கொள்ளும் புகைப்படம் சண்டே ரைம்ஸ் பத்திரிகையின் முதல் பக்கத்தில் பிரசுரமாகியிருந்தது.

ஐரோப்பிய ஒன்றியம்,பிரிட்டன் போன்றன யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு=கிழக்கு மக்களுக்கு வீடு கட்டுவதற்கென வழங்கிய யூரோக்களுக்கு என்ன நடந்தது என்பது இதுவரை யாருக்கும் தெரியாது.

இப்போது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதாரச் சிக்கல்களால் தமிழகத்துக்கு மீண்டும் அகதிகள் புறப்படத் தொடங்கியதையடுத்து தமிழக அரசு இலங்கைத் தமிழர்களுக்கு உதவ முன் வந்துள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பேச்சாளர் சுமந்திரன், தமிழ் முற்போக்கு கூட்டணி மனோ கணேசன் ஆகியோர் "தமிழ் மக்களுக்கு மட்டும் என அனுப்ப வேண்டாம், மூவின மக்களுக்கும் சேர்த்து அனுப்புங்கள் " என தமிழக முதல்வர் ஸ்டாலினிடம் கோரிக்கை விடுத்தனர்.அதையடுத்து இப்போது இலங்கை மக்களுக்கு உதவி என்ற பெயரில் 123 கோடி ரூபா (இந்திய ரூபா) மதிப்புள்ள உதவிப் பொருட்கள் இலங்கைக்கு கப்பல் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் இந்தக் கப்பலை கொடியசைத்து வழியனுப்பியுள்ளார். இதில் தமிழக நாடளுமன்ற உறுப்பினர்களின் பணம், எதிர்கட்சித்தலைவர் பன்னீர்செல்வத்தின் 50 இலட்சம் ரூபா மற்றும் தமிழக அரச ஊழியர்கள் சிலரின் அன்பளிப்புகள் என்பனவும் அடங்கியுள்ளன. இவற்றை விட இரண்டு யாசகர்கள் சேமித்த 60,000 இந்திய ரூபாவும் அடங்கியுள்ளது. ஒருவர் 50,000 ரூபாவும் மற்றவர் 10,000 ரூபாவும் அன்பளிப்புச் செய்துள்ளனர். இவற்றை விட முஸ்லிம் சிறுமி ஒருவரும் தனது சேமிப்பை அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

தமிழில் பேச்சு வழக்கில் 'பிச்சை எடுத்ததாம் பெருமாள் அதை தட்டிப்பறித்ததாம் அனுமார் 'என்று கூறுவார்கள். ஆனால் இங்கே பிச்சைக்காரர்கள் பிச்சை போடும் நிலையில் தான் ஸ்ரீலங்காவின் நிலைமை உள்ளது. இதற்கு முழுக்காரணம் ராஜபக்சக்கள் தான் என்பது பச்சைக் குழந்தைக்கும் தெரிந்த விடயம்.

இலங்கைத்தமிழர்களுக்கு அல்லது இலங்கையர்களுக்கு என தமிழக அரசு வழங்கிய உதவிப்பொருள்கள் இலங்கையிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகரிடம் கையளிக்கப்படவுள்ளன.

இலங்கைத்தமிழர்களுக்கு இந்திய அரசு உதவுவது இது முதல் முறையல்ல . 1987 ஆம் ஆண்டு இந்திய விமானப்படையின் மிராஜ் ரக விமானங்கள் 'ஒப்பிரேஷன் பூமாலை' என்ற பெயரோடு யாழ்ப்பாணத்தில் உலர் உணவுப்பொதிகளை வீசியபோது அவை நேரடியாக பொதுமக்களின் கைகளிலேயே போய்ச்சேர்ந்தன.

தற்போது தமிழக அரசு அன்பளிப்புச் செய்துள்ள உதவிப் பொருள்கள் ஸ்ரீலங்கா அரசிடமே கையளிக்கப்படவுள்ளன. இந்த உதவிப்பொருள்களில் எவ்வளவு அல்லது எத்தனை வீதம் தமிழர்களுக்கு பகிர்ந்தளிக்கப்படப்போகிறது என்பதே இப்போது உள்ள கேள்வி. தமிழக அரசின் உதவிப்பொருள்களில் அரைவாசியாவது (50% மாவது) வடக்கு ,கிழக்கு மலையக மக்களுக்கு போய்ச்சேர வேண்டும் என்பதை தமிழக அரசு இந்தியத் தூதரகம் ஊடாக கண்காணிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அத்துடன் அன்பளிப்பாக கிடைத்த இந்த உதவிப்பொருள்களை ஸ்ரீலங்கா எவ்வாறு பங்கிடப்போகிறது என்பதையும் தமிழக அரசு கண்காணிக்க வேண்டும். இல்லையேல் தமது தொப்புள் கொடி உறவுகளுக்கு என தமிழக உறவுகள் அனுப்பிய உதவி வழமை போல் திசை திருப்பப்படக்கூடும்.

இதற்கிடையே தமிழக முதல்வர் ஸ்டாலின் ஒரு கிலோ அரிசிக்கு சந்தை விலையை விட பத்து ரூபா கூடுதலாக கொடுத்து கொள்வனவு செய்ததாக பொதுநல வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாணம் கொடுக்கிற மாட்டுக்கு பற்கள் ஒழுங்காக உள்ளனவா? என்று பார்க்கக்கூடாது என்று சொல்வார்கள். எனவே நாகரிகம் கருதி, அந்த விடயத்தை விட்டு விடுவோம். அதைத் தமிழக உறவுகள் பார்த்துக் கொள்ளட்டும். எமக்கென வருகிற பொருள்களில் அரைவாசியாவது எமக்கு (வடக்கு, கிழக்கு, மலையக மக்களுக்கு) வந்துசேர்வதை தமிழக அரசு உறுதிப்படுத்தினால் போதும். ■

**தற்போது தமிழக அரசு அன்பளிப்புச் செய்துள்ள உதவிப்பொருள்கள் ஸ்ரீலங்கா அரசிடமே கையளிக்கப்படவுள்ளன. இந்த உதவிப் பொருள்களில் எவ்வளவு அல்லது எத்தனை வீதம் தமிழர்களுக்கு பகிர்ந்தளிக்கப்படப் போகிறது என்பதே இப்போது உள்ள கேள்வி. தமிழக அரசின் உதவிப் பொருள்களில் அரைவாசியாவது (50% மாவது) வடக்கு, கிழக்கு மலையக மக்களுக்கு போய்ச் சேரவேண்டும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் சிங்கள மேட்டுக்குடி அரசியல்



## சாதகமான சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகள்

○ அ.நிக்ஸன்

பொருளாதார நெருக்கடி, விலைவாசி உயர்வு போன்ற பிரச்சினைகளுக்கு, இதுவரை பதவியில் இருந்த அனைத்து சிங்கள ஆட்சியாளர்களும் பொறுப்பேற்க வேண்டுமென்ற கருத்துக்களை மறுத்துரைக்க முடியாது. இந்தவொரு நிலையில், முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா தன்னை நியாயப்படுத்தும் செயற்பாடுகளில் சமீபகாலமாக ஈடுபட்டு வருகின்றனார். ஊழல்மோசடி, அதிகாரத் துஷ்பிரயோகம் என்பன நீடிப்பதற்கும், அவை இலங்கை அரசின் ஒரு பகுதிபோன்று மாறுவதற்கும் முப்பது ஆண்டுகால போரே வழிவகுத்தது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளராகவும் ,மஹிந்த ராஜபக்சவின் நம்பிக்கைக்குரியவராகவும் இருந்த மைத்திரிபால சிறிசேனவை, 2014 ஆம் ஆண்டு நவம்பரில் ரணில் விக்கிரமசிங்கவோடு இணைந்து, எதிர்க்கட்சிகளின் பொதுவேட்பாளராக நியமித்ததில் இருந்து சந்திரிகாவின் அரசியல் செயற்பாடுகள் மீண்டும் ஆரம்பித்திருந்தன. ஆனால் 2015 ஜனவரியில் மைத்திரி ரணில் அரசாங்கம் உருவாக்கப்பட்ட நோக்கம் நிறைவேறவில்லை. இருந்தாலும் ரணில் விக்கிரமசிங்கவோடு சந்திரிகா தொடர்ந்து பயணித்து வருகின்றார். தற்போதைய நெருக்கடிச் சூழலில் ரணில் விக்கிரமசிங்க பிரதமராகப் பதவியேற்றதன் பின்னணியிலும் சந்திரிகாவின் மறைமுக வகிபாகம் உண்டு. 'இலங்கை ஒற்றையாட்சித் தன்மையையும், அதன் அரசியல் யாப்புச் சட்டங்களையும் அப்படியே பாதுகாக்க வேண்டும்' என்ற சிந்தனை சந்திரிகாவின் அடிப்படைக் கொள்கையாகும். அதற்காக ஈழத்தமிழர்களின் அரசியல் விடுதலைக்குரிய குறைந்தபட்சத் தீர்வை முன்வைக்க வேண்டியதொரு கட்டாயச் சூழலை சந்திரிகாவினால் நிராகரிக்கவும் முடியவில்லை.

இதேநிலைப்பாட்டில்தான் ரணில் விக்கிரமசிங்கவும் செயற்படுகின்றார் என்பது பகிரங்கம். அதாவது ராஜபக்ச குடும்பம் ஏற்படுத்திய இந்த அவல நிலைமை என்பது இலங்கையின் இறைமைக்குச் சர்வதேச மட்டத்தில் அபகீர்த்தி என்பதோடு, தமிழர்கள் முன்னிலையிலும் சிங்களச் சமூகம் தலைகுனிந்துள்ளது என்ற உணர்வு சந்திரிகா, ரணில் ஆகிய இருவரிடமும் மேலோங்கியுள்ளதையே சமீபகாலச் செயற்பாடுகள் காண்பிக்கின்றன. ஆகவே வரலாற்றை மீட்டிப் பார்ப்போமாக இருந்தால், ரணில் தலைமை வகிக்கின்ற ஐக்கிய தேசியக் கட்சியும், சந்திரிகாவிடம் இருந்து பறிபோன, ஆனால் மீட்டெடுக்க முற்பட்டுக் கொண்டிருக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுமே இனிவரும் காலங்களில் மாறி மாறி ஆட்சியமைக்கும் சாத்தியங்கள் தென்படுகின்றன. அதாவது 2005 ஆம் ஆண்டில் இருந்து வெளிக்கிளம்பிய ராஜபக்ச குடும்ப ஆட்சி முறை நீக்கம் செய்யப்பட்டு , இலங்கை சுதந்திரமடைந்த 1948 இல் இருந்து 2004 ஆம் ஆண்டு வரை (சந்திரிகாவின் ஆட்சி நிலவியதுவரை) காணப்பட்ட சிங்கள மேட்டுக்குடி அரசியல் நீரோட்டம் மீளவும் எழுச்சி பெறும் நிலை உருவாகி வருகின்றது.

> இலங்கை சுதந்திரமடைந்த 1948 இல் இருந்து 2004 ஆம் ஆண்டு வரை (சந்திரிகாவின் ஆட்சி நிலவியதுவரை) காணப்பட்ட சிங்கள மேட்டுக்குடி அரசியல் நீரோட்டம் மீளவும் எழுச்சி பெறும் நிலை உருவாகி வருகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சி 17 ஆண்டுகள் செய்த படுகொலைகள், அதிகாரத் துஷ்பிரயோகங்கள், ஊழல்மோசடிகள் ஆகியவற்றை விசாரணை செய்து தண்டிப்பேன் என்று 1994 ஆண்டு ஓகஸ்ட் மாதம் நடைபெற்ற தேர்தலில் பிரசாரம் செய்தவர்தான் சந்திரிகா. மக்களைக் கொலை செய்த ஐக்கிய தேசியக் கட்சியை முற்று முழுதாக அழிப்பேன் என்றும் அன்று சபதம் எடுத்திருந்தார்.



அப்போது ஐக்கியதேசியக் கட்சியின் ஆட்சியில் ஜனாதிபதியாக இருந்த பிரேமதாஸ 1993 இல் கொல்லப்பட்டதால், பிரதமராகப் பதவி வகித்திருந்த டி.பி.விஜயதுங்க ஜனாதிபதியாக இருந்தார். அவர் 3 ரூபா 10 சதமாக இருந்த ஒரு றாத்தல் பாணை 5 ரூபாவாக உயர்த்தினார்.

பாண் விலையைக் குறைப்பேன் என்று சந்திரிகா தேர்தல் பிரசாரத்தின்போது மார்தட்டினார். 'சிங்களவர்கள் என்ற மரத்தைச் சுற்றிப்படரும் செடி கொடிகள்தான் தமிழர்களும், முஸ்லிம்களும்' என்றும் அப்போதைய ஜனாதிபதி டி.பி.விஜயதுங்க, மேடைப் பேச்சொன்றில் ஏதோ தெரியாமல் வாய்தடுமாறிச் சொல்லிவிட்டார். ஆனால் அந்த வசனத்தைப் பயன்படுத்திச் சந்திரிகா வடக்குக் கிழக்கு, மலையகத்தில் செய்த பிரசாரம் நன்றாகச் சூடு பிடித்தது. சந்திரிகா மீட்பர் என்று தமிழர்களும் நம்பினர்.

தேர்தலில் வெற்றிபெற்று ஆட்சியைப் பிடித்துப் பிரதமரானார் சந்திரிகா. பாணின் விலையை மீண்டும் மூன்று ரூபா 10 சதத்துக்குக் குறைத்தார். அடுத்து நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் இதே பிரசாரத்தை வேகமாகத் தொடர்ந்தார். இலங்கை வரலாற்றில் 64 சதவீத வாக்குகளில் முதன்முறையாக வெற்றிபெற்ற ஜனாதிபதி என்ற பெயரையும் சம்பாதித்தார். வடக்கு, கிழக்குத் தமிழர்கள் சந்திரிகாவை இந்திரா காந்தியின் தரத்துக்கு மதித்தனர். நம்பினர். ஆனால் மூன்று மாதங்களில் பாணின் விலை மீண்டும் 5 ரூபாவாக உயர்ந்தது. ஐக்கிய தேசியக் கட்சி மீதான விசாரணை எதுவுமே நடத்தப்படவில்லை. 1995 ஆம் ஆண்டு ஏப்ரலில் மீண்டும் போர் ஆரம்பிக்கப்பட்டது. முதன்முதலாக அரசியலில் 1993 ஆம் ஆண்டு கால் பதித்து ஓகஸ்ட் மாதம் நடைபெற்ற மேல் மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட்டு முதலமைச்சர் பதவியை ஏற்றவர்தான் இந்தச் சந்திரிகா.

அந்தத் தேர்தல் பிரச்சாரத்தில் மாகாண சபைகளுக்கு அதிகாரங்கள் போதாது என்றும் இனப்பிரச்சினைக்கு 13 ஆவது திருத்தச் சட்டம் தீர்வல்ல என்றும் பிரசார மேடைகளில் முழங்கினார். அது மாத்திரமல்ல. 1987 இல் மாகாண சபை முறையைப் புலிகள் நிராகரித்தமை சரியான நடவடிக்கை என்றும் புகழ்ந்தார். இந்தப் பிரசார வேகத்துடன் 1994 நவம்பரில் ஜனாதிபதியாகப் பதவியேற்ற சந்திரிகா, ஏப்ரலில் மீண்டும் போர் ஆரம்பித்ததும் புதுடில்லிக்குச் சென்று புலிகளைப் பற்றித் திட்டித்தீர்த்தார். ராஜீவ் காந்தியைப் புலிகள்தான் கொலை செய்தார்கள் என்றும் ' இந்து 'நாளிதழுக்கு வழங்கிய நேர்காணலில் பகிரங்கமாகவே கூறினார்.

1995 இல் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியதும் யாழ்ப்பாணம் என்ற பெயரை யாப்பா பட்டுனே என்று சிங்களத்தில் மாற்றினார். அதற்கான கேடயத்தை பாதுகாப்பு அமைச்சராக இருந்த சந்திரிகாவினுடைய மாமனார் அனுருத்த ரத்வத்த முப்படைகளின் தளபதி என்ற முறையில் சந்திரிகாவிடம் ஒப்படைத்தார். இந்த நிகழ்வு காலிமுகத்திடலில் நடைபெற்றபோது, கொழும்பில் சிங்களவர்கள் வெடிகொளுத்தி மகிழ்ந்தனர். குறிப்பாக வெள்ளவத்தை, பம்பலப்பிட்டி ஆகிய பிரதேசங்களில் வாழும் வடக்கு, கிழக்குத் தமிழர்கள் சிலரின் வீடுகளுக்குள்ளும் சிங்களவர்கள் வெடி கொளுத்திப் போட்டனர். வர்த்தக நிலையங்களில் பணியாற்றிய மலையகத் தமிழ் இளைஞர்கள் நையப்புடைக்கப்பட்டனர். இந்த வரலாற்றுப் பின்னணியைக் கொண்ட சந்திரிகா தான், சென்ற 18 ஆம் திகதி நடைபெற்ற முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வின்போது கொழும்பில் உள்ள தனது வீட்டில் தீபம் ஏற்றிவிட்டுத் தனது படத்துடன் சமூகவலைத்தளத்தில் அதனைப்பதிவிட்டிருந்தார்.

ஈழத்தமிழர்கள் கோருகின்ற இன அழிப்புக்கான சர்வதேச விசாரணைக் கோரிக்கையை நீர்த்துப் போகச் செய்யும் முறையில்.முப்பது வருட இன அழிப்புப் போர் என்று சந்திரிகா ஆங்கிலத்தில் பதிவிட்டிருந்தர். அதனை மில்லியன் கணக்கானோர் வாசித்திருக்கின்றனர். அந்தப் பதிவின் உள் அர்த்தம் என்னவென்றால், சிங்கள - தமிழ் மக்கள் முப்பது வருட போரில் ஒருவருக்கொருவர் இன அழிப்புச் செய்திருக்கின்றனர் என்பதே. ஆனால் அந்தப் பதிவைச் சில தமிழர்கள், தமிழ் மக்கள் மீதான இன அழிப்புப் போர் என்று சந்திரிகா தனது பதிவில் குறிப்பிட்டிருப்பதாகக் கூறிச் சமூகவலைத்தளங்களில் பெருமையாகப் பதிவிட்டிருந்தனர். ஆனால் அது தவறு. சந்திரிகாவின் ஆங்கில மொழிப் பிரயோகத்தைத் தவறாகப் புரிந்துகொண்ட தமிழர்களின்பதிவுகள் மீண்டும் அரசியலுக்குள் நுழைய வேண்டுமென்ற சந்திரிகாவின் விருப்பத்துக்கு உரம் ஊட்டுவதாவே அமைந்துள்ளன. ஆனால் தமிழின அழிப்பு என்று சொல்வது சந்திரிகாவின் நோக்கம் அல்ல. அவருடைய பதிவின் கருத்தும் அப்படியல்ல. ஈழத்தமிழர்களின் விவகாரத்தை 2009 க்குப் பின்னரான சூழலில், சர்வதேச மட்டத்தில் இருந்து நீக்கம் செய்ய வேண்டும் என்பது தொடர்பாக ரணில் விக்கிரமசிங்க எடுத்திருக்கும் அதே நிலைப்பாட்டையே சந்திரிகாவும் விரும்புகின்றார். ஆனால் ராஜபக்ச குடும்பம் நேரடியாக இனவாதத்தைத் தூண்டி, தமது பதவிகளை தக்கவைத்தது போலல்லாது, தமிழர்கள் நம்பக்கூடிய விதமான அணுகுமுறைகள் ஊடே புதிய நகர்வுகளை ரணில் -சந்திரிகா என்ற இரண்டு பிரதான அரசியல் தலைவர்களும் கையாண்டு வருகின்றனர்.

தற்போதைய பொருளாதார நெருக்கடி, ஊழல்மோசடி. அதிகாரத்துஷ்பிரயோகம் மற்றும் இனப்பிரச்சினை தீர்க்கப்படாமல் இழுத்தடிக்கப்பட்டமை போன்றவற்றுக்கு ராஜபக்ச குடும்பமே காரணம் என்று கூறி, பழியைச் சுமத்திவிட்டு, மீண்டும் ஐக்கிய தேசியக்கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அதாவது எஸ். டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கா, டி.எஸ்.சேனநாயக்கா, ஜே.ஆர்.ஜயவர்த்தன என்ற சிங்கள மேட்டுக்குடி அரசியல் பண்பாட்டைக் கொண்டு வந்து அதற்குள் தமிழர்களையும் அமுக்கி, இலங்கை ஒற்றையாட்சிக் கட்டமைப்பைப் புனிதப்படுத்தும் கைங்கரியங்களே மெதுவாக அரங்கேறி வருகின்றன. மகாநாயக்கர்கள் ராஜபக்சவின் பௌத்ததேசியவாதச் செயற்பாட்டை விரும்பியிருந்தாலும், கொழும்பு, கண்டி பிரதேசங்களை மையப்படுத்திய சிங்கள மேட்டுக்குடி அரசியல் பண்பாட்டு முறை மீண்டும் புத்தெழுச்சி பெறுவதை ஏற்கும் மனநிலையும் மெதுவாக வெளிப்படுகின்றது.

ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சிக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென்ற பௌத்த பிக்குமார் சிலரின் கருத்துக்களும், சந்திரிகாவின் அணுகுமுறைகளும் அதனைப் புடம் போட்டுக் காண்பிக்கின்றன. இதன் பின்னணியிலேயே சஜித் பிரேமதாஸவும் பிரதமர் பதவியைப் பெறமுடியாமல்போனது என்ற அரசியல் கிசுகிசுக்களும் உண்டு.


அத்துடன் கடன்களை வழங்க சர்வதேச நாணய நிதியம் விதிக்கும் நிபந்தனைகளும் சிங்கள மேட்டுக்குடி அரசியல் பண்பாட்டுக்கு மெருகூட்டுவது போன்றே தெரிகின்றது. அடுத்து வரவுள்ள மாதங்களில், சந்திரிகா -ரணில் என்ற சிங்கள மேட்டுக்குடி ஆட்சிக்கு வழி திறக்கப்படும் ஏது நிலையும் நன்றாகவே தெரிகின்றது.

அதாவது ஐக்கிய தேசியக் கட்சியும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் ஆளும் கட்சியாகவும் எதிர்க்கட்சியாகவும் மாறி, மாறி பதவி வகிக்கும் அரசியல் சூழல் உருவாகும் வாய்ப்புக்கள் தெரிகின்றன. அழுத்தம் திருத்தமாகச் சொல்வதானால் 2004 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்துக்கு முந்திய அரசியல் பின்னணிதான் இனிமேல் இலங்கை அரசியலில் நிலைபெறப் போகின்றது.

2009 க்குப் பின்னரான சூழலில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை மையப்படுத்திய தமிழரசுக் கட்சி அவ்வப்போது எடுத்த நிலைப்பாடுகளும் சிங்கள மேட்டுக்குடி அரசியலுக்கு ஒத்தூதலாம். ஆனால் தமிழ்த்தேசிய அரசியல் விடுதலைக்கு அந்த ஒத்தூதல் ஆபத்தானதே. தமிழ் சிவில் சமூக அமைப்புகள் விழிப்படைய வேண்டிய காலமிது. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைத்தீவு ஒரு தேசமாக இருப்பதில் தோல்வி அடையுமா?



○ நிலாந்தன்

ரணில் விக்கிரமசிங்க யாருடைய பிரதமர்? அவர் கோத்தாபயவின் பிரதமரா ?அல்லது ஆளுங்கட்சியின் பிரதமரா? அல்லது எதிர்க்கட்சிகளின் பிரதமரா? சிலர் அவரை அமெரிக்காவின் பிரதமர் என்று சொன்னார்கள். மேற்கத்தைய நிதி முகவர் அமைப்புக்களின் பிரதமர் என்று சொன்னார்கள். காலிமுகத்திடலில் போராடும் புதிய தலைமுறை அவரை 'டீல்களின் பிரதமர்' என்று சொன்னது. முன்னிலை சோசலிசக் கட்சியின் முக்கியஸ்தர் ஒருவர் அவரை கிழட்டுக் கோழி என்று சொன்னார்.

ஆனால் ஒரே ஒரு ஆளாக உள்ளே வந்தவர்.இப்பொழுது பெரும்பாலானவர்களின் தவிர்க்கப்பட முடியாத தெரிவாக மாறியுள்ளார். நாட்டின் நிதி நெருக்கடியும் அதன் விளைவாக ஏற்பட்ட அரசியல் நெருக்கடியும் அவரை தவிர்க்க முடியாதவராக மாற்றி உள்ளனவா? அவர் மந்திரவாதி அல்லர். மந்திர தந்திரங்களில் நாட்டமுடையவரும் அல்லர். ராஜபக்ச குடும்பத்தைப் போல ஞானாக்காக்களின் பின் செல்பவரோ, அல்லது மந்திரித்த தாயத்துக்களை கைகளில் அணிந்திருப்பவரோ வைத்திருப்பவரோ அல்லர். அவர் மந்திரத்தை விடவும் தந்திரத்தை நம்புபவர். அவர் பிரதமராகத் தெரிவு செய்யப்பட்டதும் பங்குச்சந்தை மாற்றத்தை காட்டத் தொடங்கியது. டொலரின் பெறுமதி குறைந்தது. மேற்கு நாடுகள் உதவிகளை அள்ளி வழங்கின. இதனால் ஒரு திடீர் எதிர்பார்ப்பு அவரை நோக்கி உருவாகியது. அதன் விளைவாக உள்ளூர் சந்தைகளில் பதுக்கப்பட்டிருந்த பொருள்கள் வெளிவந்தன. மூடப்பட்டிருந்த எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருள் வெளிப்படத் தொடங்கியது. முகநூலில் ஒரு நண்பர் எழுதியது போல எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருள் ஊற்றெடுக்கத் தொடங்கியது. 3 ஆயிரம் வரையிலும் விற்கப்பட்ட சிமெந்து திடீரென்று 1200ரூபாவுக்கு இறங்கியது. இவ்வாறு பதுக்கப்பட்ட பொருள்கள் வெளிப்படத் தொடங்கியதும் அவர் மீதான நம்பிக்கை மேலும் அதிகரித்தது.

நாடாளுமன்றத்தில் அவர் தெரிவு செய்யப்பட்ட விதத்தை, அவருடைய தெரிவை முதலில் எதிர்த்த கட்சிகளில் பெரும்பாலானவை , படிப்படியாக அவரை எதிர்ப்பதில்லை என்ற முடிவை எடுக்கத் தொடங்கின. ஏனென்றால் ரணிலுக்கு எதிராக வாக்களித்தால் மக்களின் எதிர்ப்பை வாங்கிக்கட்ட வேண்டியிருக்கும் என்ற பயம் அவர்களுக்கு. கடந்த 9 ஆம் திகதியும் 10 ஆம் திகதியும் மக்களின் கோபம் எப்படியிருக்கும் என்பதை அனுபவித்தவர்கள் அவர்கள். இலங்கைத்தீவின் நவீன வரலாற்றில் ஒரு நாடாளுமன்ற உறுப்பினரும் பிரதேசசபைத் தலைவரும் மக்களால் அடித்துக் கொல்லப்படும் அளவுக்கு நிலைமைகள் பயங்கரமாக இருந்த நாள்கள் அவை. எனவே முதலில் பத்திரமாக சொந்தத் தேர்தல் தொகுதிக்குப் போகவேண்டுமென்றால் இப்போதைக்கு ரணிலை எதிர்ப்பதில்லை என்று பெரும்பாலான சிங்களக் கட்சிகள் முடிவெடுத்தன. எனினும் பிரதி சபாநாயகர் தெரிவில் ரணிலுக்குள்ள வரையறைகளை ஆளுங்கட்சி உணர்த்தியிருக்கிறது. ரணில் பிரதமராக நியமிக்கப்பட்டதை பேராயர் மல்கம் ரஞ்சித் ஏற்றுக்கொள்ளவில்லை. மகா நாயக்கர்களின் கருத்தும் அதுதான் என்று அவர் சொன்னார். சகல மக்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட சகல மக்களுக்கும் நம்பிக்கை ஊட்டக் கூடிய ஒருவரை பிரதமராக நியமிக்க வேண்டும் என்று பேராயர் போர்க்கொடி எழுப்பினார். அப்படி ஒருவரை நாடாளுமன்றத்தில் கண்டுபிடிப்பது கடினம் என்று பேராயருக்கும் தெரியும்.தவிர நாடாளுமன்றத்துக்கு வெளியே அப்படிப்பட்ட ஒருவரைத் தேட பேராயராலும் முடியவில்லை. மகாநாயக்கர்களாலும் முடியவில்லை. இந்த வெற்றிடத்தை தந்திரமாகப் பயன்படுத்தி ரணிலை கோத்தாபய தெரிவு செய்தார்.



யாப்பின் பிரகாரம் தனக்குள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தியே கோத்தாபய, ரணிலைத் தெரிவு செய்தார். அதாவது யாப்பின்படி ரணில் தெரிவு செய்யப்பட்டார். இந்த இடத்தில் ஒரு முக்கியமான விடயத்தை நாம் கவனிக்கவேண்டும். கோத்தாவை வீட்டுக்குப் போ என்று கேட்டு ஒரு புதிய தலைமுறை போராடுகிறது. ஆனால் யாப்பின்படி அவரை வெளியே அனுப்ப முடியாதுள்ளது. அதேசமயம் மஹிந்த பதவி விலகியது யாப்பின்படி அல்ல. யாப்பின்படி அவர் பலமாகக் காணப்பட்டார். ஆனால் யாப்புக்கு வெளியே நடந்த மக்கள் எழுச்சிகள் அவரைப் பதவிவிலகத் தூண்டின. அந்த மக்கள் எழுச்சிகளுக்கு எதிர்க்கட்சிகள் தலைமை தாங்கியிருந்திருந்தால் கோத்தாவையும் வீட்டுக்கு அனுப்பியிருந்திருக்கலாம். ஆனால் ஆர்ப்பாட்டங்களுக்கு தலைமை தாங்க எந்த ஒரு சிங்களக் கட்சியாலும் முடியவில்லை. சஜித் பிரேமதாஸவும் ஜே.வி.பி.யும் போராடும் தரப்புகளின் கோஷங்களை ஏற்றுக் கொள்வதன்மூலம் தாங்கள் அவர்களின் பக்கம் என்று காட்டினார்கள். ஆனால் போராடும் மக்களுக்கு தலைமை தாங்க அவர்களால் முடியவில்லை. இதுதான் அடிப்படைப் பிரச்சினை. யாப்பை மீறிச் செல்லத் துணிச்சலற்ற எதிர்க்கட்சிகளின் மத்தியில் யாப்பின் பிரகாரம் ஜனாதிபதி ரணிலைத் தெரிவு செய்தார்.

இதை இன்னும் சரியான வார்த்தைகளில் சொன்னால் காலிமுகத்திடலில் போராடும் புதிய தலைமுறையும் தெருக்களில் இறங்கி அரசியல்வாதிகளுக்கு பாடம் படிப்பித்த மக்களும், எதிர்க்கட்சிகளும் போராடியதால் கிடைத்த கனிகளை ரணில் விக்கிரமசிங்க சுவீகரித்து விட்டார் என்றே சொல்ல வேண்டும்.

மிகப் பலவீனமான, உலகின் மிக நூதனமான ஒரு பிரதமராக அவர் தொடக்கத்தில் தோன்றினார். ஆனால் படிப்படியாக தன்னை பலப்படுத்தி வருகிறார்.அவர் கடைசியாக இரண்டு தடவைகள் பதவியில் இருந்த போதும் கூட நிலைமை அப்படித்தான் இருந்தது. அவர் உள்நாட்டில் மிகப் பலவீனமான தலைவராகவும் வெளியுலகில் மிகப் பலமான ஒரு தலைவராகவும் காணப்பட்டார். அவர் நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையும் தெரிவிக்கும் தகவல்களும் ஒப்பீட்டளவில் வெளிப்படையானவை. அவர் மக்களுக்கு பொய்யான வாக்குறுதிகளை வழங்கத் தயாரில்லை என்று தெரிகிறது.

இந்தச் சோதனையில் அவர் வெற்றி பெற்றால் அவர் ஒரே கல்லில் மூன்று கனிகளை வீழ்த்துவார். முதலாவது தன் வாழ்வின் இறுதிக் கட்டத்தில் அதாவது அவரைப் பொறுத்தவரை இது கடைசி ஓவர் இந்தக் கடைசி ஓவரில் ஆவது அவர் வெற்றி பெற்ற ஒரு தலைவராக ஓய்வுபெறலாம். மிக நெருக்கடியான ஒரு காலகட்டத்தில் நாட்டை மீட்டெடுத்தவர் என்ற புகழுடன் அவர் ஓய்வு பெறலாம். இரண்டாவது தனது கட்சியை பலப்படுத்தலாம். மூன்றாவது தனது உட்கட்சி எதிரிகளைத் தோற்கடிக்கலாம்.

அதேசமயம் ரணிலை நியமித்ததன் மூலம் கோத்தாபய முதலாவதாக, தன்னைத் தற்காத்துக் கொண்டார். இரண்டாவதாக, ஏனைய ராஜபக்சக்களையும் பாதுகாத்துக் கொண்டார். மூன்றாவதாக ,மக்கள் எதிர்ப்பை ஒப்பீட்டளவில் தணித்திருக்கிறார். காலிமுகத்திடலில் போராடும் புதிய தலைமுறை அவரை வீட்டுக்கு போ என்று கேட்கிறது. ஆனால் இன்றுவரை அவர் வீட்டுக்கு போகவில்லை. அதேசமயம் ரணிலை நியமித்ததன்மூலம் அவர் நாட்டின் கவனத்தையும் வெளி உலகின் கவனத்தையும் ரணிலின் மீது குவியச் செய்து விட்டார். ரணிலின் மறைவில் அவர் தன்னையும் தன் குடும்பத்தையும் பாதுகாத்துக் கொண்டார்.

இப்படிப் பார்த்தால் ரணிலை நியமித்ததன்மூலம் கோத்தாபயவும் ஒரு கட்டம் வரை வெற்றி பெற்றிருக்கிறார். ஆளும் கட்சியும் வெற்றி பெற்றிருக்கிறது. ரணிலும் வெற்றி பெற்றிருக்கிறார். அதாவது சிங்களத் தலைவர்கள் ஏதோ ஒரு விதத்தில் தங்களையும் யாப்பையும் சிங்கள பௌத்த அரசுக் கட்டமைப்பையும் அமைச்சுப் பதவிகளையும் பாதுகாத்திருக்கிறார்கள் என்று பொருள்.

ரணிலை விட்டால் வேறு யாரும் இல்லை என்ற ஒரு வெற்றிடம் ஏற்படுவதற்கு எதிர்க்கட்சிகளும் காரணம். பேராயர் மல்கம் ரஞ்சித், மகாநாயக்கர்கள் போன்ற மதத் தலைவர்களும் காரணம். மதத்தலைவர்கள் நீதியின் மீது பசி, தாகம் உடையவர்களாக இருந்தால் அரசியல்வாதிகளும் மக்களுக்கு பொறுப்புக் கூறுவார்கள். இலங்கைத்தீவின் பௌத்த மதம் ஓர் அரச மதம். யாப்பின்படி ஏனைய மதங்களை விட முதன்மை வகிக்கும் பௌத்தமதம் அதற்கு முழுப் பொறுப்புக் கூறவேண்டும். ஈஸ்டர் குண்டு வெடிப்போடு பேராயர் மல்கம் ரஞ்சித்துக்கு ஞானக்கண் திறந்திருக்கிறது. இலங்கைத்தீவின் கத்தோலிக்கத் திருச்சபை ஒப்பீட்டளவில் அதிக இன முரண்பாட்டை பிரதிபலித்தது.


கடந்த வாரம் கூட வடக்குகிழக்கு ஆயர் மன்றம் நடந்தது இனப்படுகொலை என்று சொல்லியிருக்கிறது. ஆனால் பேராயர் மல்கம் ரஞ்சித் கூறுவாரா? இவ்வாறு மதத் தலைவர்கள், குடிமக்கள், சமூகங்கள் போன்றவற்றால் ஒரு பொருத்தமான தலைவரை நாடாளுமன்றத்துக்கு வெளியே கண்டுபிடிக்க முடியாத ஒரு வெற்றிடத்தில்தான் ரணிலுக்கு லொத்தர் விழுந்தது.

"ரணில்விக்கிரமசிங்க தோல்வியடைந்தால் இலங்கையும் தோல்வியடையும் இந்தத் தோல்வி அடுத்த சில ஆண்டுகளுக்கான தோல்வியாக இராது மாறாக ஒரு தேசமாக இலங்கையின் இருத்தலுக்கான தோல்வியாக இது காணப்படும்" என இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் பிரதி ஆளுநர் கலாநிதி டபிள்யூ. ஏ . விஜயவர்த்தன தெரிவித்துள்ளார்.



தமிழ் மக்களைப் பொறுத்தவரை இலங்கைத்தீவு எப்பொழுதோ ஒரு தேசமாக இருப்பதில் தோல்வியடைந்து விட்டது. அதை ஒரு தேசமாகக் கட்டியெழுப்புவது என்பது சிங்கள பௌத்த தேசமாகக் கட்டியெழுப்புவது அல்ல. அது,தமிழ் மக்களை ஒரு தேசமாக அங்கீகரிப்பதுதான். அந்த அடிப்படையில், பல்லினத் தன்மை மிக்க,பல் சமயப் பண்பு மிக்க, பல்மொழி பண்புமிக்க ஒரு தேசமாகக் இந்தக்குட்டித்தீவைக் கட்டியெழுப்புவதுதான். தனது கடைசி ஓவரிலாவது ரணில் அதைச் செய்வாரா? அல்லது இலங்கைத்தீவு ஒரு தேசமாக இருப்பதில் தோல்வியடையுமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



36

# மானத்தி

○ கருணை ரவி

இரவு கனகு கொடுத்த அரைவாசிப்பார்சல் கிடந்தது. நிருபன் அரைவாசியைச் சாப்பிடாது வைத்திருந்தான். அதை அவள் குப்பையில் கொட்டினாள். அவர் கொத்துறொட்டியைக் கொடுக்கும் போது முகத்துக்கு லைற் அடித்து நிருபனைப்பார்த்தார். அவன் படுத்திருந்து கண்களைக் கசக்கினான். சைக்கிள் கூடையில் இருந்தே கொத்து றொட்டியை எடுத்து நிருபனிடம் கொடுத்தார். கூடையில் வேறுபார்சல் எதுவும் இல்லை. அவர் வெறுங்கூடையோடே போனார்.

அவர் தனியனா? பிள்ளைகள், மனைவி இல்லையா? அந்த வெற்றுக்கூடை அவர் மேலான எண்ணங்களை அவளுள் நிறைத்தது. காலையில் ஐம்பது அப்பங்களைக் கொடுத்துவிட்டு நிருபனையும் பள்ளிக்கூடத்தில் சேர்த்து விட்டுவந்து இருக்கும்போதுதான் அவரின் எண்ணங்கள் அவளில் பொலிந்தன.

அவரிடம் அப்பத்தைக் கொடுக்கும்போது ஒரு அப்பத்துக்கு ஐந்து ரூபா என்று சொல்லிவிட்டு இருநூறு ரூபா மீண்டும் கொடுத்தார். முற்பணம் முந்நூறும் பின்னர் இருநூறும் வாங்கும் போது அவளுக்குச் சந்தோசமாக இருந்தது. அவர் இருநூறு ரூபாவைக் கொடுக்கும் போது சிரித்துக்கொண்டு கொடுத்தார். அவளும் சிரித்தாள். அவள் சிரிப்பை ஒருவர்மீது காட்டும் மதிப்பாக நினைத்தாள்.


"கொத்துறொட்டி நல்லா இருந்ததே?"

"நான் சாப்பிடேலை"

அவரைப் பார்க்காது , போகும்போதே சொல்லிக்கொண்டு போனாள். வெற்றிலைக்கடைக்காரன் அவளைப் பார்த்துக்கொண்டு இருந்தான்.

அவள் வாங்கிய இருநூறு ரூபாவில் இருபது ரூபா சில்லறைக்காசு. அந்த சில்லறைகளை உண்டியலில் போட்டாள். என்ன கஷ்டம் வந்தாலும் அந்தப்பணத்தை எடுப்பதில்லை என நினைத்தாள். சேர்க்கும் பணம் முழுவதும் நித்திக்கே செலவழிக்கவேணும் என நினைத்தாள்.

பாடசாலை விட்டு நிருபன் வந்தான். அவன் இப்போது தானாகவே போய் தானாகவே வருவான். ஐந்தாம் ஆண்டு படிக்கிறான். வரும் ஆவணியில் ஸ்கொலசிப் பரீட்சை. சிலநேரங்களில் பாடசாலை விட்டாலும் நேரம் செல்ல வருவான். மேலதிக வகுப்புகளை வைப்பார்கள். ஏன் ரியுசனுக்குப் போவதில்லை? என ரீச்சர் கேட்பதாக நிருபன் அடிக்கடி வந்து சொல்வான். ரியுசனுக்குப்போகும் பிள்ளைகளை வகுப்பில் மதிப்பாக நினைப்பார்கள். போகாத பிள்ளைகளை இழுக்காகப் பார்ப்பார்கள்.



> அப்பாவை மாதிரி அண்ணாவுக்கு மீசை பெருத்திருக்குமே?" அவள் பதில் சொல்லாது அல்பத்தை வாங்கி பூறாட்டியின் படத்தைப் பார்த்தாள். சிரிப்பு, இமை, தலைவிழுப்பு, கண்கள் எல்லாமே நித்தி மாதிரியே இருந்தது.

"டேய் வாடா, போடா..."

என்றும் பிள்ளைகளோடு சண்டை பிடித்தால் அந்தப்பிள்ளைகள் மேல் குற்றங்களைச் சுமத்துவதும் , 'படிப்பில்லை, ரியுசனுக்கும் போவதில்லை, ஒரே குழப்படி' என்று குறைகளைச் சுமத்துவார்கள். ரியுசனுக்குப் போகாத பிள்ளைகள் சித்தியடைந்தால் மேடைகளில் புகழ்வார்கள். பூங்கொடியும் நிருபனை அடுத்தமாதம் ரியுசனுக்கு விடவேணும் என ஒவ்வொரு மாதமும் நினைப்பாள். இன்றுவரை விடவேயில்லை.

நிருபன் வந்தான். கையில் நோட்டீஸ் கொண்டுவந்தான். யாரும் போராளிகள் வீரச்சாவு அடைந்தால் ஒலிபெருக்கியில் சொல்லிக் கொண்டு சோககீதம் இசைத்தவாறு போவார்கள். போகும்போது நோட்டீசும் போடுவார்கள். அவன் சோககீதம் இசைக்கும் நேரங்களில் வீதிக்குப்போய் நோட்டீஸ் வாங்குவான். வாங்கிய நோட்டீஸ்களை பார்த்துக்கொண்டிருப்பான்.

"அம்மா..."

"ம்..."

"அண்ணாவும் வீரச்சாவெண்டால் இப்பிடி நோட்டீஸ் அடிச்சுக் குடுப்பம்தானே..."

"வாயை மூடடா" அவளின் உறுக்கலைக் கேட்டதும் நிருபன் திடுக்குற்றான் ஒன்றும் கதைக்காது அவளையே பார்த்தான். அவள் அழுது கொண்டிருந்தாள். அவன் எழும்பி அவளுக்குக் கிட்டப்போனான்.

"ஏனம்மா அழுகிறியள்? இயக்கத்துக்குப் போனவை ஆமியளோடை சண்டை பிடிச்சுச் சாகினம்தானே..."

அவள் ஒன்றுமே சொல்லவில்லை. அவனை அணைத்து மடியில் இருத்தினாள்.

"அம்மா... அண்ணா பெருத்திருப்பாரே?"

"ஓ... அப்பாவை மாதிரி வளந்திருப்பான்."

அவள் சொல்லி அவனின் முடிகளை வருடிக்கொண்டிருந்தாள். அவன் எழும்பி உரப்பையை கிளறினான். அல்பத்தை எடுத்தான். தாய்க்குக் கிட்ட வந்து அல்பத்தைக்காட்டி

"அப்பாவை மாதிரி அண்ணாவுக்கு மீசை பெருத்திருக்குமே?" அவள் பதில் சொல்லாது அல்பத்தை வாங்கி பூறாட்டியின் படத்தைப் பார்த்தாள். சிரிப்பு, இமை, தலையிழுப்பு, கண்கள் எல்லாமே நித்தி மாதிரியே இருந்தது.

"அம்மா... ரீச்சர் எங்கடை குடும்பப் படத்தைகொண்டுவரச்சொன்னவா. என்ரை சுயவிபரக் கொப்பியிலை ஒட்டவேணுமாம்." அவள் எல்லாப் படங்களையும் பார்த்துவிட்டு ஒருபடத்தைக் கொடுத்தாள். "அம்மா... இதிலை தாத்தா நிக்கிறார்."

அவன் வேறு படம் தேடினான். எல்லோரும் சேர்ந்து நிற்கும் படம் எதுவுமில்லை. நித்தி இல்லாத படம் ஒன்று அழகாக இருந்தது. அதை எடுத்துப்பார்த்தான்.

"அம்மா... அண்ணா எப்ப வருவார்?"

"எப்பவோ ஒருநாளைக்கு வருவார்."

அவன் எடுத்த படத்தை வைத்துவிட்டு கொட்டாவி விட்டான். அவள் சாப்பாட்டைக் கொடுக்க அவன் வாங்கவில்லை. "எனக்கு வடை வாங்கித்தாங்கோ..."

சிணுங்கினான். அவள் காசை எடுத்துக்கொடுத்தாள்.

"நான் போகேலை. வெற்றிலைக்கடைக்கார ஐயா கூப்பிடுவர். கனகு. வீட்டை வாறவரோ எண்டு கேப்பர். கொத்துறொட்டி ஒவ்வொருநாளும் தாறவரோ எண்டும் கேப்பர்"

அந்தக் கேள்விகள் நிருபனுக்கு ஒரு சிரங்கு மாதிரி இருந்தது. பூங்கொடி கஞ்சாக்கனகு சொல்லித்தான் வெற்றிலைக்கடைக்காரன் தன்னை தவறாக நினைப்பதை உணர்ந்தவளுக்கு யாரைக் கோபிப்பதென்றே தெரியவில்லை. முதலில் கனகுவைக் கோபித்தாள். பின் கனகு கொத்துரொட்டி வாங்கிக் கொடுத்ததை வெற்றிலைக்கடைக்காரனுக்கு சொல்லியிருப்பான். வெற்றிலைக்கடைக்காரன்தான் அதைத் தவறாக நினைத்தானா? அல்லது கனகுதான் தவறாகச் சொல்லியிருப்பாரா?

"வேறையென்ன வெற்றிலைக்கடைகாரன் கேட்டவன்?"

"ஒவ்வொரு நாளும் வாறவரோ? வேறையென்ன வாங்கித்தாறவர்?"

கேட்டவைகளைச் சொன்னான். அவள் மந்தமாகினாள். கஞ்சாக்கனகு கெட்டவர் என்றபடியால்தான் வெற்றிலைக்கடைக்காரன் அப்படிக்கேட்டிருப்பான். நான் ஏன் கொத்துறொட்டியை வாங்கினேன்? சஞ்சலப்படும் மனதுடன் காசை எடுத்துக்கொண்டு கடைக்குப் போனாள். அவள் கடையில் நுழையும்வரை வெற்றிலைக் கடைக்காரன் அவளையே பார்த்துக்கொண்டிருந்தான். அவள் அவனைப் பார்க்கவில்லை. பூங்கொடியைக் கண்டதும் கனகு பாட்டைக் குறைத்து விட்டார். கடையில் எவருமில்லை. அவள் 'வடை 'என்றாள். சேட்டை உயர்த்தி வயிற்றைத் தடவிவிட்டு

"நெடுக கடைச்சாப்பாடு"

கொட்டாவி விட்டபடி வடையை எடுத்துக் கொடுத்தார்.

"வீட்டிலை இருந்து சாப்பாடு வாறேலையே?"

"வீடு தூரம். வீட்டிலை மனிசியும் மகளும்தான். கொண்டுவர ஒருத்தருமில்லை"

அவள் வடையை வாங்கிக்கொண்டு காசைக்கொடுத்தாள்.

"மத்தியானம் ஒரு பார்சல் தருவியே...?"

அவள் மறுத்துவிட்டாள். தான் சுவையாகச் சமைக்கமாட்டேன் என்றும் தன்னால் நேரத்துக்கு சமைக்க முடியாது என்றும் சொன்னாள்.

"சுவையில்லாட்டியும் பசியாறினால் சரி"


சொல்லிக் கொண்டு சேட்டை உயர்த்தி அடிவயிற்றைத் தடவினார். அவள் சம்மதிக்கவில்லை. கனகுவோடு கதைத்துக்கொண்டு இடைக்கிடை வெற்றிலைக்கடைக்காரனையும் பார்த்தாள். அவளைப் பார்த்தபடியே வெற்றிலைக்கடைக்காரன் பாக்கைச் சீவிக்கொண்டிருந்தான்.

கஞ்சாக்கனகு எதற்காக சாப்பாடு கேட்டார்? அவர் உண்மையாகவே கடைச்சாப்பாடுதான் சாப்பிடுகிறாரா? அல்லது வீட்டில் இருந்து வருவதில்லையா? அவரில் அவள் சந்தேகம் கொள்வது வெற்றிலைக்கடைகாரன் சொன்ன கதைகளாலும் கனகு அவள்மேல் விரிக்கும் பார்வைகளாலுமே. கனகு பிறழ்வில்லாதவர் என்றால் வெற்றிலைக்கடைக்காரன், தான் கடைக்குப் போகும் வேளைகளில் தன்னையேன் வைத்தகண் வெட்டாது பார்க்கிறான்? வெற்றிலைக்கடைக்காரன் சொன்ன கதைகளை நம்பாமல் இருக்கவும் அவளால் முடியவில்லை. வெற்றிலைக் கடைக்காரனைப் பாராது வாங்கிய வடையை பேப்பரால் சுற்றிக்கொண்டு குழப்பத்தோடு திரும்ப,

"அம்மா..."

அவள் குரல் வந்த திசைக்குத் திரும்பினாள். உத்தமன் சிரித்துக்கொண்டு நின்றான்.

*(வருவாள்)*




Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சொற்சிலம்பம் போட்டி

84

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | | 4 | ■ | 5 | 6 |
| 7 | | | ■ | 8 | 9 | | |
| | ■ | 10 | | | | | ■ |
| 11 | 12 | | ■ | 13 | | ■ | 14 |
| ■ | | ■ | 15 | | ■ | 16 | |
| 17 | | 18 | | ■ | 19 | | |
| 20 | | | ■ | 21 | | ■ | |
| | ■ | 22 | | | | | |

அனுப்புபவர் பெயர்:.......................................

முழுமையான தபால் விலாசம்: ...........................

.......................................................

கையொப்பம்:.............................................

ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருகின்றமையால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

### இடமிருந்து வலம்

1. சீதையை மணக்க இராமன் முறித்த வில் 5. பெரியோர் தரும் வாழ்த்து 7.நஞ்சு 8. கோமாதாவைக் கொல்வதை இப்படிச் சொல்வர் 10. கனிதல் 11. புகழ், கீர்த்தி, பெருமைக்கு இப்படியும் ஒரு சொல் உண்டு. 13. சாப்பிடு 15. மூப்புக்கு முன்னறிவிப்பு செய்வது 16. துயில் கொள் 17. முகத்துக்கு நேரே செய்யும் உபசாரம் 19. களம், இடம், தளம் 20. அணி 21. போன்று 22. கருங்கல் (கடவுள்) சிலை.

### மேலிருந்து கீழ்

1. உயர்ந்த மிருகம் 2. ஒரு திசை 3. கணவன்- மனைவி 4. அபிமன்யுவின் தாய் 6. பிரேதம் தீமூட்ட அடுக்கியுள்ள விறகுக் கும்பி 9. பிதாவின் மகன் 12. இரப்பவன் 14. சமூகத்தில் தனி ஆளுக்கு அடுத்த தனி அலகு 15. நல்ல 16. நல்ல 16. சிலஅல்ல 17. மலையின் உச்சி 18. இல்லாள் 19. விடிய 21. இந்தியாவில் கொண்டாடப்படும் ஒரு பண்டிகை.

### சொற்சிலம்பம் போட்டி 83 க்கான விடைகள்

**இடமிருந்து வலம்**

1.முகவரி 4. உதவி 7. கடுகு 8.கரண்டி 9. தாம் 10. கலம் 11. புதல்வி 13. கள் 15. குவி 16. போராளி 17. திகதி 19. சலம் 20. பரு 21. சக 22. புவி 24. திமிங்கிலம்

**மேலிருந்து கீழ்**

1. முகதா 2. கடும்பு 3. வகு 4. உரம் 5. தண் 6. விடிவெள்ளி 8. கலவி 10. கல்வி 12. தகுதி 13. கராம்பு 14. அதிபதி 16. போல 18. கருமி 19. சகல 21.சகி 23. விடை

**சொற்சிலம்பம் போட்டி இல.84**

பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்

**உதயன் சஞ்சீவி**

**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

என்னும் முகவரிக்கு

**27.05.2022 இற்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக** தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

## போட்டி விதிகள்

- வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
- ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்.
- சஞ்சீவியில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
- போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
- வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே

ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/=

பரிசாக வழங்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டியில் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.

### போட்டி இலக்கம் 83 இல் வெற்றி பெற்றோர் விவரம்

**1 ஆம் பரிசு**
**கபாஸ்கர் கயலவன்**
ஆவரங்கால் மேற்கு,
புத்தூர்.

**2 ஆம் பரிசு**
**அபி குலமாலிகா**
வட்டு கிழக்கு,
சித்தன்கேணி

**3 ஆம் பரிசு**
**சுகன்யா வினோதன்**
உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.

**4 ஆம் பரிசு**
**பொன்.கனகரத்தினம்**
சங்கரப்பிள்ளை வீதி,
ஆனைக்கோட்டை

**5 ஆம் பரிசு**
**[illegible]**
[illegible] வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்

# ஆடுகளில் ஏற்படும் வெப்ப அயர்ச்சியும் தீர்வுகளும்





Dr.எஸ்.கிருபானந்தகுமாரன்
கால்நடை மருத்துவர்
செட்டிகுளம், வவுனியா

ஆடுகள் பொதுவாக கடும் வெப்பத்தைத் தாங்கும் வல்லமை பெற்றவை. எனினும் அதிகரித்த வெப்பம் மற்றும் அண்மைக் காலத்தில் தோன்றியுள்ள நிச்சயமற்ற காலநிலை மாற்றம் ஆகியன அவற்றையும் பாதிக்கத் தொடங்கியுள்ளன.

பொதுவாக ஆடுகள் போன்ற கால்நடைகளின் உற்பத்தித் திறன் அவற்றின் மரபியல் , சுற்றுச் சூழல் மற்றும் பராமரிப்பு முறைகளால் தீர்மானிக்கப்படுகிறது. இவற்றில் ஏதாவது ஒரு காரணி குழப்பமடையும் போது உற்பத்தித் திறன் பாதிக்கபடுகிறது. தீவன முகாமைத்துவம் , குடி நீர் முகாமைத்துவம், கொட்டகை / பட்டி பராமரிப்பு மற்றும் இனப்பெருக்க முகாமைத்துவம் போன்றவற்றைச் சரியாகக் கையாள்வதன் மூலம் வறட்சிக் காலத்திலும் ஆடுகள் பாதிப்படையாமல் பார்க்கலாம். இலங்கையில் ஆடு வளர்ப்பு மிகவும் பிரபலமான துறையாக வளர்ந்து வரும் இன்றைய நிலையில் இந்தப் பராமரிப்பு முறைகள் மிக அவசியமானவை.

## மேய்ச்சல் முகாமைத்துவம்

பொதுவாக ஆடுகள் தரிசு நிலங்களாக உள்ள மலை அடிவாரங்கள் , குளக்கரைகள் மற்றும் சிறு காடுகளை அண்மித்து காணப்படும் முட்புதர்களில் தமது உணவுத் தேவையை பூர்த்தி செய்கின்றன. மேற்படி மேய்ச்சல் நிலங்கள் அண்மைக் காலத்தில் சுருங்கி வருவதாலும் அவை முறையாகப் பராமரிக்கப்படாததாலும் ஆடுகளுக்குரிய முழு உணவுத் தேவையும் பூர்த்தி செய்யப்படுவதில்லை. மேலும் வறட்சிக் காலத்தில் மேற்படி குறைவான மேய்ச்சல் பகுதிகளில் அதிக எண்ணிக்கையான ஆடுகள் மேய்வதால் அவற்றுக்கு சரியான உணவு கிடைப்பதில்லை. இவை தொடர்ச்சியாக ஒரே இடத்தில் மேய்ச்சலில் ஈடுபடும் போது இருக்கும் புற்கள் மென்மேலும் குறைவடைகின்றன.


எனவே வினைத்திறனான முறையில் மேய்ச்சல் பகுதிகளை பயன்படுத்தலாம். அதாவது ஒரே இடத்தில் தொடர்ச்சியாக மேய்ச்சலில் ஈடுபடுத்தாமல் சுழற்சி முறையில் மாறி மாறி ஆடுகளை வேறு இடங்களில் ஈடுபடுத்தலாம். இல்லாது போனால் அதிக மேய்ச்சல் பகுதிகள் மற்றும் சுத்தமான தண்ணீர் கிடைக்கும் இடத்துக்கு இடம்பெயரலாம்.

மேலும் கோடை காலத்தில் ஏற்படும் அதிக வெப்ப அயர்ச்சி காரணமாக ஆடுகளின் சகல தொழிற்பாடுகளும் மாற்றமடைகின்றன. எனவே முடிந்த வரை அவற்றினை வெப்பத்தில் இருந்து பாதுகாக்க முயற்சி செய்ய வேண்டும். ஆடுகளின் வழமையான மேய்ச்சல் நேரத்தையும் மாற்றுதல் வேண்டும்.

அதாவது வெப்பம் குறைந்த காலை 6- 10 மணி வரையிலும் மாலை 3-6 மணி வரையிலும் உள்ள காலப்பகுதியில் தான் மேய்ச்சலுக்கு விட வேண்டும். மதிய வேளையை ஓய்வு நேரமாகக் கருதி பட்டிகளிலும் மர நிழல்களுக்குள்ளும் விட வேண்டும். பொதுவாகக் கடும் வெயில் நிலவும் மதிய நேரங்களில் ஆடுகள் நிழலை நாடுவதை அவதானிக்க முடியும்.

## குடிதண்ணீர் முகாமைத்துவம்

ஆடுகளைப் பொறுத்தவரை ஒரு நாளைக்கு 10-15 லீற்றர் குடிதண்ணீர் தேவை . எனவே சுத்தமான நீர் கோடைகாலத்தில் தொடர்ச்சியாக ஆடுகளுக்கு கிடைக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டும். அதிக வெப்பம் காரணமாக வெளியேறும் நீரினை விரைவாக ஈடு செய்ய வேண்டும். மேய்ந்துவிட்டு வரும் ஆடுகள் அதிக தாகத்துடன் காணப்படுவதால் கட்டாயம் அந்த நேரத்தில் நீரின் தேவை மிக அவசியம் . நீர்த்தொட்டி ஆவியாகாத வகையில் நிழலான இடத்தில் வைக்கப்பட வேண்டும். வறட்சிக் காலத்தில் நீர்நிலைகளில் மிகக் குறைந்த அளவிலே நீர் காணப்படும். அந்த நீர் பெரும்பாலும் இறந்த மீன் போன்ற நீர்வாழிகள், அவற்றின் கழிவுகள் காரணமாக மாசுபட்டு இருக்கும். அத்துடன் பல ஒட்டுண்ணிகளும் அவற்றின் இளம் பருவங்களும் அங்கு வகைதொகையின்றிக் காணப்படும். எனவே ஆடுகள் அந்த இடத்தில் நீரினை அருந்தும் போது நோய்வாய்ப்படுகின்றன. முடிந்தவரை கால்நடைகளை அந்த இடத்தில நீர் அருந்துவதை தவிர்த்து மனிதர்கள் அருந்துவது போல சுத்தமான நீரை வழங்க வேண்டும்.



## தீவன முகாமைத்துவம்

ஆடுகளுக்கு மேய்ச்சல் புற்களை தவிர ஏனைய பசுந்தீவனங்களையும் வழங்க வேண்டும். பொதுவாக மழை காலங்களில் அதிகம் விளையும் பசும் புற்களில் இருந்து ஊறுகாய் புற்களை தயாரித்து வறட்சிக் காலத்தில் வழங்கலாம் . மண்ணில்லா புல் வளர்ப்பை [hydroponics] செய்து அவற்றையும் வழங்க முடியும். இலையுதிர் காலத்தில் கிடைக்கும் பலா, ஆல், இத்தி, அரசு போன்ற மரங்களின் இலைகளைச் சேகரித்து வறட்சிக் காலத்தில் வழங்கலாம்.கடலைக் கொடி, உளுத்தங் கொடி, வைக்கோல் போன்றவற்றையும் உலர் தீவனமாக சேகரித்து வறட்சிக் காலத்தில் கொடுக்கலாம். மேலும் தவிடு ,பிண்ணாக்கு போன்ற அடர் தீவனங்களை வழங்குவதன் மூலம் வறட்சிக் காலத்தில் புற்களில் குறையும் கனியுப்புச் சத்துகளை ஈடு செய்யலாம். எனினும் பல நாட்டு ரக ஆடுகள் அடர் தீவனம் உண்பதை விரும்புவதில்லை .

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இராகவன்

40

பஞ்சலிங்கம். இவர் வசந்தியக்காவுக்கு ஒண்டவிட்ட சகோதரம். வசந்தியக்காவின்ர தாய் சின்னம்மாப் பெரியம்மாவும் பஞ்சு மாமாவின்ர தாய் மீனம்மாக் குஞ்சியம்மாவும் கூடிப் பிறந்த சகோதரங்கள். அதால வசந்தியக்கா பஞ்சுமாமாவை 'பஞ்சண்ணா'எண்டுதான் கூப்பிடுவா.

பஞ்சுமாமா ஆக்கள் அப்ப வட்டக்கச்சியில இருந்தவை. பஞ்சு மாமாவுக்கு கமலா, விமலா எண்டு இரண்டு அக்காமாரும் றஞ்சி எண்டொரு தங்கச்சியுமிருந்தவை. விமலா அக்காவுக்கு ஒரு கால் கொஞ்சம் சூம்பிப் போய்ச் சாதுவாய்ப் பிரண்டிருக்கும். அதால அவா கொஞ்சஞ் கெந்திக் கெந்தித்தான் நடப்பா. றஞ்சிக்கு என்னைவிட நாலைஞ்சு வயது மூப்பு. றஞ்சி வட்டக்கச்சியால வந்தால் எனக்கு ஒரே கொண்டாட்டமாயிருக்கும். எனக்கு அப்ப விளையாட்டுத் தோழி றஞ்சிதான். றஞ்சி ,வசந்தியக்கா வீட்டில வந்து நிக்கேக்குள்ள இராசவள்ளிக் கிழங்குக் கலரில ஒரு முழுநீளச் சட்டை போட்டிருப்பா. அது றஞ்சிக்கு நல்ல எடுப்பாயும் வடிவாயுமிருக்கும். றஞ்சி நல்ல சிவப்பி. முகவெட்டான பிள்ளை. மற்றது புஸ்பா. புஸ்பாவின்ர முழுப்பெயர் 'புஸ்பாதேவி'. வசந்தியக்காவின்ர தாய் சின்னம்மாப் பெரியம்மாவின்ர கூடப் பிறந்த தம்பி பொன்னுமாமாவின்ர மகள்தான் இந்தப் புஸ்பாதேவி.

புஸ்பாதேவி கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியிலதான் படிச்சவா.1989 கலைப்பிரிவில ஏ.எல் சோதனையெடுத்து திறி 'ஏ'. 'பி'ரிசல்ற் வந்தது. ஆள் மரணக்காய். பிறகு கம்பஸ் போய் அங்கையும் சிறப்பாய்ச் செய்து மொழியியல் துறையில விரிவுரையாளராயிருந்தவா. ஒரு எஞ்ஜினியரத்தான் கல்யாணம் செய்தவா. தலைப் பிரசவத்தில குருதிப்பெருக்கு ஏற்பட்டு அகால மரணமடைஞ்சிட்டா. எனக்குச் சின்னனில விளையாட வரேக்குள்ள றஞ்சியைத் தான் நல்லாப்பிடிக்கும். புஸ்பாவைப் பெரிசாப் பிடிக்காது. றஞ்சியும் என்னில நல்லவாரப்பாடு.

'நல்லா இரண்டு கையையும் முன்னும் பின்னும் வீசி நிமிர்ந்து நடபாப்பம் ' எண்டு உறுக்கிப் போட்டு, தான் நடந்து காட்டுவாள். பிறகு அதே மாதிரி என்னை நடக்கச் சொல்லுவாள். நான் ஏதும் பிழையா நடந்தால் உடன எனக்கு அடிப்பாள்.

ஒருக்கா, அடிச்சுத் தொட்டு விளையாடேக்க புஸ்பாவின்ர அஞ்சு விரலும் என்ர முதுகில பதிஞ்சிட்டுது. இதைப் பாத்தவுடன ரஞ்சிக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்திட்டுது. "என்னத்துக்கு அவனுக்கு அடிச்சனி?" எண்டு புஸ்பாவோட சண்டைக்குப் போட்டாள். புஸ்பாவுமென்ன லேசுப்பட்ட ஆளே? "அதைக் கேக்க நீ யாரடி?" எண்டுறஞ்சிக்கு அடிக்கப்போனாள். "அவனுக்கு எல்லாமே நான் தானடி. நான்தான்ரி கேப்பன்" எண்டு றஞ்சியும் புஸ்பாவுக்கு முன்னால போய் நிண்டாள். "அப்ப நீ அவனுக்கென்ன பெஞ்சாதியோ?" எண்டு புஸ்பா கேட்டாள். "ம்... அப்படித்தான் எண்டு வைச்சுக்கொள்ளன்" எண்டு றஞ்சியும் சளைக்காமல் சொன்னாள். அதைக்கேட்டவுடன எனக்குச் சரியான வெக்கமாய்ப் போச்சு.

> எனக்குச் சின்னனில விளையாட வரேக்குள்ள றஞ்சியைத் தான் நல்லாப்பிடிக்கும். புஸ்பாவைப் பெரிசாப் பிடிக்காது. றஞ்சியும் என்னில நல்லவாரப் பாடு. நல்லா இரண்டு கையையும் முன்னும் பின்னும் வீசி நிமிர்ந்து நடபாப்பம் எண்டு உறுக்கிப் போட்டு, தான் நடந்து காட்டுவாள்.

(தொடரும்)

1505–1948 வரை

ந.பரமேஸ்வரன்

# யாழ்ப்பாண வரலாறு



**1876 பெப்ரவரி 09**

கத்தோலிக்க பாதுகாவலன் பத்திரிகை ஆரம்பம். பிரெஞ்சு அரசாங்கம் அன்பளிப்புச் செய்த அச்சியந்திரத்தின் உதவியுடன் கத்தோலிக்க பாதுகாவலன் என்ற பெயரில் கத்தோலிக்க திருச்சபை பத்திரிகை ஒன்றை வெளியிட்டது. இந்தப்பத்திரிகை ஆரம்பத்தில் இரு மொழிப் பத்திரிகையாகவும் (bylingual) (தமிழில், ஆங்கிலத்திலும்) பின்னர் தமிழிலும் தனியாகவும், ஆங்கிலத்தில் தனியாகவும் (தனித்தனி பத்திரிகைகளாக) வெளி வந்தது.

**1876 ஒக்ரோபர் 26**

பிரித்தானிய அரண்மனையின் இலங்கைக்கான பொறுப்பாளரினால் (Buckingham Duke) இலங்கையையும் இந்தியாவையும் புகையிரதம் மூலம் இணைக்கும் திட்டம் ஒன்று முன்வைக்கப்பட்டது.

**1876 டிசெம்பர்**

கட்டுகஸ்தோட்டை பால கட்டுமானப்பணிகளில் மேஜர் ஸ்கின்னருடன் இணைந்து பணியாற்றிய வேலுப்பிள்ளை முதலியார் காலமானார்.

**லோட்டன் ஸ்டூடியோ ஆரம்பம்**

மானிப்பாயைச்சேர்ந்த புகைப்படப்பிடிப்பாளர் லோட்டன் , ஸ்டூடியோ ஒன்றை யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலும் ஆரம்பித்தார். இவர் எடுத்த புகைப்படங்கள் இன்றும் கொழும்பு அருங்காட்சியகத்தில் உள்ளன. இலங்கையில் முதல் முதல் ஸ்டூடியோ ஒன்றை ஆரம்பித்தவர் என்ற பெருமையை ஹென்றி மார்ட்டின் பெற்றுள்ளார். இவரது ஸ்டூடியோ யாழ்ப்பாண சுங்கத் திணைக்கள வீதியில் அமைந்திருந்தது. இலங்கையின் ஆரம்பகால புகைப்படப்பிடிப்பாளர்கள் என்ற பெருமையை ஹென்றி மார்ட்டினும் லோட்டனும் பெற்றுக்கொள்கின்றனர். இருவரும் யாழ்ப்பாணத்தவர்கள் என்ற வகையில் யாழ்ப்பாணத்துக்கும் பெருமை சேர்த்துள்ளனர். மானிப்பாயில் லோட்டன் ஸ்டூடியோ அண்மைக் காலம் வரை இயங்கி வந்தது.அவர் வாழ்ந்த வீதி லோட்டனின் பெயரால் இப்போதும் லோட்டன் வீதி என அழைக்கப்படுகின்றது.

1876 இறுதி முதல் 1877 ஜூலை வரை வாந்திபேதியின் தாக்கம் யாழ்ப்பாணத்தின் பல்வேறு பகுதிகளிலும் ஏற்பட்டது. வாந்திபேதி ஆய்வுக் குழுவின் அறிக்கையின் பிரகாரம் 1875 ஆம் ஆண்டு 224 பேரும், 1876 ஆம் ஆண்டு 826 பேரும், 1877 ஆம் ஆண்டு 5841 பேருமாக, மொத்தம் 6,891 பேர் வாந்திபேதியால் இறந்தனர். பிரெஞ்சு அரசாங்கம் வாந்திபேதி நிவாரண நிதியாக 1175 பிராங்குகளை கத்தோலிக்க திருச்சபைக்கு அனுப்பியது.

**1877 ஒக்ரோபர் 26**

மட்டக்களப்பு-யாழ்ப்பாணம் விவசாயக்கம்பனிக்கு (JaffnaBatticola Agricultre Co) கந்தளாய்க்குள வயல் காணியில் 20,000 ஏக்கரை ஆளுநர் லொங்டன் (Longden) ஒதுக்கினார்.

**1877 ஒக்ரோபர் 27**

அட்டாவதானி ஏகாம்பரப்புலவர் காலமானார்.

**1877 டிசெம்பர்**

நெடுந்தீவில் வாந்திபேதியும் சின்னமுத்துவும் தாக்கியது . வறிய மக்கள் பெரும் துன்பப்பட்டனர். கத்தோலிக்க திருச்சபை 1454 ரூபா பெறுமதியான உதவிப்பொருள்களை அனுப்பி வைத்தது.

**1878 மார்ச் 05**

உடுப்பிட்டி சின்னத்தம்பிப்புலவர் காலமானார். 1830 ஆம் ஆண்டு பிறந்த சின்னத்தம்பிப்புலவர், தனது உறவினரான வீரகதியிடம் நில அளவையியல் (Land Survey)கற்று, நில அளவைச்சூத்திரம் என்ற பெயரில் ஒரு நூலை வெளியிட்டார். (தமிழில் Land Survey தொடர்பாக வெளிவந்த முதல் நூல் இதுவாகத்தானிருக்கும்.) அத்துடன் சோதிடச்சுருக்கம், வீரபத்திரர் சதகம், வீரபத்திரரூஞ்சல்,விக்கினேஸ்வரர் பதிகம், வீரமாகாளியம்மன் பதிகம்,சிவத்தோத்திரகீர்த்தனை,மதனவல்லி விலாசம், இராம விலாசம் எனும் நூல்களையும் இயற்றியுள்ளார்.

**1878 மே 05**

ஆம்ஸ்ட்ரோங் முதலியார் (Amsrong) யாழ்ப்பாண மாவட்ட பொறியியலாளராக இடமாற்றம் பெற்றார். இவரது பதவிக்காலத்திலேயே பொன்னாலைப்பாலம், காங்கேசன்துறை வாடி வீடு (தற்போது தல்செவன விடுதி) காங்கேசன்துறை வெளிச்ச வீடு, காங்கேசன்துறை இறங்குதுறை, பருத்தித்துறை இறங்குதுறை, மந்திகை மருத்துவமனை என்பன கட்டப்பட்டன. ஊர்காவற்றுறை கடற்கோட்டையும் இவரால் புனரமைக்கப்பட்டது.

**1879 மார்ச்**

மன்னாரில் முத்துக்குளிப்பு மூலம் 52,430 ஸ்டேர்லிங் பவுண் வருமானம் கிடைத்தது.

**1879 மே 04**

சட்டசபை பிரதிநிதியான சேர் முத்துக்குமாரசாமி காலமானார். சேர் முத்துக்குமாரசாமியின் மரணம் பற்றி ஒப்சேவர் (Observer) பத்திரிகை 'மூன்று கோடி திராவிடர்களுள் முதன்மையானவர்' என எழுதியது. பிரிட்டிஷ் நாடாளுமன்றப் பிரதிநிதியாக வருவதே அவரது நோக்கமாக இருந்தது எனவும் ஒப்சேவர் பத்திரிகை எழுதியது. (அந்தக்காலத்தில் தமிழர்களின் சனத்தொகை தமிழ் நாடு உட்பட, ஆக மூன்று கோடி தான் போலிருக்கிறது)

**1879 டிசெம்பர்**

ஆறுமுகநாவலர் காலமானார்.

**1880 ஜனவரி 28**

ஆளுநர் லொங்டன் பாரியார் சகிதம் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டார். அதுவரை யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த ஆளுநர்கள் எவரும் தமது பாரியாரை அழைத்து வரவில்லை,தனியாகவே வந்தனர்.

**1880 பெப்ரவரி 01**


யன்முத்து என்ற வர்த்தகர் யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித்துறை,காங்கேசன்துறை பிரதேசங்களுக்கு தபால் வண்டி (mail coach) சேவையை ஆரம்பித்தார். அந்தக்காலத்தில் குதிரை வண்டி மூலமே தபால்கள் எடுத்துச்செல்லப்பட்டன.

(வரலாறு நீளும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

○ மயூ





# ஒரு தாயின் சபதம்

**1991** ஆம் ஆண்டு மே 21ஆம் திகதி இரவு மணி 9.

தமிழகத்தின் போரூர் மற்றும் பூந்தமல்லியில் இரண்டு தேர்தல் பரப்புரைகளில் உரையாற்றிவிட்டு ஸ்ரீ பெரும்புதூரை நோக்கிப் பயணித்தார் இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி. இப்போது இரவு மணி 10.10. ஸ்ரீ பெரும்புதூரை வந்தடைந்த ராஜீவ் காந்தி , இந்திரா காந்தியின் சிலைக்கு மாலை அணிவித்துவிட்டு பரப்புரைக் கூட்டம் நடக்கவிருந்த மைதானத்தை நோக்கி நடந்தார்.

### இரவு 10.20 மணி.

லதா கண்ணன் என்பவரும் அவருடைய மகள் கோகிலாவும் நின்று கொண்டிருந்தனர். கோகிலா ராஜீவிடம் கவிதை ஒன்றைப் படித்துக் காட்டிக் கொண்டிருந்தார். சல்வார் கமீஸ் அணிந்திருந்த பெண்மணி ஒருவர் ராஜீவின் கழுத்தில் மாலை அணிவித்துவிட்டு கீழே குனிந்தார். அடுத்த நொடி மிகப் பெரிய வெடிச் சத்தம் கேட்டது. தற்கொலைத்தாக்குதலில் ராஜீவ் கொல்லப்பட்டார். ஒட்டு மொத்த இந்தியாவும் இந்தச் சம்பவத்தால் நிலைகுலைந்தது.

### பேரறிவாளன்

திருப்பத்தூர் மாவட்டம் ஜோலார்பேட்டையில் 1971ஆம் ஆண்டு ஜூலை மாதம் 30ஆம் திகதி அற்புதம் அம்மாளுக்கும் குயில்தாசனுக்கும் (ஞானசேகரன்) பிறந்தவர் பேரறிவாளன்.

பள்ளிக்கூடத்தில் பேரறிவாளன் சிறப்பாகவே படித்தார். பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் பள்ளிக்கூடத்திலேயே இரண்டாவது அதிக மதிப்பெண்களைப் பெற்ற மாணவராக இருந்தார் பேரறிவாளன். பத்தாம் வகுப்பை முடித்த பிறகு, மின்னணுவியல் மற்றும் தொடர்பியல் தொழிநுட்பப் பட்டயப் படிப்பில் சேர்ந்த பேரறிவாளன், அதை முடித்தார். இயல்பிலேயே பெரியாரிய சார்பை பெற்றிருந்த அவர், பட்டயப் படிப்பை முடித்த பிறகு, சென்னை பெரியார் திடலில் உள்ள விடுதலை நாளிதழ் அலுவலகத்தின் கணினிப் பிரிவில் பணியாற்றி வந்தார்.

### அதிர்ந்த இந்தியா

ராஜீவ் காந்தி கொலை இந்தியாவை அதிரச் செய்திருந்தது. இந்திய மத்தியப் புலனாய்வுத் துறையின் சிறப்பு புலனாய்வுப் பிரிவு இந்தச் சம்பவத்தை விசாரிக்க ஆரம்பித்தது. ராஜீவ் காந்தி கொலை வழக்கை விசாரிப்பதற்காக 'மல்லிகை' என்ற தனி அலுவலகம் அமைக்கப்பட்டு விசாரணைகள் தீவிரமாக்கப்பட்டன.

### விளையாடிய விதி

1991 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 11ஆம் திகதி இரவு பத்தரை மணியளவில் சென்னை வேப்பேரியில் உள்ள பெரியார் திடலில் பேரறிவாளன் கைது செய்யப்பட்டார். ராஜீவ்காந்தியை கொலைசெய்யப் பயன்படுத்தப்பட்ட வெடிகுண்டை இயக்குவதற்கான 9 வோல்ட் திறனுள்ள இரண்டு கோல்டன் பவர் பற்றரிகளை வாங்கிக் கொடுத்தார் என்பதே அவர் மீதான குற்றச்சாட்டு. அப்போது பேரறிவாளனுக்கு 19 வயது. கைது செய்யப்பட்ட அவர், இந்த வழக்கை விசாரிக்க அமைக்கப்பட்டிருந்த 'மல்லிகை' கட்டடத்துக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

பல ஆண்டுகள் நடந்த விசாரணையின் முடிவில், குற்றஞ்சாட்டப்பட்டிருந்த 26 பேருக்கும் 1998 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 28ஆம் திகதி தூக்குத் தண்டனை விதித்து சிறப்பு நீதிமன்றம் தீர்ப்பளித்தது. அதைஎதிர்த்து தண்டிக்கப்பட்டோர் தரப்பில் உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்யப்பட்டது. அதில், 1999 ஆம் ஆண்டு மே மாதம் 5ஆம் திகதி தீர்ப்பு வழங்கப்பட்டது. அந்தத் தீர்ப்பில் சிலர் விடுவிக்கப்பட, சிலருக்கு தூக்குத்தண்டனை ஆயுள் தண்டனையாக குறைக்கப்பட்டது. ஆனால் நளினி, சாந்தன், முருகன், பேரறிவாளன் ஆகிய நால்வருக்கு மட்டும் தூக்குத் தண்டனை உறுதிசெய்யப்பட்டது. 2000ஆம் ஆண்டு நளினியின் தூக்குத் தண்டனை ஆயுள்தண்டனையாக மாற்றப்பட்ட நிலையில், ஏனைய மூவரும் இந்தியக் குடியரசுத் தலைவருக்கு கருணை மனுக்களை அனுப்பினர். அந்த காலகட்டத்தில் குடியரசுத் தலைவர்களாக இருந்த கே.ஆர். நாராயணன், ஏ.பி.ஜே. அப்துல் கலாம் ஆகியோர் கருணை மனுக்கள் மீது எந்த முடிவையும் எடுக்கவில்லை. குடியரசுத் தலைவராக பிரதீபா பாட்டீல் வந்த பிறகு, இந்தக் கருணை மனுக்கள் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டன. இறுதியில் இந்த மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டன என்று 2011ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 12ஆம் திகதி அறிவிக்கப்பட்டது.

பேரறிவாளன், சாந்தன், முருகன் ஆகிய மூவரும் சென்னை உயர் நீதிமன்றத்தை நாடினர். சென்னை உயர் நீதிமன்றம் மூவரையும் தூக்கிலிடத் தடை விதித்தது. பின்னர் இந்த வழக்கு உச்ச நீதிமன்றத்துக்கு மாற்றப்பட்டது. 2014ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் இந்த வழக்கில் தீர்ப்பளித்த உச்ச நீதிமன்றம், பல ஆண்டு காலம் மூவரது கருணைமனுக்களும் எந்தக் காரணமுமின்றி நிலுவையில் இருந்ததால் பேரறிவாளன், சாந்தன், முருகன் ஆகியோரது தூக்குத் தண்டனையை இரத்துச் செய்தது.

2018ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 9ஆம் திகதி சாந்தன், முருகன், பேரறிவாளன், நளினி, ரவிச்சந்திரன், ராபர்ட் பயஸ், ஜெயக்குமார் ஆகிய 7 பேரையும் விடுவிக்க தமிழக அமைச்சரவை தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியது. ஆனால், ஆளுநர் பதிலேதும் தெரிவிக்காததால், இவர்கள் விடுவிக்கப்படவில்லை. 2021 ஆம் ஆண்டு தி.மு.க. அரசு பதவியேற்றதும் சிறையில் உள்ள 7 பேரையும் விடுதலை செய்ய ஆணையிட வேண்டும் என்று குடியரசுத் தலைவருக்கு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் கடிதம் எழுதினார். இந்தநிலையில் தன்னுடைய விடுதலை தாமதமாவதை சுட்டிக்காட்டி, உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார் பேரறிவாளன். ராஜீவ் காந்தி கொலைவழக்கில் தண்டிக்கப்பட்ட 7 பேரையும் விடுவிக்க தொடர்ச்சியாக போராட்டங்கள் நடந்தன, முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. சட்டத்தின் பல்வேறு அம்சங்களைப் பயன்படுத்தி தொடர்ச்சியாகப் போராடினார் பேரறிவாளன். இந்தப் போராட்டத்தின் பெரும்பகுதி, அவருடைய தாயார் அற்புதம்மாளால் நடத்தப்பட்டது.



### பறிக்கப்பட்ட வாழ்க்கை

பேரறிவாளனிடம் வாக்குமூலம் பெற்ற சி.பி.ஐயின் முன்னாள் அதிகாரி தியாகராஜன், ஓய்வுபெற்ற பின்னர் ஒரு ஆவணப்படத்துக்கு வழங்கிய பேட்டியில், அவரது வாக்கு மூலம் தவறாகப் பதிவுசெய்யப்பட்டது என்று கூறினார். மல்லிகையில் அடைக்கப்பட்ட பேரறிவாளன், அங்கு கடுமையாக துன்புறுத்தப்பட்டேன் என்று தனது "தூக்குக் கொட்டடியில் இருந்து ஒரு முறையீட்டு மடல்" நூலில் குறிப்பிடுகிறார். இங்கு நடந்த சித்திரவதை தாங்காமலேயே, விசாரணை அதிகாரிகள் அளித்த காகிதங்களில் தான் கையெழுத்திட்டேன் என்றும் தெரிவித்திருக்கிறார் பேரறிவாளன்.

## அற்புதம்மாள்

"நான் ஓர் அப்பாவிப் பையனின் தாய். எனது மகன் 28 வருடங்களுக்கு முன்பு என்னிடமிருந்து பறிக்கப்பட்டான். அப்போது அவனுக்கு 19 வயது. அன்று முதல் நான் அவன் பின்னால் ஓட ஆரம்பித்தேன். இன்னும் ஓடுகிறேன்..!" இது அற்புதம்மாள் தனது ருவிற்றர் பக்கத்தில் பதிவிட்டுள்ள அறிமுகம். அற்புதம்மாளின் ஓட்டத்துக்கு 31 ஆண்டுகளுக்குப் பிறகு ஓய்வு கிடைத்திருக்கிறது.

அற்புதம்மாளின் பயணம் பூக்களின் மீதானதல்ல. தோள்பட்டையில் ஒரு பை; களைத்துப்போன முகத்தில் ஒரு நம்பிக்கை; ரப்பர் செருப்பு தேய தன் மகனின் விடுதலைக்காக அவர் நடந்த நடைகள்... எனக் கடந்த 31 ஆண்டுகளாகப் பல அரசியல் தலைவர்கள், பல கோரிக்கைக் கடிதங்கள், பத்திரிகையாளர் சந்திப்புகள் என முட்களையே அவர் கடந்து வந்திருக்கிறார். அற்புதம்மாளின் ஓட்டத்துக்கு 31 ஆண்டுகளுக்குப் பிறகு ஓய்வு கிடைத்திருக்கிறது.



## தீர்ப்புத் தந்த வாழ்வு

31 ஆண்டுகாலமாக நடந்து வந்த சட்டப் போராட்டத்தின் முடிவில் பேரறிவாளன் இப்போது விடுதலை செய்யப்பட்டுவிட்டார். "என் விடுதலையைத் தமிழ் மக்களும், தமிழர்களும் நினைத்தார்கள், அன்பு செலுத்தினார்கள், ஆதரவு தெரிவித்தார்கள், தங்களது வீட்டில் ஒரு பிள்ளையாக நினைத்தார்கள். 31 ஆண்டுக்காலம் எங்கள் அம்மாவின் தியாகம், போராட்டம், ஆரம்ப காலங்களில் அவர் வெளியில் சந்தித்த அவமானங்கள், புறக்கணிப்புகளையெல்லாம் கடந்து இந்தத் தீர்ப்பு கிடைத்திருக்கிறது. எங்கள் பக்கம் இருந்த உண்மை, நியாயம்தான் இதற்கான வலிமையைக் கொடுத்ததாக நம்புகிறேன்." என்று விடுதலையின் பின்னர் கூறுகிறார் பேரறிவாளன். ஒரு தாயின் மன உறுதியும், தவ வாழ்வுமே இதற்குக் காரணம் என்பதை மறுக்கவே முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிந்தும் அறியாமலும்



○ சுழியன்

## கோத்தா– ரணில் 'டீல்'!



ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச எதிர்வரும் ஓகஸ்ட் மாதத்துக்குள் பதவியிலிருந்து வெளியேறிவிடுவாரென தெற்கு அரசியல் களத்தில் அரசல் புரசலாக கதை அடிபடுகின்றது.

அதன்பிறகு ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்பாரெனவும், அந்த இணக்கப்பாட்டின் அடிப்படையிலேயே ரணில் விக்கிரமசிங்க பிரதமர் பதவியை ஏற்றுள்ளாரெனவும் தெரியவருகின்றது. மஹிந்த ராஜபக்சவைப்போல அல்லாமல், கௌரவமானதொரு வெளியேற்றத்தை கோத்தாபய ராஜபக்ச விரும்புவதாகவும், அதனால்தான் காலஅவகாசம் கோரியுள்ளார் எனவும் தகவல் வெளியாகியுள்ளது. இறுதி நேரத்தில் கோத்தா மனம் மாறிவிடக்கூடாது என்பதாலேயே, 'கோத்தாகோகம' போராட்டத்தை தொடர வைப்பதற்கான ஏற்பாடுகளை ரணில் விக்கிரமசிங்க செய்துகொடுத்துள்ளாரெனவும் கூறப்படுகின்றது.



## போனுக்குள் பூகம்பம்


சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்திக்குள் உட்கட்சி மோதல் உக்கிரமடைய ஆரம்பித்துள்ளது.

பிரதமர் பதவியை சஜித் பிரேமதாஸ ஏற்காததால் அதிருப்தியடைந்த ஹரின் பெர்னாண்டோ, மனுஷ நாணயக்கார ஆகியோர் ரணிலோடு ஒட்டிக்கொண்டு அமைச்சுப் பதவிகளையும் பெற்றுவிட்டனர். வடிவேல் சுரேஷும் கட்சி தாவப்போகின்றார் என்று கூறப்படுகின்றது.

இந்தநிலையில், கருஜயசூரியவை தேசியப்பட்டியல் எம்.பியாக்கி, அவருக்கு பிரதமர் பதவியை வழங்கலாம் என கபீர் ஹாசீம் உள்ளிட்ட சில உறுப்பினர்கள் யோசனை முன்வைத்துள்ளனர். இதற்காக தனது தேசியப்பட்டியல் எம்.பி. பதவியை விட்டுக்கெடுக்க ,மயந்த திஸாநாயக்க தயாராகவே இருந்துள்ளார். இந்த முயற்சி வெற்றியளிக்காததால் கபீர் ஹாசீம் உள்ளிட்ட தரப்பும் மனமுடைந்த நிலையிலேயே காணப்படுகின்றது.

சரத்பொன்சேகா, ராஜித சேனாரத்ன போன்றவர்கள் சஜித்தை தவறாக வழிநடத்துகின்றனர் என மேலும் சில உறுப்பினர்கள், தமது சகாக்களிடம் புழுங்கியுள்ளனராம்.

## காசுக்கே பயணம்



பிரதமர் பதவியைத் துறந்து, அலரிமாளிகையில் இருந்து வெளியேறி, பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் திருகோணமலை கடற்படை முகாமில் தங்கியிருந்த மஹிந்த ராஜபக்ச கடந்த 17 ஆம் திகதி கொழும்பு வந்தார். திருமலையிலிருந்து இரத்மலானைக்கு, இலங்கை விமானப்படைக்கு உரித்தான வை 12 ரக விமானத்திலேயே 12 பேர் சகிதம் அவர் வந்துள்ளார். இரு வழிப் போக்குவரத்துக்கான பயணக்கட்டணமாக சுமார் 8 லட்சம் ரூபாவை அவர் செலுத்தியுள்ளார். ஜனாதிபதி, பிரதமர், முப்படைத் தளதிபதிகள் மற்றும் பொலிஸ்மா அதிபர் ஆகியோர் விமானப்படை விமானங்களை, அவசர தேவையின் நிமித்தம் இலவசமாகப் பயன்படுத்தலாம். முன்னாள் ஜனாதிபதி, முன்னாள் பிரதமர் என்போருக்கு அந்தச் சலுகை இல்லையாம். இதனாலேயே கட்டணம் செலுத்தி, மஹிந்த ராஜபக்ச விமான சேவையைப் பெற்றுக்கொண்டுள்ளாராம்.

## ஆசை..ஆசை...ஆசை!

மஹிந்த ராஜபக்சமீது அவரின் அண்ணன் சமல் ராஜபக்ச உட்பட உறவினர்கள் சிலர் கடும் அதிருப்தியில் இருக்கின்றனர் என அறியமுடிகின்றது.

கௌரவமாகப் பதவி விலகாமல், இழுத்தடிப்பு செய்து, ராஜபக்ச குடும்பத்துக்கு மாறாத கறையை ஏற்படுத்திவிட்டே மஹிந்த பதவி விலகினார் என அவர்கள் தங்கள் உள்ளக்குமுறல்களை வெளிப்படுத்தியுள்ளனர். ஜனாதிபதி பதவியில் இரு தடவைகள் இருந்த பின்னர் மஹிந்த பதவி விலகாமல், அரசியலில் நீடித்ததால் அவரின் 50 வருடகால அரசியலே நாசமாகிவிட்டதாகவும் கவலை வெளியிட்டிருந்தார் சமல் ராஜபக்ச. எனினும், தற்போதைய சூழ்நிலையில்கூட அரசியலுக்கு விடைகொடுக்க மஹிந்த ராஜபக்ச தயாரில்லை என்றே கூறப்படுகின்றது. ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கு தலைமைத்துவத்தை அவர் வழங்குவார் எனக் கூறிவருகிறாராம்.

---

○ ஆர்.பிரகாஷ்

# சர்ச்சைகளின் மன்னன் சைமண்ட்ஸ்!



கிரிக்கெட் உலகம் பெரியது. ஆனால், அந்தக் கிரிக்கெட் உலகத்தை விடவும் பெரியன அன்ட்ரூ சைமண்ட்ஸின் சர்ச்சைகள். சர்ச்சை உலகின் முடிசூடா மன்னனாக இருந்த சைமண்ட்ஸ் தனது 46 ஆவது வயதில் கார் விபத்தொன்றில் இந்தமாதம் 14 ஆம் திகதி அகால மரணமடைந்துள்ளார்.

### போதை மன்னன்

ஆஸ்திரேலிய அணியின் தவிர்க்க முடியாத வீரராக உருவெடுத்திருந்த சைமண்ட்ஸ் அநேகமான நாள்களை போதையிலேயே கழித்திருந்தார். இவ்வளவு ஏன், ஆட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போதே சக வீரர்களுக்கும் அணித்தலைவர் பொண்டிங்குக்கும் டிமிக்கி கொடுத்துவிட்டு ஒரு 'கட்டிங்' போட்டுக்கொள்வது சைமண்ட்ஸுக்குக் கைவந்த கலை. இதனால் அவர் வாங்கிக்குவித்த தடைகள் ஏராளம். ஆனால், 1999ஆம் ஆண்டின் பிற்பகுதியில் இருந்து அடுத்த ஒரு தசாப்தத்துக்கு ஆஸ்திரேலிய மத்திய வரிசை சைமண்ட்ஸையே சார்ந்திருந்ததால், அவருக்கு ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபையால் வழங்கப்பட்ட தண்டனைகள் மிகச்சிறியனவாகவும் ஐ.சி.சி.க்கான கண்துடைப்பாகவும்தான் அமைந்திருந்தன.


வெளிநாட்டுச் சுற்றுப்பயணத்துக்கு ஆஸ்திரேலிய அணி புறப்படும்போது சைமண்ட்ஸ் போதையில் இருக்கக்கூடாது என்பதைக் கண்காணிப்பதற்காகவே ஓரிரு அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர். அவ்வளவுதூரம் சைமண்ட்ஸ் போதைக்கு அடிமையாகி இருந்தார்.

### ஏன் இப்படி?

சைமண்ட்ஸ் ஏன் இவ்வளவுதூரம் போதைக்கு அடிமையானார்? அவருக்கு என்னதான் குறை? என்ற கேள்விகள் எமக்குள் எழலாம். உண்மையில் இந்தக் கேள்விகளுக்கான விடைகள்தான் போதையாகவும் சர்ச்சையாகவும் சைமண்ட்ஸைச் [illegible]திருக்கின்றன.

தன் பெற்றோர் யாரென அறியாத ஒருவர்தான் சைமண்ட்ஸ். ஆனால், அவர் ஒரு பழங்குடி இனத்தவர் என்கின்றது மரபணு. குழந்தையாக இருக்கும்போது தத்தெடுத்து வளர்க்கப்பட்ட சைமண்ட்ஸ், தான் இறக்கும் இறுதி நொடிவரையில் தன் பெற்றோர் யார்? என்பதைக் கண்டுபிடிக்கவேயில்லை.

இந்தத் தேடுதல்தான் அவரை போதைக்குள் தள்ளியது. ஆஸ்திரேலிய வீரர்கள் சைமண்ட்ஸின் மீது சகிப்புத் தன்மையைக் கொண்டிருக்கவும் அப்போதைய ஆஸ்திரேலிய அணித்தலைவர் பொண்டிங் சைமண்ட்ஸுக்கு ஒரு பாதுகாப்புக் கேடயமாகத் திகழவும் அவரின் பெற்றோரற்ற பின்னணிதான் முக்கியமான காரணம்.



### நிஜ வீரன்

விளையாட்டில் வீரம் காட்டும் பலரும் இயல்பில் நெருக்கடிகளைக் கண்டால் பயந்து ஒதுங்கிவிடுவர். இதிலிருந்துதான் அதிகம் வேறுபடுகின்றார் 'றோய்' எனச் செல்லமாக அழைக்கப்படும் சைமண்ட்ஸ். மைதானத்துக்குள் போலவே மைதானத்துக்கு வெளியிலும் அவர் ஒரு நாயகன்.

பழங்குடி இனமென்றால் கிரிக்கெட் விளையாடக் கூடாதா என்ற கேள்வியை தன் துடுப்பு மட்டையால் தொடர்ந்து அவர் கேட்டுக்கொண்டே இருந்தார். ஆஸ்திரேலியா போன்ற நிறவெறி அதிகமுள்ள நாட்டில் பழங்குடி வீரரொருவர் அணிக்குள் தவிர்க்க முடியாத சக்தியாக இருப்பதே பெரிய விடயம். அதிலும் இத்தனை சர்ச்சைக்குப் பின்னரும் சைமண்ட்ஸால் தொடர்ந்து நிலைக்க முடிந்ததென்றால் அதிலிருந்து அவருடைய திறைமை புலப்படுகின்றதல்லவா?

பழங்குடிகளின் கலாசாரத்தை பிரதிபலிக்கும் தலைமுடியை சைமண்ஸிடம் இருந்து அகற்றிவிடுவதற்குக்கூட எத்தனையோ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால், இம்மியும் விட்டுக்கொடுக்காது தன்னை, தன் கலாசாரத்தை நிலைநிறுத்தியிருந்தார் றோய். மைதானத்துக்குள் எதிரணி வீரர்களுடன் மோதலில் ஈடுபட்டதாகட்டும், சர்ச்சையாளர்களை எதிர்கொண்டதாகட்டும், ஊடகங்களை எதிர்கொண்டதாகட்டும் அனைத்திலும் சைமண்ட்ஸ் தனித்துவம்.

ஆனால், அவர் தேடிக்கொண்டே இருந்த இரு கேள்விகளுக்கான பதில்கள் உயிர் பிரியும் நேரத்திலும் அவரின் மனக்கண்முன் தோன்றியிருக்கும். 1.சைமன்ஸின் பெற்றோர் யார்? 2.அவர்கள் ஏன் சைமன்ஸைக் கைவிட்டனர்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org